Annual Subscription Rs. 6 16th May 1937. Price 2 As.

# சுதேசமித்திரன்

Vol. 8 வாரப்பதிப்பு No 15

## THE SWADESAMITRAN ILLUSTRATED WEEKLY



நாஸிக்கிலுள்ள ஸ்ரீராமர் கோவில்.

எல்லாவற்றிற்கும்
பின்னால் தோன்றியது
சகல
வலி
நிவாரணி
எல்லாவற்றிற்கும்
முன்னால் நிற்பது







அடைவதற்கு இயற்கையான

விருப்பம்

வுட்வர்ட்ஸ்

கிரைப்வாடர்

குழந்தைக்கு

ஆரோக்கியத்தைத் தரும்

# WOODWARD'S
# GRIPE WATER

W. WOODWARD LTD. LONDON. ENGLAND



மலரும் மங்கையும்



டோகியோவில் நடைபெறும் சர்வதேசக் கல்வி மகாநாட்டிற்குச் செல்லும் இந்திய ஸ்திரீகள்.

சரித்திரப்பகுதி

# வழிபடும் கடவுள்

(திநாசு)

எண்டிசையும் புகழ் பரவ மகோந்நத ஸ்திதியில் வாழ்ந்தவர் புகழ் மங்கி, கண்டோரும் அறிந்துகொள்ள முடியாத நிலையில் மறைந்து வாழ்வதும், முன்பின் அறியாத ஒருவர் திடீரென்று கிளம்பிப் புகழுடன் வாழ்வதும் மானிடர்களுக்குள் சகஜமாகக் காணப்படுகின்றது. இவ்விதமான நிலைமை தேவர்களுக்கும் நேரிடுகின்றது. வழிபடுவனவாகவுள்ள தெய்வ மூர்த்தங்களுள் சில ஒரு காலத்தில் நன்கு பிரபலமாக இருந்து பிறகு மறைந்து விடுகின்றன. அதேபோல முற்காலத்தில் கேட்கப்படாத புதிய திருமேனிகள் பிற்காலத்தில் தோன்றிக் கொண்டாடப்பட்டு வருகின்றன.

"பழயன கழிதலும் புதியன புகுதலும் வழுவல
கால வகையினானே"

என்று பெரியோர் கூறுவது முற்றிலும் பொருத்தமாகக் காணப்படுகின்றது.

## பழயன கழிதல்

வேதகாலத்தில் சூரியன், அக்நி, வருணன் முதலியோர்கள் பெரிதும் வணங்கப்பட்டு வந்தார்கள். ஆனால் இப்பொழுதோ அவர்கள் பரிவார தேவதைகளாகக் கருதப்படுகிறார்கள். சூரியனுக்குத் தென்னாட்டில் ஒரு கோயிலும், வடநாட்டில் ஒரு கோயிலும் உள்ளதைத் தவிர, அவர்களுக்குத் தனிக்கோயில்களே கிடையாது. தமிழ்நாட்டில் உள்ள சூரியன் கோயில், தஞ்சை ஜில்லாவில் சூரியனார் கோயில் என்னும் ஊரில் இருக்கின்றது.

பழமையானவை பல்லவ அரசர் காலத்தில் அமைக்கப்பட்டனவேயாகும். அவற்றுள் காணப்படும் பெண் தெய்வங்கள், லக்ஷ்மி, துர்க்கை, ஜ்யேஷ்டாதேவி ஆகிய மூவருமே. முதலில் கூறப்பட்ட இருவரும் இன்றைக்கும் வழிபடும் தெய்வங்களாக விளங்குகிறார்கள். ஜ்யேஷ்டாதேவியோ மறைந்துவிட்டாள். போதாயன க்ருஹ்ய ஸூத்ரத்தில் ஜ்யேஷ்டா தேவியைப் பூஜைசெய்யும் விதிகள் விரிவாகக் கூறப்பட்டிருக்கின்றன. அன்றி,

"நாட்டினான் தெய்வம் எங்கும்
நல்லதோரருள் தன்னாலே
காட்டினான் திருவரங்கம்
உய்பவர்க்கு உய்யும் வண்ணம்
கேட்டிரே நம்பிமீர்காள்
கெருடவாகனனும் நிற்க
சேட்டை தன்மடியகத்துச்
செல்வம் பார்த்திருக்கின்றீரே"

(திருமாலை)

அதாவது தனிப்பெருந் தெய்வமான நாராயணனை விடுத்து ஜ்யேஷ்டாதேவியை வழிபடுகின்றீர்களே என்று வைஷ்ணவ அடியாரான தொண்டரடிப் பொடியார் இரங்குவதால், முற்காலத்தில் அவளைப் பெரும்பான்மையோர் வழிபட்டு வந்தார் என்பது தெரியவரும். ஆனால் இப்பொழுதோ மூக்கள் அவளை அக்காள், மூ(த்த) தேவி என்று அழைத்து இழிவு செய்வதுடன், தரித்திரத்துக்கு அதி தேவதையாகவும் கருதுகிறார்கள். வலதுபுறம் ரிஷப முகத்தை இடது புறம் அழகுள்ள ஒரு பெண்ணையும் கொண்டு நடுவில் வீற்றிருக்கும் ஜ்யேஷ்டா தேவியின் விக்கிரகம் பல கோயில்களில் பிராகாரங்களிலோ வேறு மூலைகளிலோ பிடுங்கி எறியப்பட்டுக் கிடப்பதை நாம் காணலாம். அன்றி எங்காவது ஸ்தாபனம் செய்யப்பட்டது அப்படியே விடப்பட்டிருந்தாலும், அதற்குப் பூஜை முதலியவை சரிவர நடைபெறா. இங்ஙனம் ஜ்யேஷ்டா தேவி மறைந்தது தமிழ் நாட்டில் மட்டுமல்ல. வட நாட்டிலேயும் அவள் இப்பொழுது இழிவு செய்யப்பட்டு வருகிறாள்.

பழைய காலத்துக் கோயில்களில் வராஹம், நாஸிம்ஹம் ஆகிய விஷ்ணுவின் அவதார உருவங்களைக் காணலாம். நரஸிம்ம விக்கிரகத்தை விஷ்ணு கோயில்களில் மட்டுமல்லாமல் சிவன் கோயில்களிலும் காணலாம். பழைய சிவன் கோயில்களில் கர்ப்பக் கிருகத்துக்கு மேற் புறத்தில் மாடத்திலோ விமானத்திலோ அமைக்கப்பட்டிருக்கும். பல்லவ சாளுக்கிய அரசர்கள் காலத்தில் அந்த மூர்த்தங்களுக்குத் தனிக் கோயில்களும் அமைக்கப்பட்டன. அவித்யை, அஞ்ஞானம் ஆகியவை நசித்துப் பரம்பொருள் அடைந்த வெற்றியை அந்த அவதாரங்கள் குறிக்கின்றனவென்றும், அவர்களைப் பூஜித்தால், பிரம்மஞானத்தை அடையலாம் என்றும் மக்கள் கருதிவந்தார்கள். ஆனால் இக்காலத்திலோ அந்த மூர்த்தங்களுக்குப் பெருமை போய்விட்டது. நரஸிம்மம் உக்கிர மூர்த்தியானபடியால், அவரைச் சரியாக வழிபடாவிட்டால், கெடுதல் சம்பவிக்கும் என்று எண்ணி, அவரைப் பூஜிப்பதை நிறுத்திவிட்டார்கள்.

முருகக் கடவுள் தொன்று தொட்டே தமிழ் நாட்டின் தனித் தெய்வமாக விளங்கி வருகிறார். மிகச் சிறிய ஊராக இருந்தாலும் அங்கு அவருடைய ஆலயம் ஒன்று இருக்கும். தமிழ் நாட்டில் உள்ள ஹிந்துக்களில் அநேகமாக எல்லோரும் கார்த்திகை விரதத்தை அநுஷ்டித்துவருகிறார்கள். ஆனால் வடநாட்டிலோ, பழையகாலத்துக் கோயில்களில் அவருடைய விக்கிரகம் காணப்பட்டாலும், இப்பொழுது ஒருவரும் அவரை வழிபடுவது கிடையாது. மத்திய இந்தியாவில், ஹிந்து ஸ்மங்கலிகள் ஸுப்ரஹ்மண்ணிய ஆலயத்திற்கே போகமாட்டார்களாம்.

இங்ஙனம் நாடு முழுவதிலுமோ அல்லது சில பகுதிகளிலோ பிராபல்யம் இழந்து மறைந்துபோன தெய்வ மூர்த்திகள் பல உள.

## புதியன புகுதல்

இதேபோலப் புதிய திருமேனிகள் அமைக்கப் பெறுவதையும் காண்கிறோம். அங்ஙனம் ஏற்படுவதற்கு மூன்று முக்கியக் காரணங்களைக் கூறலாம்.

அடியார்களையும் ஆசாரியர்களையும் அவதார புருஷர்களாகக் கருதி அவர்களை வழிபட ஆரம்பித்தது ஒரு காரணமாகும். அப்படிப்பட்ட உருவங்கள் அந்தந்தப் பகுதிகளிலே தான் பிரபலமாக இருக்கும். தென்னாட்டிலே சிவன்கோயில்களில் அறுபத்துமூவர் விக்கிரகங்களையோ அல்லது அவர்களுள் முக்கியமான சிலருடைய திருமேனிகளையோ காணலாம். அப்பர், ஸம்பந்தர், ஸுந்தரர், மாணிக்கவாசகர் ஆகிய சைவ சமய குரவர் நால்வரும் அநேகமாக எல்லாச் சிவன் கோயில்களிலும் காணப்படுவர். அந்தந்த ஸ்தலங்கள் ஸம்பந்தப்பட்ட அவர்களுடைய சரித்திர நிகழ்ச்சிகள் உத்ஸவங்களாகவும் கொண்டாடப் படுகின்றன. சில இடங்களில் ஆதி சங்கரருடைய உருவமும் காணப்படும்.

எவ்வளவு சிறிய கோயிலாக இருந்தாலும் அதில் காணப்படும் சண்டேசமூர்த்தி கி. பி. எழாம் நூற்றாண்டில் கட்டப்


## வெண்குஷ்டம் பெருவியாதி

எவ்வளவு கடுமையானதாயினும், எவ்வளவு நாட்பட்டதாயினும் நாலே வாரத்தில் குணம். சவர்த்திக்கு உத்தரவாதம்.

விவரங்களுக்கெழுதுக.

KAMALA WORKS (S.M.)
Panchpota—Bengal, India.





## தியாகராஜா தங்க நகைகள்

அசல் சவரன் பொன்னுக்கு ஒப்பானது. அநேக கண் காக்ஷிகளில் தங்க மெடல்கள் பரிசு பெற்றது. தங்கத்துக்குக் கனத்தில் குறைந்தாலும் குணத்தில் மேற்பட்டது!

நாகரீகத்திற்கேற்ற நானாவிதக் கலர் மாலைகளும், வளையல், செயின், ஒட்டியாணம் முதலிய நகைகளும் நயமாய்க் கிடைக்கும். கேட்லாக் இனாம்.

ஸ்ரீ தியாகராஜா மெட்டல் ஒர்க்ஸ்,
77, சைனா பஜார் ரோட், மதராஸ்.

பட்ட பல்லவர் கோயில்களில் காணப்படவில்லை.

விஷ்ணு கோயில்களில், இராமாநுஜர், வேதாந்த தேசிகர், மணவாளமாமுனிகள், ஆழ்வார்கள் பன்னிருவர் ஆகியோருடைய திருமேனிகள் காணப்படும். அவர்களுடைய சரித்திர நிகழ்ச்சிகள் அநேகமாக எல்லா விஷ்ணு கோயில்களிலும் கொண்டாடப்படுகின்றன. இவ்விக்கிரகங்கள் வடநாட்டுக் கோயில்களில் கிடையா. அதேபோல வட நாட்டில் பூஜிக்கப்படும் அடியார்களை நாம் அறியமாட்டோம்.

மதவைராக்கியத்தால் புதிய திருமேனிகள் ஏற்படுத்துவதும் உண்டு. இதற்கு முக்கிய உதாரணமாகச் சரபமூர்த்தியின் உருவத்தைக்கூறலாம். தஞ்சை ஜில்லாவில் திருபுவனம், தாராசுரம் முதலிய ஊர்க் கோயில்களில் சரபவிக்கிரகங்கள் காணப்படுகின்றன. விஷ்ணு நரஸிம்ஹாவதாரத்தில், ஹிரணியகசிபுவைக் கொன்றதால் வெறிகொண்டு, உலகத்தையே அழிக்கத்தலைப்பட்டதாகவும், பரமசிவன் சரபரூபம் எடுத்து நரஸிம்மத்தின் உக்கிரகத்தை அடக்கியதாகவும் புராணக் கதை. நரஸிம்ம உருவம், மனிதன், மிருகம் ஆகிய இரண்டும் கலந்து ஏற்பட்டதனால், அதை அடக்கிய சரபமூர்த்தி உருவம், மனிதன், மிருகம், பறவை ஆகிய மூன்றும் சேர்ந்தும் ஆனது. வைஷ்ண ஸம்பிரதாயத்தில் நரஸிம்ஹர் எப்படிக் கருதப்படுகிறாரோ அதேவிதமாகச் சைவசம்பிரதாயத்தில் சரபமூர்த்தி கருதப்படுகிறார்.

பிரும்மா, ஈச்வரன், விஷ்ணு ஆகிய திரிமூர்த்திகளையும் ஒன்றாக உடையது ஏகபாதமூர்த்தி என்னும் உருவம். சிவன் கோயில்களில் காணப்படும் உருவத்தில் ஈச்வரன் பிரதான மூர்த்தியாகவும், வலதுபுறம் பிரும்மாவும், இடது புறம் விஷ்ணுவும் ஈச்வரனின்றும் பிரிவதுபோலக் காணப்படும். விஷ்ணுகோயில்களில் உள்ள உருவம், விஷ்ணுவைப் பிரதான மூர்த்தியாகக் கொண்டு அவரினின்றும் பிரும்மாவும் சிவனும் பிரிவதுபோலக் காணப்படும்.

சைவ வைஷ்ணவ புராணங்களில், தங்கள் தங்கள் தெய்வங்களை உயர்த்திக் கூறுமுகமாகப் பல கதைகள் எழுதப்பட்டன. விஷ்ணுபுராணங்களில் சிவன் தமக்கு நேர்ந்த பிரம்மஹத்தி தோஷம் நிவர்த்தியாக விஷ்ணுவைப்பூஜை செய்தார் என்பது போன்ற கதைகள் விவரமாகக்காணப்படும். சைவ புராணங்களில் விஷ்ணு தமக்குச் சக்கராயுதத்தை அருளும்படி பரமசிவனைப் பூஜை செய்தார் என்பது போன்ற கதைகள் காணப்படும். இந்த நிகழ்ச்சிகளை விளக்குவனவாகப் பல வடிவங்கள் பிற்காலத்தில் சிருஷ்டிக்கப்பட்டன.

மூன்றாவது காரணம்தான் வேடிக்கையானது. மத்திய காலத்தில், ஊர்களுக்குப் புராணம் எழுத ஆரம்பித்தபொழுது சரித்திர உண்மை தெரியாததாலும் தமிழ் நாட்டில் உள்ள கிராமங்கள், கோயில் கொண்டு எழுந்தருளியுள்ள மூர்த்தங்கள் ஆகியவற்றின் தமிழ்ப்பெயர்களை வடமொழியில் 'தர்ஜமா' செய்ததாலும் பல புதிய உருவங்கள் உண்டாயின.

இப்பொழுது நாதன் கோயில் என்று வழங்கப்படும் க்ஷேத்திரத்தின் பழைய பெயர் நந்திபுரம் என்பது. நந்திவர்மன் என்னும் பல்லவ அரசனால் கட்டப்பட்ட அவ்வூர்க் கோயிலைத்திருமங்கைமன்னன்

"...நந்திபணி
செய்தநகர்
நந்திபுரவிண்ணகர
நண்ணுமனமே"

என்று மங்களாசாஸனம் செய்திருக்கிறார். ஆனால் பிற்காலத்தவர்கள் அதை அறியாமல், பரமசிவனுடைய வாகனமாகிய நந்திகேச்வரர் விஷ்ணுவைப் பூஜை செய்து வரம் பெற்ற இடம் என்று கதை எழுதி, நந்தியின் திருமேனி ஒன்றையும், கர்ப்பக்ருஹத்தில் வைத்துள்ளார்கள்.

காஞ்சீபுரத்தில் கச்சியப்பேச்வரன் கோயில் என்பது ஒன்று. பண்டைக்காலத்தில் கோயில்களைக் கட்டியவர்கள் அவற்றுள் எழுந்தருளும் மூர்த்தகளுக்குத் தங்கள் பெயர்களையோ அல்லது தங்களுக்கு வேண்டியவர்கள் பெயர்களையோ இடுவது வழக்கம். காஞ்சியிலேயே உள்ள வைகுண்டப் பெருமாள் கோயில் பரமேச்வர வர்மன் என்பவனால் கட்டப்பெற்றதால் பரமேச்வர விண்ணகரம் என்னும் பெயரைக்கொண்டது. அதேபோல கச்சியப்பேச்வரன் கோயில் என்பது கச்சியப்பன் என்பவனால் கட்டப்பெற்ற ஆலயமாகும். ஆனால் புராணக்காரர்களுக்கு இது சரிப்படவில்லை. வடமொழியில் கச்சபம் என்றால் ஆமை என்று பொருள்படும். ஆதலின் விஷ்ணு கூர்மாவதாரம் எடுத்தபொழுது பூஜை செய்த ஆலயம் கச்சியப்பேச்வரன் கோயில் என்று முடிவு செய்தார்கள். அதையொட்டிக்கூர்மாவதாரவிஷ்ணு லிங்கத்தைப் பூஜை செய்வது போன்ற ஒரு விக்கிரகத்தை அமைத்து அதை அக்கோயிலின் பிராகாரத்தில் ஸ்தாபித்தார்கள்! இவ்விதம் புதிதாக ஏற்பட்ட உருவங்கள்பல உள.

பழைய திருமேனிகள் மறைந்து புதிய மூர்த்தங்கள் ஏற்பட்டதற்குக் காரணமாக உள்ள கால சக்கரத்தின் சுழற்சியை நாம் என்னென்று கூறுவோம்!

* * * *


# ஜெனித் திராக்ஷாஸவா

ஆயுர்வேத சாஸ்திரீய முறைப்படி "ஜெனித் திராக்ஷாஸவா" தயாரிக்கப்பட்டிருக்கிறது. க்ஷயரோகத்தின் ஆரம்ப நிலையையும், காசம், இருமல் முதலிய ஈரல் நோய்களையும், ஜலதோஷம், சளி, அஜீர்ணம், மலச்சிக்கல், வாந்தி யெடுத்தல் முதலான நோய்களையும், தொண்டையைப்பற்றின சகல ரோகங்களையும் முழுவதும் குணப்படுத்தும். குழந்தைகளுக்கு உண்டாகும் கக்குவான் இருமலுக்குக் கைகண்ட மருந்து. இது வெகு ருசியுள்ள பானம். தினசரி உபயோகித்தால் குடலைச் சுத்தி செய்து பசியை அதிகரிக்கச் செய்கிறது. படுப்பதற்குச் சிறிது நேரத்திற்கு முன் ஜெனித் திராக்ஷாஸவாவைச் சிறிது பருகினால், காலையில் எழுந்து வேலை செய்வதற்கு வெகு ஊக்கத்தையும் உற்சாகத்தையும் கொடுக்கும்.

ஒவ்வொரு நகரத்திலும், கிராமங்களிலும் கூட, இப்பொழுது ஜெனித் திராக்ஷாஸவா கிடைக்கும். தபால் மூலமாக இம்மருந்தை அனுப்புவதென்றால் அதிகச் செலவு ஆகும். நீங்கள் இருக்கும் இடத்திலேயே ஜெனித் திராக்ஷாஸவாவை வாங்கினால் உங்களுக்கு லாபமும் சௌகரியமும் உண்டு.

**ஜெனித் கெமிகல் ஒர்க்ஸ்,**

தேவகரன் கட்டடங்கள், பிரின்ஸஸ் தெரு, பம்பாய்.

**The Zenith Chemical Works,**

Deokaran Mansions, Princess Street, Bombay, No 2.

சென்னை ராஜதானிக்கும், மைசூர் சமஸ்தானத்திற்கும் ஸோல் டிஸ்டிரிபியூட்டர்கள்:—

**ஜே. பலாபாய் & கம்பெனி,**

260, சைனபஜார் — மதராஸ்.



ஸ்ரீகா கஸ்தூரி கோரோஜன மாத்திரை

'பாலக்ஸ்' பேதி மாத்திரை

'யூனிகான்' டானிக்

14, ஸசா அவுஸ், மாடுங்கா, பம்பாய்



## உங்கள் கூந்தலுக்கு கருமையும் மினுமினுப்பும் அளிக்கும் கூந்தல் தைலம் இதோ இருக்கிறது.

உங்கள் கூந்தல் அழகுடனிருக்கவேண்டாமா? அப்படியாயின் ப்ரிங்கால் உபயோகிக்கத் தொடங்குங்கள். கூந்தலுக்கும், தலைக்கும் விசேஷ நன்மையூட்டுவதில் பிரக்யாதி பெற்று விளங்கும் ஆயுர்வேத




முறை தயாரிப்பான கூந்தல் தைலம் இதுவே. பிரிங்கராஜ் முதலிய மூலிகைகள் வேர்களின் சாரத்தைக் கொண்டு சாஸ்திரோக்தமாகத் தயாரிக்கப்படுவது.

கூந்தலுக்கும் தலைக்கும் நன்மையூட்டுவதில் இம்மூலிகைகள் சிறந்தவை. பால்யநரை, செம்பட்டை முதலியன ஏற்படக்கூடிய மருந்து தினுசுகளின் கலப்பே கிடையாது. பிரிங்கால் மேலான கூந்தல் தைலம் மட்டுமன்றி சிரசுக்குக் குளிர்ச்சியூட்டுவதில் நிகரற்றது; உச்சந்தலையிலும், உள்ளங்கை, உள்ளங்கால்களிலும் தேய்த்து ஸ்நானம் செய்தால் தேக உஷ்ணம் பூராவும் அகன்று உடல் குளிர்ந்திருக்கும்.

தைலம் நன்றாக இருக்கிறதா என்பதைப் பரீட்சிக்கவேண்டுமானால் கீழ்க்கண்டவர்களுக்கெழுதி சாம்பிள் புட்டி பெறலாம்.

**கல்கத்தா கெமிக்கல் கம்பெனி, லிமிடெட்.**

10, தம்பு செட்டி தெரு, மதராஸ்.



இன்ஸ்பெக்டர் பள்ளிக்கூடத்திற்கு விஜயம் செய்தார். ஒரு வகுப்பிற்குச் சென்று மாணவர்களின் கவனிப்பைப் பார்க்கவேண்டுமென்று முடிவு செய்து ஒரு பையனை அழைத்து "ஒரு நம்பர் சொல்லு" என்று கேட்டார்.

"89" என்றான் பையன். உடனே இன்ஸ்பெக்டர் போர்டில் 87என்று எழுதினார். பிறகு அவர் இரண்டாவது ஒரு பையனைக் கேட்டார். அவன் 47 என்றதும் 49 என்று போர்டில் எழுதினார்.

மூன்றாவது தடவையாக இன்ஸ்பெக்டர் கேட்டபோது ஒரு பையன் எழுந்து "33ஸார். எங்கே? இப்பொழுதாவது சரியாக எழுதுகிறீர்களா என்று பார்க்கலாம்" என்றான்.

* * * *

டிராமில் ஏறிய ஒருவருக்கு, ஹைகோர்ட்டிற்கு எதிரில் இறங்கவேண்டியிருந்தது. அவர் ஊருக்குப் புதியவராகையால் இடம் தெரியவில்லை. ஆயினும் ஹைகோர்ட்டிற்கு எதிரில், வந்ததும் கையிலிருந்த குடையால் கண்டக்டரைத் தொட்டு, "இதுதானா ஹைகோர்ட்" என்று கேட்டார்.

கண்டக்டர்:—இல்லை. இது என் விலா எலும்பு. எதிரில் தெரியும் பெரியகட்டிடம்தான் ஹைகோர்ட்.

* * * *

மாஜிஸ்திரேட்:— இந்தச் செக்கில் 2000 ரூபாய்க்கு ஏன் பொய்க் கையெழுத்திட்டாய்?

குற்றவாளி:—2 தான் என் அதிருஷ்ட நம்பர். கூடச் சில சைபர்களைச் சேர்த்தேன்.

* * * *

"வெங்காய தோசை என்கிறாய். வெங்காயத்தையே காணோம்."

ஸர்வர்:—பம்பாய் மிக்சர் என்று தான் பெயர். மிக்சரில் பம்பாயா இருக்கிறது.

* * * *

குடித்தனக்காரர்:—கூரை முழுவதும் ஒழுகுகிறது. இன்னும் எவ்வளவு நாளைக்கு இப்படி யிருக்கிறது?

வீட்டுச் சொந்தக்காரர்:—பேப்பரைப் பாருங்கோ இன்று மழைவருமா என்று.

* * * *

"இந்த ஹல்வாவை என்னால் சாப்பிடமுடியவில்லை."

ஸர்வர்:—சரி, மானேஜரைக் கூப்பிடுகிறேன்.

மானேஜர்:—என்ன?

"இதை என்னால் சாப்பிட முடியவில்லை."

மானேஜர்:— சமையல்காரனைக் கூப்பிடு.

சமையல்காரன்:— என்ன சமாச்சாரம்?

"இதை என்னால் சாப்பிட முடியவில்லை."

சமையல்காரன்:—ஏன்?

"ஸ்பூன் இல்லை."

* * * *

ஒருவர் வீடு பார்க்கச் சென்று வீட்டுக்காரரிடம் பேசிக்கொண்டிருந்தார்.

"இந்த வீட்டில் நல்ல காற்றடிக்குமா?"

"வீடு தெற்குப் பார்த்திருக்கிறது. எப்பொழுது பார்த்தாலும் தெற்குப் பக்கத்துக் காற்று அடித்துக்கொண்டிருக்கும்."

"இப்பொழுது வடபுறத்திலிருந்தல்லவா காற்றடிக்கிறது."

"ஆமாம், தெற்குப் பக்கத்துக் காற்று திரும்பிச் செல்லுகிறது."

* * * *

டிராமில் கூட்டமாகவிருந்தது. உட்கார இடமில்லை. ஒரு நாகரீக உடையணிந்த ஸ்திரீ டிராமில் ஏறவும் உட்கார்ந்திருந்த ஒருவர் எழுந்தார்.

ஸ்திரீ:—பரவாயில்லை. நான் நிற்கவே விரும்புகிறேன். சிறிது தூரத்தில் இறங்கிவிடப் போகிறேன். நீங்கள் உட்காருங்கள்.

"ஆனால்......"

"இல்லை, இல்லை, நீங்கள் உட்காருங்கள்."

"நான் இறங்கவேண்டும். அதற்காகத்தான் எழுந்திருக்கிறேன்"

* * * *

"இந்த வாழைத்தார் என்ன விலை?"

"எட்டணா"

"காய் கச்சலாக விருக்கிறதே"

"சரி ஐந்தணுக் கொடுங்கள்"

"இந்தாரும் ஐந்தணு. இன்னும் 10 நாள் கழித்து வந்து வாழைத் தாரை வெட்டி எடுத்துக்கொண்டு போகிறேன்"

* * * *



அமெரிக்காவில் கண்டுபிடிக்கப்பட்டுள்ள "ஏரோமொபைல்" என்ற மோட்டார் விமானம். இதை மோட்டாராகவும், விமானமாகவும் உபயோகிக்கலாம். விமானமாக விருக்கையில் மணிக்கு 110 முதல் 125 மைலும்; மோட்டாராக விருக்கையில் 55 மைலும் போகக்கூடியதாக விருக்கிறது.


## ஜோதிஷ மகுடவர்த்தனர்

இந்து மன்னர் சமஸ்தான25-வது தலைமுறை ஜோதிஷர்-பீமகவி-சுகர்-புஜண்டா சாஸ்திர நிபுணர் இப்பூமண்டலப் புகழுரையில் எதிர்கால பலன் கூறுவதில் "உலக சிரேஷ்டர்" என வெற்றி பாமாலையும் தங்க சன்ன தங்களும் பெற்றவர்.



ஜாதகம் லக்கின நக்ஷத்திர ஸ்புடஞ் செய்து பொதுப் பலன் எழுத ரூ. 1. ஒரு தெசைக்கு புக்தி பலன் ரூ. 2. அஷ்ட வர்க்கம் ஆயுள்வரை புக்தி பலன் ரூபா7. ஜாதகக் குறிப்பு முன்பணம் ரூபா 4. தேவை) 1 வருட மாதா மாதப் பலன் ரூ. 1-8. கேள்வி 6-க்கு ரூ. 1. ஜாதகம் அல்லது எழுதும் நேரம் தேவை.

புரோபஸர், N. சுப்பிரமணியம், நெ. 2, (ஜோதிஷ ஆசிரமம்) வாலாஜாபாத், S. I. R. சென்னை



## நரைமயிரை அகற்றுங்கள்



உங்களது தலைமயிர் வெகுகாலமாகவோ, மிக அதிகமாகவோ நரைத்திருந்தால் விவலேன் ஹேர் ஆயிலை உபயோகித்தால் நரை நீங்கித் தலைமயிர் கருகருவென்று பழையபடிப் பிரகாசிக்கும். இன்றே விவலேன் எண்ணெயை உபயோகியுங்கள். அதிக நரையில்லாவிடில் சிறியபாட்டில் ரூபா 1-12. நரை முற்றியிருந்தால் பெரிய பாட்டில் ரூ. 3. ஏககாலத்தில் 3 பாட்டில்கள் வாங்கினால் தபால் செலவு இனம்.

சயண்டிபிக் பப்ளிஷிங் கம்பேனி (மெடிகல் டிபார்ட்மெண்டு ⅄ 15) பவானிப்பூர், — கல்கத்தா

மதராஸ் ஸ்டாக்கிஸ்டு:—
ஜே. ஹஸாரிமால் & கம்பேனி, 260, சைனாபஜார் ரோட்,

ஸப் ஸ்டாக்கிஸ்டு:—
தாதா & கம்பேனி, மருந்து வியாபாரிகள், 52, நைனியப்ப நாயக்கன் தெரு, பி. டி. மதராஸ்.

செகந்தராபாத் ஸ்டாக்கிஸ்டு:—
பரேக் பிரதர்ஸ், ஜம்மா மஸ்ஜித்.

நமது சிறுகதை

# தியாகம்

—:[○]:—

(தி. நா. சுப்ரமணியன்)

1

திரை இறங்கியது. கண்ணகி வேஷம் தரித்த காந்தாமணி பார்ப்பவர் அனைவரும் பிரமிக்கும்படி நடித்தாள். கோவலன் குற்றமற்றவன் என்று நிரூபித்து அவள் மிகவும் உருக்கமாக நடித்ததைக் கண்டு எல்லோரும் கண்ணீர் வடித்தனர். அச்சமயத்தில் "யானே கள்வன்! யானே கள்வன்" என்று பாண்டிய அரசன் கீழே சாய்ந்து இறந்திருக்காவிட்டால், அன்று நாடகம் பார்க்க வந்திருந்தவர்களே அவனைக் கொன்றிருப்பார்கள். அவர்கள் உணர்ச்சி அவ்விதம் எழுந்திருந்தது. காந்தாமணிக்குப் பரிசுகளும் மாலைகளும் வழங்கப் பலர் மேடைமீது பாய்ந்தார்கள். நல்ல வேளையாக மானேஜர் திரையை விலக்கிக்கொண்டு முன்வந்து அவர்கள் அங்ஙனம் செய்வது அழகல்லவென்று மரியாதையாகத் தடுத்து, ஜனங்களின் உணர்ச்சியை மதித்து அதே நாடகம் மறுதினமும் நடத்தப்படும் என்று அறிவித்தார்.

மேடையிலிருந்து ஒவ்வொருவராக இறங்கினர். ஆயினும் ஒரு வாலிபன்மட்டும் இறங்கிச் செல்லாமல் அவ்விடத்திலேயே நின்றுகொண்டிருந்தான். எல்லோரும் போனபின்பு அவன், "நான் காந்தாமணி அம்மாளைச் சிறிது நேரில் பார்க்கலாமா?" என்று மானேஜரைக் கேட்டான்.

"அது எங்கள் விதிகளுக்கு விரோதமானது" என்று மானேஜர் அலக்ஷியமாகப் பதில் சொன்னான்.

"அப்படியானல் இந்தக் கடிதத்தையாவது அவர்களிடம் கொடுக்க முடியுமா?"

"மன்னிக்க வேண்டும்! அதுவும் கூடாது" என்று அதே விதமாக இறுமாப்புடன் பதில் வந்தது.

இளைஞன் சிறிது மனத்தளர்ச்சியடைந்து கீழே இறங்கிக்கொட்ட கையைவிட்டு வெளியில் போகப் புறப்பட்டான்.

அவன் நடையையும் பெருந்தன்மையான தோற்றத்தையும் கவனித்த மானேஜர் இளைஞனைத் திரும்பக் கூப்பிட்டு, அவன் யார் என்பதைக் கூறினல் அவளிடம் தெரிவிப்பதாகச் சொன்னான். வாலிபனும் உடனே ஒரு துண்டுக் கடிதத்தில் "இராமச்சந்திரன், குமாரபுரம் ஜாகிர்தார்" என்று எழுதி மானேஜரிடம் கொடுத்தான்.

அவ்வளவுதான். மானேஜருடைய இறுமாப்பெல்லாம் இருந்தவிடம் தெரியாமல் மறைந்துவிட்டது. அதிவிநயமாக அவரைப் பார்த்து, "மன்னிக்க வேண்டும். இப்பொழுதே அந்த அம்மாளுக்குத் தெரிவிக்கிறேன்" என்று கூறி அவரை உட்கார்ந்துகொள்ள வேண்டினன்.

குமாரபுரம் ஜாகிர்தார் பெயரைக் கேட்டிராதவர்கள் ஒருவருமில்லை. வருஷ வாரியில் சுமார் மூன்று லக்ஷம் வருமானமுடைய நல்ல சொத்துடையவர். அவருக்குச் சுமார் இருபத்து ஐந்து வயதுதானிருக்கும். எம். ஏ. பாஸ் செய்திருக்கிறார். அத்துடன் சங்கீதம், சித்திரம் முதலிய பல கலைகளிலும் நல்ல பாண்டித்தியம் உடையவர். பொது விஷயங்களிலும் வெகு தாராளமாகக் கலந்துகொள்வார். உயர்ந்த நடத்தைக்கும் மேன்மையான குணத்துக்கும் ஒரு உதாரணமாகவே விளங்கினர்.

அவளைப் பார்ப்பதற்கு அவசரப்பட்டு வந்து தம் மன உணர்ச்சியை வெளிப்படுத்தியதற்கு வருந்தி ஒருவாறு சமாதானம் செய்துகொண்டு, "அதனல் பரவாயில்லை. அந்த அம்மாள் இப்பொழுது சிரமபரிஹாரம் செய்துகொள்ளவேண்டியது அவசியமே. நான் நாளைக் காலையில் எட்டு மணிக்கு வருகிறேன். கூடுமானல் அப்பொழுது பார்த்தால் போதும்" என்று கூறிவிட்டுப் போய்விட்டார்.

2

காலை ஏழு மணி. காந்தாமணி காப்பி சாப்பிட்டுவிட்டுத் தன் அறையில் உட்கார்ந்துகொண்டு முதல்நாள் இரவு நடந்த சம்பவத்தைப்பற்றி நினைத்து மகிழ்ந்துகொண்டிருந்தாள். இம்மாதிரி நடப்பது அவளுக்குப் புதிதல்ல. ஆயினும் தினம் நடக்கும் நிகழ்ச்சியுமல்ல. அவளும் நாடகமேடைக்கு நேற்று வந்தவள் அல்ல. இருபது வருஷங்களாக நடித்துப் பேரும் புகழும் பெற்றவள். தன் நடிப்பை மெச்சி ஜனங்கள் சந்தோஷ ஆரவாரம் செய்யும் பொழுது அவள் திரை மறைவில் இருந்து பார்த்து ஆனந்தப்படுவாள்.





குழந்தைகளின்

மிருதுவான சருமத்திற்கு

சந்தன வாசனையுடன் நாமக லக்கும் அவசியமான ஆயிலகன் பாவமதிலும் ஆரோக்கிய மூட்டும் சக்தியும் இருக்கின்ற மைசூர் சந்தன ஸோப்பு முக்கியமாக குழந்தைகளின் மிருதுவான சருமத்திற்கு ஏற்றது. இந்திய தாய்மார்களில் பலவாயிரக் கணக்கானவர்கள் இதை அனுபவ பூர்வமாக அறிந்திருக்கிறார்கள்.

மைசூர் சந்தண ஸோப்பு

கவர்ன்மெண்ட் ஸோப்பு தொழிற்சாலை, பெங்களூர்



நரம்புக்கு வலுவூட்டுவதில் சிறந்தது

புரோபசர் ஜேம்ஸின்

எலெக்ட்ரோ டானிக்பர்ல்ஸ் (ரிஜிஸ்டர்ட்)



நரம்பு வியாதிகள், தூக்கமின்மை, ஞாபக சக்திக் குறைவு, பித்த மயக்கம், அசதி, பலவீனம் இவற்றை நிச்சயமாகப் போக்குவது. தவருமல் உபயோகியுங்கள்; மற்றவர்கள்போல் குணம் பெறுவீர்கள். விலை 25 பர்ல்ஸ் அடங்கிய புட்டி 1-க்கு ரூ 1—4; 40 அடங்கிய புட்டி 1-க்கு ரூ. 2. வி. பி. சாஜ் வேறு.

4-அணு ஸ்டாம்பனுப்பினல் 2-நாள் உபயோகத்திற்கான சாம்பிள் பாக்கெட் கிடைக்கும்.

மொத்த ஏஜண்டுகள்.

The Anglo Indian Drug & Chemical Co., BOMBAY, 2



ஸ்தாபிதம் 1913

சவரன் மாத்து தங்கத்துக்கும், அசல் வெள்ளி சாமான்களுக்கும், மேன்மையான வேலைப்பாட்டுக்கும் உத்திரவாதமுள்ள இடம்

கரம்சந்த் சபில்தாஸ் & ஸன்

நகை வியாபாரிகள்

175, சைனபஜார் ரோட் — மதராஸ்.

காட்லாக்துக்கு எழுதவும்.



ஸ்ரீமான் எஸ்.¦ஏ.¦வனேஸ்வருக்கு லாகூர் மதராஸ் சங்க அங்கத்தினர்கள் பிரிவு உபசாரம் நடத்தியபோது எடுத்த படம்.

அவளுக்கு முப்பத்தைந்து வயதுக்கு மேலிருக்கும். ஆயினும் பார்ப்பவர்கள் ஒரு சமயத்திலும் அவளை இருபது வயதுக்கு மேற்பட்டவள் என்று கூறமாட்டார்கள். அவ்விதமாகத் தன்னைச் சிங்காரித்துக்கொள்ளும் சாமர்த்தியம் வாய்ந்தவள். பல சமயங்களில் அவளுக்குக் காதல் கடிதங்கள் வந்ததுண்டு. அவளை மணம் செய்துகொள்ளப் பலர் விரும்பினர்கள். ஆயினும் பதினைந்து வருஷங்களுக்கு முன்பு நடந்த ஒரு துக்ககரமான நிகழ்ச்சிக்குப் பிறகு அவள் உலகத்தையே வெறுத்து வந்தாள். காதல் என்னும் பதம் ஒன்று இருப்பதையே அவள் மறந்துவிட்டாள்.

முதல்நாள் நடந்த சம்பவத்தையும் அவள் வழக்கம்போல் திரைமறைவிலிருந்து கவனித்து வந்தாள். அந்தக் கூட்டத்தில் அவள் கவனத்தைக் கவர்ந்தவர் ஒரே மனுஷ்யர்தான். அவருடைய சாந்தமான முகமும் கூர்மையான கண்களும் அவர் திடமான சித்தம் உடையவர் என்பதைக் காட்டின. அவர் பார்த்த பார்வை தன் இருதயத்தை ஊடுருவிச் சென்று அவருடைய காதலைத் தெரிவிப்பது போல அவளுக்குத் தோன்றியது.

அவளுடைய மனோநிலை தடுமாறியது என்றே கூறவேண்டும். பதினைந்து வருஷங்களுக்கு முன்பு அவள் அடைந்திருந்த இன்பம் அவளுக்கு ஞாபகம் வந்தது. என்னதான் முயன்றும் தன் கவனத்தை வேறு வழியில் செலுத்த அவளால் முடியவில்லை.

"அவர் யார்? அவரை மறுபடியும் பார்க்க முடியுமா? அன்றைய தினம் ஆட்டத்திற்கும் அவர் வருவாரா? யார் சொல்ல முடியும்? அதிர்ஷ்டவசமாக அவரைக் காண நேரிட்டால் அவருடன் சிறிது நேரமாவது பேசாமல் விடுவதில்லை" என்று தீர்மானித்துக்கொண்டாள்.

இவ்விதமாக யோசித்துக்கொண்டே முதல் நாள் இரவு வந்த பரிசுகளையெல்லாம் ஒவ்வொன்ருக எடுத்துப் பார்த்துக்கொண்டிருந்தாள். ஒரு சிறு பெட்டியில் அழகாக வெல்வெட்டைத் தைத்து அதில் வைக்கப்பட்டிருந்த நவரத்ன மாலை ஒன்று அவள் மனதைக் கவர்ந்தது. அதை யார்கொடுத்திருக்கக் கூடும்? அந்தப் பெட்டியுள் "இராமச்சந்திரன், குமாரபுரம் ஜாகிர்தார்" என்று அச்சடிக்கப்பட்ட ஒரு சிறு கார்டு வைக்கப்பட்டிருந்தது. யார் அவர்? அவள் காண விரும்பும் இளைஞனுகவே இருத்தல் கூடுமா?

அந்த சமயத்தில் மானேஜர் வந்து முதல் நாள் ஜாகிர்தார் கொடுத்துவிட்டுப் போன சிட்டைக் கொடுத்தார்.

"அவர் எங்கே காத்திருக்கிருர்? ஏன் உடனே அழைத்து வரவில்லை?" என்று ஆத்திரத்துடன் மானேஜரைக் கேட்டாள். முதல்நாள் இரவு ஒருவர் கொடுத்துவிட்டுப்போன சிட்டு என்பதை அறிந்ததும் அவரைக் காண முடியவில்லையே என்று வருத்தப்பட்டாள். வேஷத்திற்குத் தகுந்தபடி நடிப்பதில் பெயர்பெற்ற காந்தாமணியும் சட்டென்று தன் மனோ உணர்ச்சியை வெளிக் காட்டிவிட்டாள்.

மானேஜரைக் குறுக்கு விசாரணை செய்தாள். அந்தச் சிட்டைக் கொடுத்துவிட்டுப் போனவர் தான் காண விரும்பும் மனிதரே என்பதையும், அவர் இன்னும் சற்று நேரத்திற்கெல்லாம், எட்டு மணிக்குத் தன்னைக் காணவருவார் என்பதையும் அறிந்துகொண்டாள்.

உடனே தன் அறைக்கு ஓடினாள். தன்னை அலங்காரம்


அசல் புளு ஜாகர்

# வைரங்கள்

இயற்கை முறையில் உற்பத்தி செய்யப்பட்ட (CULTURE)

## நல்முத்துக்கள்

கிடைக்குமிடம்:

சிமன்லால் பிரதாப்சந்த்
175. சைனு பஜார். மதராஸ்

**CONTRACEPTIVE.**

'Rahat' is an unfailing contraceptive, a three-day use of which insures lifelong relief from the misery of conception without in any way harming the physique or disturbing menstrual regularity. Guarantee form accompanies every order.

Price Rs. **5-8**; foreign, Shillings 10.

**Vilasvati:** excellent retentive tonic pills.

Price Re. **1-6**, foreign, Shillings **2-6.**

**Rajvati:** recontinues stopped menses, regularising monthly course too.

Price Rs. **5-8**, foreign, Shillings **10.**

**Dr. S. H. KHAN,**
S. Tapia Mansion, Erskin Road,
BOMBAY 3.

ராஜாராணிஸோப்
REGD. No 790
பெட்டி 1 க்கு ரூ. 1-0-0.
T. P. LAL & Co. BOMBAY, 2.

டாக்டர் ஜம்மி வெங்கடராமணய்யாவின்

# லிவர்க்யூர்

குழந்தைகள் ஈரல், குலேகட்டிகளுக்கு நிகரற்றது என்று டாக்டர்களாலும், பெற்ருேர்களாலும் போற்றப்பட்டது.

அநேக கண்காட்சிகளில் தங்கமெடல்களும், நற்சாட்சிப் பத்திரங்களும் பெற்றது.

ரங்கூன் ஏஜெண்டு:—ரிலேயன்ஸ் பார்மசி, 125-12, பின்னட் வீதி—ரங்கூன்.

செய்துகொண்டாள். இருபது வருஷங்களாக மேடையில் நடித்ததன் பயனாக அவள் மனிதர்களுடைய மனோதத்துவத்தை நன்கு உணர்ந்திருந்தாள். எவ்விதமாக அலங்கரித்துக்கொண்டு தான் எப்படி நடந்தால் கண்டோரை மயக்கும் சக்தி ஏற்படும் என்பதை நன்கு அறிந்திருந்தாள். அவள் அலங்காரம் செய்து நிலைக்கண்ணாடி முன்பு நின்று ஒரு முறை தன் அழகைப் பார்த்து ஆனந்தப்பட்டாள். அவர் பரிசாகக் கொடுத்த நவரத்தின மாலையைக் கழுத்தில் அணிந்துகொண்டாள். அப்பொழுது அவளைப் பார்த்தவர்கள் அவள் பதினெட்டு வயது மங்கை என்றே கூறுவார்கள்.

அவள் கண்கள் கடிகாரத்தையே நாடிச் சென்றன. ஒவ்வொரு க்ஷணமும் அவள் ஜாகிர்தார் வரவை எதிர்பார்த்து நின்றாள். மணி எட்டு ஆகவில்லையாயினும், அவர் உடனே வந்துவிட மாட்டாராவென்று அவள் மனம் ஏங்கியது. அவள் காது வெளியில் கார்வரும் சப்தம் கேட்கிறதாவென்பதையே கவனமாகக் கேட்டு வந்தது.

கடைசியாக அவரும் வந்து சேர்ந்தார். காந்தாமணிக்கு உடம்பெல்லாம் வியர்த்துவிட்டது. ஒருவிதமான படபடப்பும் ஏற்பட்டது. அவர் முகத்தை எறிட்டுப் பார்க்க முடியாமல் வெட்கத்தால் தலையைக் குனிந்துகொண்டாள். பெரிய மனிதர்களுடன் பழகும் முறையை நன்கு அறிந்த காந்தாமணியும் அவரை வரவேற்பதில் பல தவறுகள் செய்துவிட்டாள். அவள் நடந்துகொண்டதைப் பார்த்தால் புதிதாகப் புக்ககம் வந்த பெண் தன் புருஷனை வரவேற்பது போலத் தோன்றியது.

### 3

மூன்று மாதங்கள் ஆகிவிட்டன. அவ்விருவரையும் எப்பொழுதும் ஒரே இடத்தில் பார்க்கலாம். நாட்கள் விநோதமாகவே கழிந்தன. தினம் ஒருவித வேடிக்கை. ஊரெல்லாம் இதே பேச்சு. ஜாகிர்தார் காந்தாமணியின் வலையில் சிக்கிவிட்டார் என்றும், அவள் ஜாகீரைப் பகற்கொள்ளையடித்து வருகிறாள் என்றும் வதந்தி கிளம்பிவிட்டது. ஆம். இப்படிப்பட்ட சமயத்தில் வேறு யாராவது இருந்திருந்தால் அப்படித்தான் நடந்திருக்கும். ஆனால், காந்தாமணியோ ஜாகிர்தாரின் சொத்தில் ஒரு சிறிதையும் விரும்பவில்லை. அவள் விரும்பியதெல்லாம் அவர் காதலைத்தான். காதல் விரும்புவது காதலையே தான்.

அவரைக்கண்டால் அவள் தன்னையே மறந்துவிடுவாள். ஆயினும் தனியாக இருக்கும் பொழுது அவரையே நினைத்து ஏங்குவாள். என்ன இருந்தும் அவள் மனது சமாதானம் கொள்ளவில்லை. ஜாகிர்தார் உண்மைக் காதலைப்பற்றிப் பேசுவாரே ஒழிய, “கல்யாணம்” என்பதைப்பற்றித் தவறிக்கூட ஒரு வார்த்தையும் கூறியதில்லை. சிறிது காலம் தன்னை வைத்துக்கொண்டிருந்துவிட்டுப் பிறகு உதறிவிடுவாரா என்று அவள் சில சமயங்களில் அவரைப்பற்றிச் சந்தேகிப்பாள். சே! ஒருகாலும் இருக்காது. அவ்விதமானம் கெட்ட வாழ்க்கையை நடத்த அவள் ஒருபோதும் சம்மதிக்கமாட்டாள். அப்படி நேரிடுமாயின் தன் உயிரையும் விடுவதற்கு அவள் சித்தமாக இருந்தாள்.

ஜாகிர்தாரின் உறவினரும் இதைக் கண்டு சும்மா இருக்கவில்லை. எப்படியாவது அவரைக் காந்தாமணியினின்றும் விடுவிக்கவிரும்பினார்கள். அவ்விருவரும் சேர்ந்து வாழ்வதை அவர்கள் ஆக்ஷேபிக்கவில்லை. அவர்கள் பயம் எல்லாம் எங்கே அவர் சொத்தை அவளுக்குப் பராதீனம் செய்துவிடுகிறாரோ அல்லது அவளுக்குப் பிறக்கும் குழந்தை பின்னால் ஜாகிருக்கு வாரிசாகவந்துவிடுமோ என்பதுதான். ஜாகிர்தாருக்குத் தங்கள் குலத்தில் ஒரு பெண்ணைப் பார்த்து நிச்சயித்துக் கல்யாணம்செய்துவிட்டால் இந்த விபரீதம் நிவர்த்தியாகிவிடும் என்று நினைத்தார்கள். அன்றி அரசாங்கத்தார் தலையிட்டு இந்நிலைமையைத் தவிர்க்க வேண்டும் என்றும் ஒரு தூதுசென்று வேண்டிக்கொண்டார்கள். கவர்னரும், தம்முடைய சொந்த ஹோதாவில் ஜாகிர்தாரை ஒருநாள் வரவழைத்துக் குடும்பத்தின் கௌரவத்தைக் காப்பாற்றும்படி புத்திமதிகள் கூறினார்.

அன்றைய தினமே இராமச்சந்திரர் காந்தாமணியைப் பார்த்து, “இதோ பார். காந்தா! நான் ஒன்று கேட்கப் போகிறேன். அதை நீ மறுக்கக்கூடாது” என்று கேட்டார்.

அவளுக்கு உடம்பு சிலிர்த்தது. படபடப்பு உண்டாயிற்று. தன் மனம் ஏங்கியதைக் கொடுக்கப் போகிறார் என்று ஏதோ ஒன்று அவளுக்கு உணர்த்தியது. “நீங்கள் கேட்டதை நான் எப்பொழுதாவது மறுத்திருக்கிறேனா” என்று பதில் கூறிவிட்டுத் தலையைக் கவிழ்ந்துகொண்டாள்.

பெண்களுக்குக் கூரிய உணர்ச்சி உண்டு. இவ்விஷயங்களையெல்லாம் அவர்கள் நன்கு அறிந்துகொள்வார்கள். தாம் எவ்விதத்திலும் காந்தாமணிக்குத் தகுதியற்றவர் என்பது ஜாகிர்தாரின் அபிப்பிராயம். அவளுடைய அழகிலும், கலாஞானத்திலும் நூறில் ஒரு பங்குகூடத் தமக்கு இல்லையென்றும், அவளை மனப்பூர்வமாகக் காத


புத்துயிருடன் ஊக்கம்




விம்டோ கார்டியல் புகழ் பெற்றிருப்பதற்குக்காரணம் இதுதான. முதலில் அது விசேஷ புத்துயிருட்டும் ருசி மிகுந்த பானம்—தவிர விம்டோ புதிய ஆரோக்யம், புதிய ஊக்கம், புதிய ஜீவ சக்தி இவற்றைத் தருகிறது!
—விம்டோ, பானங்களில் மேலானது.

VIMTO
கார்டியலுடன்

உலகப் பிரசித்தி பெற்ற
ஆர். மூகம் அண்டு கம்பெனியாரின்
நெ. 1. மணிமார்க் பட்டணம்
மூக்குத்தூளை
உபயோகியுங்கள்.
TRADE MARK
1. நெ. வீசை 1-க்கு விலை ரூ. 4 0
2. நெ. வீசை 1-க்கு விலை ரூ. 3 8
ஏஜண்டுகள் தேவை:—
விலாசம் : ஆர். மூகம் அண்டு கம்பெனி,
நெ. 5, ஓல்டு ஜெயில் தெரு, மதராஸ்.

இந்தியா கவர்ன்மெண்டில் ராஜபிருதுகளுடன் வைத்திய ரத்ன என்னும் அபூர்வ பட்டமும் மெடிகல் ஸன்னதும் பெற்ற
வைத்தியரத்ன யு. ராமநாத சாஸ்திரியாருடைய
ஸித்த மகரத்வஜம் (பலவிருத்தி டானிக்)



[புரொபஸர் ராமமூர்த்தியால் சர்டிபிகேட் செய்யப்பட்டது.]

இதில் தங்கம் முதலிய உயர்ந்த வஸ்துக்கள் சேர்ந்து இருப்பதால் முக்கியமாய் அங்கங்களையும், நரம்புகளையும் பலப்படுத்தி சரீரோத்தீபனத்தை விருத்தி செய்வதில் நிகரற்றது. அநேக காரணங்களால்பலத்தைக்கெடுத்துக் கொண்டவர்களுக்கு அத்தியாவசியமானது.

30 மாத்திரைகள் கொண்ட சீசா 1-க்கு ரூ. 7. பரீக்ஷிப்பதற்கு 5 மாத்திரைகள் ரூ. 1-4-0 வி. பி. வேறு.

ஆனந்த பற்பொடி (ரிஜிஸ்டர்ட்)

அழகு, குணம், ருசி, வாசனை, இவைகளை அளிப்பதில் இது ஒன்றுதான் மார்க்கெட்டில் மேலானது. சென்னை ஹைகோர்ட்டில் உரிமை பெற்றது. டப்பி 1-க்கு 0-2-9. ஒரு டஜன் கொண்ட பெட்டி 1-க்கு ரூ. 1-14-0. ஆனந்த பற்பசை ட்யூப் 1-க்கு அணா 8. வி. பி. வேறு. எங்கும் கிடைக்கும்.

இந்தியன் ஹெர்குலீஸ் புரொபெஸர் ராமமூர்த்தி, பிரதியக்ஷ பீமஸேனன் அவர்கள் எழுதுகிறார்:—

“பிரம்மஸ்ரீ வைத்தியரத்ன யு. ராமநாத சாஸ்திரியார் அவர்கள் ஸம்ஸ்கிருத வித்தையில் அபாரமான சக்தியை அடைந்து பிரகாசிப்பதுடன் நமது ஆயுர்வேத வைத்திய சாஸ்திரத்தையும் நன்றாய்ப்படித்து சாஸ்திரத்தில் சொல்லிய பிரகாரம் சரீரத்திற்கு பலத்தை உண்டு பண்ணக்கூடிய ஒஷதிகளைச் சேகரித்து அவைகளைக் கொண்டு பூலோகத்தில் அனாதரவாய்த் தத்தளித்துக்கொண்டிருக்கும் மனிதர்களுடைய பலஹீனத்தை நிவர்த்தி செய்து ஜனங்களுக்கு சரீர புஷ்டியை உண்டு பண்ணுவதே மேற்படி சாஸ்திரிகளுக்கு ஜன்ம விருத்தியாய் அமைக்கப்பட்டு இருக்கிறபடியால் அவருக்கு இந்த யோக்கியதா பத்திரத்தை அனுப்புகிற விஷயத்தில் நான் மேன்மையான ஆனந்தத்தை அடைகிறேன். நரம்புகளுக்கு வலுவைக் கொடுக்கக்கூடிய இவருடைய டானிக்குகள் என் அனுபவத்தில் அத்தியந்தம் வீரியமுள்ளவைகளாய் இருக்கின்றன. இவ்விதமான இவருடைய காம்பீரியமுள்ள பிரயத்னங்கள் மேன்மேல் அபிவிருத்தியை அடையவேண்டும் என்று நான் மனப்பூர்வமாய் விரும்புகிறேன. அவருடைய பல்பொடியையும் அனுபவத்தில் சிரேஷ்டமாக அறிந்திருக்கிறேன்.”

சகல ஆயுர்வேத ஔஷதங்களும் கிடைக்கும். கேட்லாக் இனாம்.

வைத்தியரத்ன யு. ராமநாத சாஸ்திரி,
வைத்திய ஸித்தாச்ரமம், 39, பஜார் ரோட், மயிலாப்பூர், மதராஸ்

விப்பதுதான் தம்முடைய யோக்கியதையென்றும் அவர் எண்ணி வந்தார். அதனால் எங்கே அவள் மணம் செய்துகொள்ள மறுத்துவிடுவாளோவென்று பயந்தார். அவள் தம்மை மணந்துகொள்வாள் என்பதையும், அதற்காக அவள் ஏங்கி வருந்தினாள் என்பதையும் அவர் அறிந்திருந்தால், முதல் தினமே இதைப் பற்றிப் பேசி நிச்சயித்திருப்பார்.

அக்கோரிக்கையை அவள் ஒத்துக்கொண்டவுடன் இராமச்சந்திரன் சந்தோஷத்தால் உலகத்தையே மறந்தார். காந்தாமணியோ தான் காண்பது கனவோ என்று சந்தேகப்பட்டாள். நினைவுதான் என்பதையறிந்து கண்ணீர் பெருக்கி அவர் அடியில் வீழ்ந்து வணங்கினாள்.

அவர்கள் நெடுநேரம் பேசிக்கொண்டிருந்தார்கள். அவ்விருவரும் வெவ்வேறு ஜாதியைச் சேர்ந்தவர்களானதால், சாஸ்திர ரீதியாகக் கல்யாணம் செய்துகொள்ள முடியாது. அப்படிச் செய்துகொண்டாலும் அது செல்லாது. அதையறிந்த அவர் சட்டப்படி ரிஜிஸ்தர் செய்து மணம் செய்துகொள்வதாக ஏற்பாடு செய்துவிட்டார். கல்யாணம் செய்துகொள்ளவேண்டிய தினமும் நிச்சயிக்கப்பட்டுவிட்டது. காந்தாமணியோ சிலையைப்போல நெடுநேரம் அசையாமல் உட்கார்ந்திருந்தாள். மலர்ந்திருந்த அவள் முகம் அவர் எழுந்திருந்து போனவுடனே இருண்டுவிட்டது. வருத்தம், வெட்கம், அவமானம் முதலியவற்றால் பிடிக்கப்பட்டவள் போலக் காணப்பட்டாள் அவள்.

4

விடிந்தால் கல்யாணம். காந்தாமணிக்கு நாலா திசைகளிலிருந்தும் பாராட்டுக் கடிதங்களும் பரிசுகளும் வந்து குவிந்த வண்ணம் இருந்தன. ஜாகிர்தாரும் உயர்ந்த ஆடைகளையும் ஆபரணங்களையும் பரிசாக அனுப்பியிருந்தார். ஆயினும் அவள் முகம் சந்தோஷமாகக் காணப்படவில்லை. கவலை குடிகொண்டதாகவே தோன்றியது.

சென்ற நான்கு தினங்களாக அவள் மனத்தில் ஊசலாடியது ஒரே ஒரு விஷயம்தான். உற்றார் உறவினரை விடுத்து, குடும்ப கௌரவத்தையும் மதிக்காமல், தன்னை உண்மையாகக் காதலித்துவரும் ஜாகிர்தாரை அவள் ஏமாற்றலாமா? அதற்கு அவள் ஒருகாலும் சம்மதிக்கமாட்டாள். சிறு வயதில் அவள் பலருடன் உறவு கொண்டாடி ஏமாற்றிப் பணத்தைப் பறிப்பதில் தன் முழு கவனத்தையும் செலுத்தியிருக்கலாம். இப்பொழுதோ ...படியில்லை. அவளோ காதலித்தாள். ஆனால் சிரிப்பு, நம்பிக்கை, விளையாட்டு, சக்தி முதலியவற்றுக்கு இருப்பிடமான இளமையை அவள் இழந்துவிட்டாளே. வருஷங்கள் ஓடிவிட்டனவே. எவ்வளவு நாள்தான் அவள் வர்ணம் பூசப்பட்ட பொம்மைபோல விளங்க முடியும்? தன் காதலன் வாழ்க்கையை அவளால் சந்தோஷமாகச் செய்ய முடியுமா?

தன்னை அவ்வித நிலையில் சிக்கவைத்ததற்காகச் சிறிது கடவுளை நொந்துகொண்டாள். யாரை நொந்துகொண்டு என்ன பயன்? அன்றி உண்மையை அவரிடம் தெரிவிக்கவும் அவளுக்கு மனோதைரியம் வரவில்லை.

இவை எல்லாவற்றினின்றும் தப்புவதற்கு ஒரே வழிதான் உண்டு. எங்கேயாவது ஓடிவிடுவது என்பதுதான். தான் மனப்பூர்வமாகக் காதலிக்கும் ஒருவருடைய மனம் உடைந்துவிடும்படிக் கைவிட்டு அவளால் ஓடிவிடமுடியுமா? அவளுக்கு இது ஒரு சோதனையாகவே இருந்தது.

அவளுக்குத் தூக்கமே வரவில்லை. இரவு பன்னிரண்டு மணிக்குமேல் ஆகிவிட்டது. இன்னும் ஆறுமணி சாவகாசம் தாமதித்தால், அவளைக் கலியாணம் செய்துகொள்ளவேண்டிய இடத்துக்கு அழைத்துப்போக ஜாகிர்தார் வந்துவிடுவார். உடனே ஏதாவது ஏற்பாடு செய்யவேண்டும். திடீரென்று ஒரு முடிவுக்கு வந்தாள்.

அவள் அணிந்திருந்த விலையுயர்ந்த ஆடைகளையும் ஆபரணங்களையும் களைந்தாள். சாதாரணமான புடவை ஒன்றைக் கட்டிக்கொண்டாள். தன் முகத்திலிருந்த பசை, பவுடர் முதலியவற்றை 'ஸோப்' போட்டு நன்றாகக் கழுவி நெற்றிக்குப் பொட்டிட்டுக்கொண்டாள். படுக்கைக்கு எதிரில் இருந்த நிலைக்கண்ணாடியின் முன்பு போய் நின்றாள். அவளுக்கே தூக்கி வாரிப்போட்டது. துறவிகள் மனத்தையும் கலங்க வைக்கும் எழில் வாய்ந்த அவள் வதனம் இப்பொழுது எப்படி விளங்கியது. அவள் ஒரு இளமங்கையெனப் பாசாங்கு செய்ய முடியுமா?

எவ்விடம் செல்வது? பொழுது விடிந்தால், அவளைத் தேடுவதற்காக ஜாகிர்தாரின் ஆட்கள் எங்குபார்த்தாலும் ஓடுவார்கள். அவருடைய காதலை உதறிவிட்டு ஓடுவதற்கும் அவளுக்கு மனது வரவில்லை. சிறிதுகாலம் சென்றால் அவர் சமாதானம் அடைந்து வேறு மணம் செய்துகொள்வார். அப்பொழுது வந்து உண்மையைக் கூறி மன்னிப்புக் கேட்டுக்கொள்ளலாம் என்று அவள் நினைத்தாள். ஆயினும், இவ்விதம் சொல்லிக் ...

ஒருவேளை அவர் மனம் தாளாது தம் உயிரையே விட்டுவிட்டால் என்ன செய்வது? அவருக்குத் தெரிவிக்காமல் போகக்கூடாது என்று எண்ணியவளாய் ஒரு கடிதத்தை எடுத்துப் பின்வருமாறு எழுதினாள்:—

“என் அன்புக்கு அரசே!

என்னை மன்னிக்கவேண்டுகிறேன். நான் தங்களுக்குத் தகுதியற்றவள். இந்த ஜன்மத்தில் கிடைக்காது என்று எண்ணியிருந்த உண்மைக் காதலைத் தாங்கள் எனக்குஅளித்தீர்கள். அது ஒன்றே எனக்குப் போதுமானது. அதை நான் உள்ள அளவும் எண்ணி மகிழ்ந்து போற்றி வருவேன். தங்களை மனப்பூர்வமாகக் காதலிப்பதால், நான் சுயநலம் கருதாது தங்கள் க்ஷேமத்தையே கோரவேண்டும். அதனால் நான் தங்களை விட்டுச் செல்கிறேன். நான் கட்டாயம் திரும்பிவந்து தங்களைத் தரிசித்து எல்லாவற்றையும் தெரிவித்து மன்னிப்புக் கேட்டுக் கொள்வேன். ஆனால், ஒரே ஒரு நிபந்தனை. நீங்கள் வேறு பெண்ணைக்கல்யாணம் செய்துகொண்ட பிறகுதான் நான் தங்களைப் பார்ப்பேன். தங்களுடைய காதலின் அறிகுறியாகத் தாங்கள் எனக்கு முதன்முதல் அளித்த நவரத்தின மாலையை மட்டும் எடுத்துக்கொண்டு போகிறேன். தாங்கள் எனக்கு அளித்த மற்ற எல்லாவற்றையும் தொடாமல் அப்படியே விட்டுச் செல்கிறேன். உங்களுக்கு வரப்போகும் மனைவிக்கு அவற்றை என்னுடைய பரிசாகக் கொடுக்க வேண்டிக்கொள்ளுகிறேன். தயவுசெய்து என்னைத் தேடவேண்டாம் என்று தங்களை மிகவும் வணங்கிக் கேட்டுக் கொள்ளுகிறேன். நான் போய்வருகிறேன்.

தங்கள் காதலையே
பெரிதாக மதிக்கும்
காந்தாமணி.

இந்தக்கடிதத்தை எழுதி முடித்தவுடன் அவள் எழுந்து நவரத்தினமாலையை எடுத்துக் கழுத்தில் போட்டுக்கொண்டு புறப்பட்டுவிட்டாள். வெளியில் எங்கு பார்த்தாலும் ஒரே இருட்டாக இருந்தது. காந்தாமணியும் இருட்டில் மறைந்து முப்பதுகோடிமக்களுள் ஒருத்தியாகக் கலந்துவிட்டாள்.




போலிகளைக்கண்டு உஷார் !!!
அமிர்தாஞ்சனம்
சகலவலிகளையும் போக்கும்
இந்திய திவ்யாமிர்தம்
அமிர்தாஞ்சனம்
லிமிடெட்.
பம்பாய், மதராஸ், கல்கத்தா,

Tele:—"SIMILICURE" Box 643 CAL
வெளிவந்து விட்டன!
ஹோமியோ புத்தகங்கள்
ஹோமியோ வைத்திய முறை
தத்துவம்
தெலுங்குப்பதிப்பு விலை ரூ. 1 தான்.
M. BHATTACHARYYA & Co.,
Economic Pharmacy, 84, Clive Street, CALCUTTA.

BLACKLOCK & MACARTHUR LTD., GLASGOW


வெள்ளை வர்ணத்தில் 541 வெள்ளைதான் உயர்ந்தது. வெண்மை மாறாது. வெடிக்கவும் செய்யாது. அதிக ஸன்னமாதலால் ஆண்டுவரும். 541 ஈய வெள்ளையை வாங்கி உபயோகித்தால் கூலி மிச்சமாகும். அடிக்கடி வர்ணம் கொடுக்கவேண்டிய அவசியமுமிராது. 541 கெக்கின்பேரில் மான்மார்க்கும் இரண்டு ஈய வீல்களும் இருக்கிற கெக்காகப் பார்த்து வாங்குங்கள். போலிகளை வாங்கி ஏமாறாதீர்கள். செந்தூரத்தில் ''மான்மார்க்'' செந்தூரம்தான் உயர்ந்தது. இவைகள் எல்லா வர்ண வியாபாரிகளிடத்திலும் கிடைக்கும்.
Sola Agents:-M. R. V AIYER & Co., 49, பந்தர் தெரு, மதராஸ்.

தென்னிந்தியப் பிரமுகர்கள்



## திவான் பஹதூர்
## ஸர் டி. என். சிவக்ஞானம் பிள்ளை

(1861—1936)

(கே. எஸ். ஆர்.)

"திவான்பஹதூர் ராமச்சந்திர ராவ் மாதிரி, ஸர் டி. என். சிவக்ஞானம் பிள்ளைக்குப் பிறவியின் மூலமாகவும், போட்டிப் பரீக்ஷையின் மூலமாகவும் நேராக உயர்தர சிவில் சர்விஸ் உத்தியோகத்திற்கு எடுத்துக் கொள்ளப்படும் சௌகர்யங்கள் இருக்கவில்லை. அவர் ஒரு சாதாரண குடும்பத்தில் பிறந்து, ரெவினியூ இலாகாவில் எளிய பதவிகளை மேற்கொண்டு, பின்பு தமது களங்கமற்ற நடத்தையினாலும், நல் உழைப்பினாலும் முன் வந்தவர். பிறவி, காலம் முதலியவைகளினால் ஏற்படும் விக்கினங்களைத் தமது குணநிசயங்களின் மஹிமையினால் கடந்து பிரக்யாதி பெற்றவர்களுள் இவரே முக்கிய நிதர்சனமாவார்! ஒரு சமயம் ஒரு பெரிய கலெக்டர், சிவக்ஞானம் டிபுடி கலெக்டராக விருந்தபோது இவர் ஒரு பழைய நாளைய உத்தியோகஸ்தர் என்று எண்ணி, போர்டாபீஸ் விதிகள் பிரகாரம் ஒரு கிராமத்தின் தலையாரி செய்ய வேண்டிய வேலையை இவர் செய்யவேண்டுமென்று ஆக்ஞாபித்தபோது, அதை இவர் எதிர்த்துச் சுயமரியாதையைக் காப்பாற்றிக் கொண்டது, சட்டசபையில் கேட்கப்பட்ட கேள்விகள் மூலம் பொது மக்களுக்கும் தெரியும். ஸர் சிவக்ஞானம் பிள்ளை பென்ஷன் பெற்றுக் கொண்ட பின்பு சட்டசபைக்குத் தேர்ந்தெடுக்கப்பட்டு, அபிவிருத்தி மந்திரியாகப் பதவி ஏற்றுக்கொண்டார்.

உடம்புக்கு எப்போதும்
சுகம் வேண்டும்.

குடிகூரா டால்கம் (Cuticura Talcum) தூள் சாதாரணமான தூள் அல்ல. அது உல்லாசமும், ஆரோக்கியமும் ஆசரிக்கச்செய்யும், ஏனென்றால் அது ஒரு விசேடமான முறையாக மருந்தூட்டிச் செய்யப்பட்டது. குடிகூரா டால்கம் (Cuticura Talcum) தூள் அதிக சுத்தமும் நேர்த்தியுமானது; அதர்க்கு ஈடானதூள் ஒன்றும் கிடையாது. அது பக்கு வந்த இடங்களைத் தேற்றி உடனே சுகமுண்டாக்கிறது. வேர்வை விடுவதை இந்தத்தூள் தணிக்கிறது. திரேக முழுதற்கும் அது உல்லாச சுகத்தைக் கொடுக்கிறது. வைத்தியர்கள் குழந்தைகளுக்கு உபயோகப் படுத்தும்படியாக சிபார்சு செய்திருக்கிறார்கள்; நோயாளிகளுக்கும், சமுசாரத்திலிருக்கும் ஒவ்வொருவருக்கும் உபயோகப்படுத்தும் படியாக சொல்வியிருக்கிறார்கள்; ஏனென்றால் இந்த தூள், அதிக சுத்தமானது மல்லாமல் மகா சவுக்கியத்தைக் கொடுக்கும்.




குடிகூரா டால்கம்(Cuticura Talcum) தூளின் வாசனை ஒப்பில்லாதது. அது இனிப்பான பரிமள வாசனையோ டிருப்பதுமல்லாமல், தோலை அதிக அழகாக்கி சந்தோஷத்தை உண்டுபண்ணும். அது உடம்புக்கு வாசனையும் கொடுக்கும்.

எல்லா மருந்து கடைகளிலும், பஜார்களிலும் வாங்க அகப்படும்.

குடிகூரா டால்கம்
CUTICURA TALCUM

இன்றைக்கு ஒரு டப்பி குடிகூரா டால்கம் (Cuticura Talcum) தூள் வாங்கு.

NO MORE
GREY HAIR




வெள்ளையாயிருக்கும் கூந்தலை இயற்கை அழகுடனிருக்கச் செய்யுங்கள்—கேஷ்கலா கூந்தலுக்குப் புதிய அழகைக் கொடுக்கும்—கேஷ்கலாவையே உபயோகித்து உண்மையை உணர்வீர்.

KESHKALA
RESTORES NATURAL TINT

Obtainable from:—
அப்பா & கம்பெனி, சைனாபஜார் ரோட், மதராஸ் வி. ஜே சேத், பந்தர் தெரு, மதராஸ். டி. ஷேகுஸ்தான் & கம்பெனி, டெங்களூர் ஸிடி & கண்டோன்மெண்டு. ஸ்ரீ கணேஷ் மார்ட், ராஜா தெரு, கோயமுத்தூர். எக்ஸ்-ப-பேல்வா, பிரின்ஸ் தெரு, கொழும்பு.
Further Inquiries to:—
KESHKALA CHEMICAL CO., P.O. Box No.(M)5506. Bombay 14.

குமார சஞ்சீவினி
ரிஜிஸ்டர்ட்
குழந்தைகளின்
ஈரல்-குலை-ஜுரக்கட்டி
வியாதிகளுக்கு
நிகாற்ற குணமுடையது
ஸ்ரீ வைத்தியர், அண்ணாமலை முதலியார்
வைத்தியர் அண்ணாமலை தெரு, மயிலாப்பூர், சென்னை

இக்காலத்தில் இவர் தமது மனதிற்கு விரோதமில்லாமலும், விஷயங்கள் யாவற்றையும் கூர்ந்து கவனித்தும் நிர்வகித்து வந்தார்; இக்குணாதிசயங்கள் இவரது வாழ்க்கை முழுதிலும் இவரிடம் சோபித்தவை. ஆனால் அரசியல் பிரவேசத்திலுள்ள சிக்கல்கள், ராஜிகள், யதோசிதங்கள் ஆகியவை நிரம்ப சாதாரணமானதும் நேரானதும் ஆன வழியைப் பின்பற்றிய இவருக்குப் பிடிக்கவில்லை. அரசியல் போன்ற விஷயங்களில் அபிப்பிராய பேதம் கொண்டிருந்த போதிலும் இவர் தமது சிநேகிதர்களிடம் ஒரே அபிமானத்தை எப்போதும் காட்டி வந்தார். ஆனால் இவர் தமது சுகதுக்கங்களைத் திடமனதாகப் பகிர்ந்து வந்த இவரது பழைய சேலம் நண்பர்களுக்கு இவரன்றி இவ்வுலகம் வேறு விதமாகத்தான் காணப்படும்" என்று திவான் பஹதூர் ஸர். டி. விஜயராகவாச்சாரியார் இப்பெரியாரின் மரணத்திற்குச் சில தினங்களுக்குப் பின்பு ஒரு பத்திரிகையில் வித்தியாப்பியாஸம் எழுதினார்.

திவான்பஹதூர் ஸர். டி. என். சிவக்ஞானம் பிள்ளை 1861-ம் வருஷம் ஏப்ரல் மாதம் முதல்தேதியன்று மிகவுயர்ந்த ஒரு சைவ வேளாளர் குடும்பத்தில் நெல்லியப்பா பிள்ளை என்பாரின் புத்திரராகத் திருநெல்வேலியில் பிறந்தார். இவரது பிதா கஸ்டம்ஸ் ஆபீஸ் சூபரின்டெண்டாக அங்கு இருந்தார். ஆரம்பத்தில் இவரது குடும்பம் மிக்க எளிய நிலைமையில் இருந்தது. மதுரையில் எலெக்ஷன் கமிஷனராகவிருக்கும் ஸ்ரீமான் டி. வ. சுப்பய்யா பிள்ளையவர்களின் பிதாவான இவரது சகோதரர் அந்நாளில் இவருக்கு வேண்டிய ஸஹாயத்தைச் செய்தார். இவரது வித்தியாப்பியாசத்தில் அவர் முக்கிய சிரத்தையெடுத்துக் கொண்டார். அவரே இவரைப் படிப்பிற்காகச் சென்னைக்கும் திருநெல்வேலியிலிருந்து அனுப்பினார். முதலில் இவர் சில காலம் தூத்துக்குடியில் படித்தார். பின்பு திருநெல்வேலி ஆங்கிலோ—வர்னாகுலர் ஹைஸ்கூலில் (இப்போது ஹிந்து காலேஜ்) படித்து மெட்ரிகுலேஷன் பரிக்ஷையில் இவர் தேறினார். உடனே சென்னை வந்து கிறிஸ்துவர் கலாசாலையில் இவர் மாணாக்கரானார். 1882-ம் ஆண்டில் இவர் "பி. ஏ." பட்டமும் ஸ்வீகரித்துக்கொண்டார்.

### சர்க்கார் உத்தியோகங்கள்

உடனேயே இவர் கவர்ன்மெண்ட் உத்தியோகத்தில் புகுந்துவிட்டார். ஆரம்பத்தில் இவர் சென்னை ரெவினியூ போர்டாபீஸில் ஒரு அக்கௌண்டண்டாக நியமிக்கப்பட்டார். மறு வருஷம் இவர் தஞ்சாவூர் கலெக்டராபீஸில் மூன்றாவது குமாஸ்தாவாக வெளியே அனுப்பப்பட்டார். கும்பகோணம் சப் கலெக்டராபீஸ் தலைமை குமாஸ்தாவாகவும் இவர் சீக்கிரத்தில் நியமிக்கப்பட்டார். தஞ்சை ஜில்லாவில் ஹுஸூர் சிரஸ்ததாராகவிருந்த ஸ்ரீ டி. எஸ். முத்துஸ்வாமி பிள்ளை என்பவரிடமிருந்து இவர் உத்யோக விவரங்கள் பூராவையும் கிரஹித்துக் கொண்டார். 1889-ல் இவர் டிபுடி தாசில்தாராக எடுத்துக் கொள்ளப்பட்டு, வேதாரண்யம், தஞ்சாவூர் முதலியவிடங்களில் பதவியை வகித்தார். 1894-ல் இவர் ஹுஸூர் சிரஸ்ததாராகவும் ஸ்தானம் கொடுக்கப்பட்டார். இதற்கிடையே இவர் சீர்காழி, பட்டுக்கோட்டை, திருக்கோயிலூர் முதலியவிடங்களில் தாசில்தாராகவும் வேலை பார்த்தார். 1896-ம் வருஷம் மே மாதம் இவர் கடைசியாக டிபுடி கலெக்டர் ஸ்தானத்திற்கும் உயர்த்தப்பட்டார். இவ்வருஷம் டிசம்பர் மாதம் இவர் கும்பகோணத்தில் மகாமகத்தின்போது எல்லா ஏற்பாடுகளையும் சரிவரச் செய்வதற்காக நியமிக்கப்பட்டார். இச்சமயத்தில் இவரது வேலைத்திறமையை அரசாங்கத்தாரும் நன்கு சிலாகித்தனர். தவிரவும் இவருடன் இக்காலத்தில் பழகிய ஐரோப்பிய உத்தியோகஸ்தர்களும் இவரை மிகவும் மதித்தனர். இவர் டிபுடி கலெக்டராகப் பல வருஷங்கள் இருந்தார். இவர் பல ஜில்லாக்களிலும் வேலை பார்த்தார். ஆகவே இவருடன் பழகியவர்கள் யாவரும் இவரது குணாதிசயங்களைப் பாராட்டாமல் இருந்தது கிடையாது. தவிரவும் குமாஸ்தாவாக உத்தியோகம் ஆரம்பித்த இவருக்கு, வெகு சீக்கிரத்தில் டிபுடி கலெக்டர் ஸ்தானம் இவரது பெருமை காரணமாகக் கிடைத்ததாகும்! இதற்கிடையில் 1901-ம் வருஷ இறுதி முதல் சுமார் இரண்டு வருஷ காலம் இவர் சென்னை ரெவினியூ செக்ரடேரியட் ஆபீஸில் இரண்டாவது, முதலாவது

(31-ம் பக்கம் பார்க்க)


## முத்திரிக்கப்பட்ட தேன்.

தேனீக்கள் புஷ்பங்களிலிருந்து தேனைச் சேமித்துக் கொண்டுவந்து கூட்டின் தட்டிலுள்ள அறைகளில் சேகரம் செய்து வைத்த பின்னர் அவைகளின் தேகத்திலிருந்து வெளிப்படும் உஷ்ணத்தைக்கொண்டு அத்தேனிலுள்ள நீரை ஆவியாகப் போக்கி, அந்த அறைகளின் வாயை மெல்லிய மெழுக்குத்துண்டால் மூடி "முத்திரை" போட்டுவிடும். அத்தகைய முத்திரிக்கப்பட்ட தேன் நெடுநாள் வரை கெடாமலும், அதிக உருசியுள்ளதாயும், உண்ண இனிமையாகவும் இருக்கும். முத்திரிக்கப்படாததோ வென்றால் சீக்கிரத்தில் புளிப்பேறி, நுரைத்து சுவை கெட்டுப்போவதினால் சாப்பிடத்தக்கதன்று.

அவ்வாறே **T. S & Co.,** என்ற "முத்திரை" போடப்பட்ட 3, 5, 7 பவுன் துணிப்பைகளில் விற்கப்படும் காப்பிக்கொட்டையை வாங்கினால் உத்திரவாதமுள்ள கலப்பற்ற அசல் நீலகிரி சரக்கைப் பெறுவீர்கள். போலிச்சரக்குகளையும் பச்சைச்சாயமேற்றின காப்பியையும் வாங்கி ஏமாந்து போகாதீர்கள்; பைகளின் பேரில்,

REGISTERED. S. & CO., TRADE MARK.

என்ற வியாபாரக்குறியுண்டோ என்று கவனித்து வாங்கவும்.

# டி. ஸ்டேன்ஸ்&கம்பெனி,

## கோயமுத்தூர்.



## வலி உடனே ஒழியும்

ஆட்மேன்ஸ் ஸைப்ரஸ் ஸால்வ் (ரிஜிஸ்டர்ட்)
(பெயின் பாம்)



அற்புதமான பலன்; தலைவலி, கீல்பிடிப்பு முதலிய எதுவாயினும் சரி, இதைத் தடவினால் உடனே சௌக்கியமேற்படும். இன்றே வாங்கிப்பாருங்கள்; பிறகு இதில்லாமலிருக்கமாட்டீர்கள். விலை புட்டி 1-க்கு ரூ. 1. வி. பி. செலவு தனி. 2 அணா ஸ்டாம்பனுப்பினால் சாம்பிள் கிடைக்கும்.

மொத்த ஏஜண்டுகள்:
The Anglo Indian Drug & Chemical Co., Bombay 2.



குணமுற்றது மலிவுற்றது தீங்கற்றது

நஞ்சன்கூடு பல்பொடி

ஹைகோர்ட் உரிமை தீர்ப்பு பெற்றது

சாதாரணம் புதுபாக்கெட்

பாலக்ஸ் ஜிஞ்சிப் கூலாயில் ஜவரேக் மகாரத்வஜ

ஸோல ஏஜண்ட்ஸ்: யுனைட்டட் கன்ஸர்ன், 54, பந்தர தெரு, மதராஸ்.

டிப்போ: 42, செட்டி தெரு, கொழும்பு.
201, மொகல் வீதி, ரங்கூன்.



# செவிடு

"டெப்கில்லர்" செவிட்டுத் தன்மையை சாசுவதமாகப் போக்கிவிடும். இன்னும் காதில் ஏற்படும் இதர கோளாறுகளையும் அகற்றிவிடும். எவ்வளவு நாள்பட்ட செவிடாகவிருந்தாலும் சரி, சிறிதும் சந்தேகமின்றி நிரந்தரமாக நிவர்த்திக்கப்படும்; செவிடர் செவ்வையாகச் செவியுறுகிறார். கால்செவிடு, அரைச்செவிடு அல்லது முழுச்செவிடு எதுவாகவிருந்தாலும் அக்கரையில்லை; நீண்டகால ஜலதோஷம், இருமல், ஜுரம், தொண்டைக் கோளாறு, மூக்குக்கோளாறு முதலிய எக்காரணங்களால் ஏற்பட்ட செவிடாயினும் சரி குணமாகிவிடும். சீழ்வடிதலும் நின்றுவிடும். ஆயிரக்கணக்கானவர்கள் குணம் பெற்றிருக்கின்றனர். விலை ரூ. 5; தபால் செலவு 9அணா.

எல்லா முதல்தர கெமிஸ்டுகளிடமும் கிடைக்கும்.

ஹோல்ஸேல் ஸ்டாக்கிஸ்ட்ஸ்:—அப்பா அண்டு கம்பெனி, 286, சைனா பஜார் ரோட், மதராஸ்.

## கண்ணோட்டம் பிரமுகர்கள்



திருவாங்கூர் லாதின் கிறிஸ்துவர் சபையின் பொதுக்காரியதரிசி மிஸ். ஆனி மெஸ்கரினி, எம்.ஏ., பி. எல்.



அலஹாபாத் சேவா சமிதிச் சாரணர் சங்கத்தால் சென்னை மாகாணத்தில் நிர்வாகக் கமிஷனராக நியமிக்கப்பட்டிருக்கும் ஸ்ரீமான் எஸ். ஆர். வெங்கட்ராமன்.



காரைக்கால் மேயராகத் தேர்ந்தெடுக்கப்பட்டிருக்கும் மிஸ்டர் தாமஸ் அருள்.



சென்னை சர்வகலாசாலையின் புதிய உப அத்யக்ஷகர் திவான் பஹதூர் எஸ். இ. ரங்கநாதன்.



நங்க பர்வத மேறுவதற்காக இந்தியா வந்துள்ள ஜெர்மன் கோஷ்டியின் தலைவர் டாக்டர் வீன்.



மலபார் ஜில்லாபோர்டுக்குப் பாலக்காடு ஸ்திரீகள் தொகுதியிலிருந்து தேர்ந்தெடுக்கப்பட்ட ஸ்ரீமதி வ. பி. ருக்மிணி நித்யாரம்மா.



மைசூர் சமஸ்தான விவசாய இலாகா டைரக்டராக நியமிக்கப்பட்டிருக்கும் ஸ்ரீமான் டி. ஜி. ராமய்யர்



சென்னை நிலவரித் திருத்தக் கமிட்டித் தலைவர் ஸர் சார்மன் மார்ஷ்பாங்க்ஸ்



# நவ நாகரீகம்

## உபசாரம்

(காசினி எழுதியது.)

* * * 'எங்கள் ஊர் பண்ணைவீட்டுப் பெண்ணுக்குப் போனவாரம் கலியாணம் நடந்தது. தடபுடலாக நாலு நாள் கலியாணம் பண்ணி, பூம்பல்லக்கு ஜோடித்து ஊர்கோலம் விட்டார்கள். 'பணம் கொட்டிக்கிடக்கிறதே! ஒரு மோட்டாரைத் தருவித்து ஊர்கோலம் விடப்படாதோ? எப்போ பார்த்தாலும் இட்டிலியையும், உப்புமாவையும் காபியையும் சாப்பிடச் சொல்லி உபசாரம் பண்ணுகிருவே; வெயிலோ தஹிக்கிறது. ஏதாவது 'கூல்-ட்ரிங்க்' வைத்து நாகுக்காக உபசரிக்கப்படாதோ? எவ்வளவு சிர் பண்ணிஞல் என்ன? செலவு எவ்வளவோதான் ஆகி இருக்கும். சௌகரியமாக, ஒரு நாளைக் கலியாணமாகப் பண்ணக்கூடாதோ?' என்றெல்லாம் எங்கள் பக்கத்தாத்து மாட்டுப்பெண் பழித்தாள். இவள் வேளை தவருமல் அவர்கள் வீட்டிற்குப் போனதற்கு என்னமோ குறைச்சல் இல்லை. கடைசியில் கர்நாடகம் என்று சொல்லி, மின்சார விளக்கில்லாத பந்தலுக்குச் சோபையே கிடையாது என்றும் சொன்னுள். பல்லக்கைவிட மோட்டார் என்ன அழகு? வந்தவர்களை உபசரிக்கலாம்; இதை நாகுக்காகச் செய்வது எப்படி? 'லஸ்டர்' விளக்குகள் நன்ருகத்தானே இருக்கிறது?' இதெல்லாம் என்ன நாகரீகம்?' என்று நீ கேட்டிருக்கிருய்.



சென்னை மாஜி ஹைகோர்ட் ஜட்ஜ் திவான்பகதூர் வி. பாஷ்யமய்யங்கார் பேரனும் டாக்டர் வி. ராமய்யங்கார் குமாரனுமான சக்ரபாணிக்கும், சென்னை அட்வகேட் ஸ்ரீமான் வி. ஸ்ரீனிவாஸாசாரியாரின் குமாரி ஹேமாவதிக்கும் விவாகம் நடந்தது.

ஒரு நாளை கலியாணம் செய்வதுதான் இப்பொழுது சர்வ சாதாரணமாக நடக்கிறதே? ஆனல், வந்த விருந்தினர்களுக்கு இது சௌகரியமாக இருந்தபோதிலும், வீட்டுக்காரர்கள் நல்ல சிரமப்படுகிருர்கள் என்றே சொல்லவேண்டும். நாலு நாளைக் கலியாணத்தில் எல்லாரையும் சாப்பாட்டிற்கு அழைப்பார்கள்; அவர் அவர்கள் சௌகரியத்திற்கு ஏற்ருப்போல், சாப்பிட்டுவிட்டுப் போவார்கள். ஒரு நாளைக் கலியாணத்தில் என் அத்தை சொல்லுவதுபோல் இரவில் கனவான்கள் டின்னர் கட்டாயமாக நடந்தாக வேண்டும். இதனல், காலையில் ஸ்திரிகளைப் பிரத்தியேகமாகச் சாப்பாட்டிற்கு அழைக்கும் ஏற்பாடு இப்பொழுது வந்திருக்கிறது. மாலையில் பாட்டுக் கச்சேரி, சாப்பாட்டிற்கு அழைக்க முடியாத சிநேகிதர்களுக்குத் தேக் கச்சேரி, ஊர்கோலம், தவிர கலியாணச் சடங்குகள்; மூச்சு விட நேரமில்லாமல் வேலை இருக்கிறது என்றே கூறவேண்டும். இவைகளைச் சுருக்கிக்

(29-ம் பக்கம் பார்க்க)



### மற்ற முக க்ரீம்களை நான் விட்டு விட்டேன்

டாகெட் & ராம்ஸ்டேல் மேலான கோல்ட் க்ரீம் ஏற்பட்டதும்

முக வசீகரத்தைப் பெருக்கும் விஷயத்தில் நாளுக்கு நாள் மண்டையை உடைத்துக்கொள்ளவேண்டாம்; நல்ல வசீகரத்துடனிருப்பவரைக் கண்டு பொருமைப்படவேண்டாம். டாகெட் & ராமஸ்டெல்ஸ் மேலான கோல்ட் க்ரீமை ஒரு தடவை உபயோகித்துப்பாருங்கள்; இது நன்கு ஊடுருவிச் சென்று, சுத்தம் செய்கிறது; சருமத்திற்கு மிருதுத்தன்மை யூட்டுகிறது; வேறெந்த க்ரீமும் இதுமாதிரி செய்யாது. இரவிலும், காலையிலும் இதை உபயோகியுங்கள்; உங்கள் சருமம் எவ்வளவு அழகுடன் விளங்குகிறதென்பதைக் காணுங்கள்.




Daggett & Ramsdell



வேலையற்ற ஸ்திரீகள் உதவிக்காக சென்னை ராயப்பேட்டையில் ஸ்ரீமதி ஜி. விசாலாக்ஷி அம்மாள் "பாகினி சேவா சமாஜ"த்தைத் திறந்துவைத்தார்.



லாகூர் ஆங்கிலோ-தமிழ்ப் பள்ளிக்கூடத்தைச் சேர்ந்த மாணவர்களும், மாணவிகளும் இவர்கள் ஹிந்தி பிராத்மிக் பரிக்ஷையில்தேறியிருக்கின்றனர்.

# இந்திய வர்த்தமானம்

### சணல் தொழிலாளர் வேலை நிறுத்த முடிவு

சென்ற இரண்டுமாத காலமாக வங்காளத்தில் நடந்து வந்த தொழிலாளர் வேலை நிறுத்தம் முடிவுக்கு வந்து விட்டது. தொழிலாளர்கள் சங்கங்கள் அங்கிகரிக்கப்பட வேண்டும், தொழிலாளருடைய சம்பள விகிதங்கள், இதர குறைகள் இவை சம்பீந்தமாக விசாரணை நடத்துவது, வேலை நிறுத்தத்தில் சம்பந்தப் பட்டிருந்தவர்கள் மீது எவ்வித நடவடிக்கையும் எடுத்துக் கொள்வதில்லை முதலிய நிபந்தனைகள் ராஜி ஒப்பந்தத்தில் சேர்க்கப்பட்டிருக்கின்றன.

* * * *

### தாயின் அன்பு

அருப்புக்கோட்டை தாலூகா பாளச்சேரி கிராமத்தில் நடந்த ஒரு கோர சம்பவம் பற்றிய விவரம் கிடைத்திருக்கிறது. பேச்சி என்ற 5 வயதுச் சிறுமி தன் தாயுடன் கிணற்றுக்குச் சென்றாள். தாய் தண்ணீர் இறைத்துக் கொண்டிருந்தாள். சிறுமி விளையாட்டாகக் கற்களைக் கிணற்றில் எறிந்துகொண்டிருந்தாள். எப்படியோ தவறிச சிறுமி கிணற்றில் விழுந்து விட்டது. பெற்றவள் மகளைக் காப்பாற்ற கிணற்றில் விழுந்து விட்டாள். வயலில் வேலை செய்துகொண்டிருந்தவர்கள் இதைக் கவனித்து ஓடி வந்து சிறுமியையும் தாயையும் காப்பாற்ற முயற்சி செய்தார்கள். மிக்க கஷ்டத்துடன் சிறுமி காப்பாற்றப்பட்டாள். ஆனல், தாயார் தண்ணிரில் மூழ்கி மாண்டாள்.

* * * *

### மந்திரிகளைப் பேட்டி காணக்கூடாது

சமீபத்தில் அலஹாபாத்தில் நடைபெற்ற காங்கிரஸ் காரியக் கமிட்டிக் கூட்டத்தில் பின்கண்ட தீர்மானம் நிறைவேற்றப்பட்டிருக்கிறது:—

காங்கிரஸ் பெரும்பான்மையாகவிருக்கும் மாகாணங்களில் சட்ட விரோதமாக நியமிக்கப் பட்டுள்ள மந்திரிகளெனப்படுவோருடன் மாகாண சட்ட சபைகளிலுள்ள காங்கிரஸ் அங்கத்தினர்கள் எவ்விதச் சம்பந்தமும் வைத்துக்கொள்ளக் கூடாதென்றும் அவர்களைப் பேட்டி காணக்கூடாதென்றும் இக்கமிட்டி தீர்மானிக்கிறது.

மற்ற மாகாணங்களில் காங்கிரஸ் கக்ஷித் தலைவரின் வெளிப்படையான முன் அனுமதி பெற்று காங்கிரஸ் அங்கத்தினர்கள் மந்திரிகளைக் கண்டு பேச வேண்டும்.

* * * *

### குழந்தையின் அபார சாமர்த்தியம்

மூன்று அல்லது நான்கு வயதுள்ள குழந்தை ஜான்ஸியிலிருந்து சாகார் என்னும் ஊருக்கு வந்திருப்பதாகவும், அக்குழந்தை பிறவிக் குருடு என்றும், அது ராமாயண சுலோகங்களை மனப்பாடமாகச் சொல்லுகிறதென்றும் நாகபுரியிலிருந்து செய்தி கிடைத்திருக்கிறது. அக்குழந்தையைப் பார்க்கப் பிரதிதினமும் ஏராளமான ஜனங்கள் வந்து கொண்டிருக்கின்றனராம்.

* * * *

### காளை மாட்டின் அதிசய சக்தி

விசேஷ சக்திவாய்ந்த காளை மாடொன்று ஷேக்புரா ஜில்லாவிலிருக்கிறது. இதற்குப் போலாநாத் என்று பெயர். பல நகரங்களிலும் இதன்

* * *


அரிய சந்தர்ப்பம்! முந்துங்கள்!!




பெண்கள் கோடை காலத்தில் அடுப்படியில் கஷ்டப்பட வேண்டியதில்லை. இன்றே ஒரு ருக்மணி குக்கர் அடுக்கை வாங்குங்கள். 1 மணி நேரத்தில் சாதமும் 5 வித பதார்த்தங்களும் செய்யலாம்.




விபர புஸ்தகம் இனம்.
கீழ்கண்ட ஊர்களில் எமது குக்கர் பட்டணம் விலைக்கே கிடைக்கும்.

பித்தளை தகட்டின் விலை ஏறிக்கொண்டு வருவதால் குக்கர்களின் விலையும் ஜூன்மீ முதல் உயர்த்தப்படலாம். ஆகையால் உடனே வாங்கிக் கொள்ளுங்கள். 1, 2, 4, 6, 8, 12, 16 பேர்களுக்குரிய குக்கர்கள் முறையே 9, 12, 16, 21, 26, 32, 38 ரூபாயாகும்.

[ஏஜண்டில்லாத ஊர்களுக்கு ஏஜண்டு தேவை.]

## ருக்மணி குக்கர் கம்பெனி,

ராயபுரம் (12) சென்னை.

ஏஜண்டுகள்:

ரங்கூன்:—ஸ்ரீ கணேஷ் ஸ்டோர்ஸ், 127, பிகாண்டட் தெரு,
கல்கத்தா:—தி சௌத் இந்தியன் கோவாபரேடிவ் ஸ்டோர்ஸ். 114-B லான்ஸ் டௌனி ரோடு, காளிகட்டம்,
ஹைதராபாத்:—M. B. சுப்பராவ், 942, ஹனுமான் தேக்கடி.
மாத்துங்கா: (பம்பாய்):—தி சௌத் இண்டியன் கன்சர்ன்ஸ், லிமிடெட்., மோகன் மான்ஷன், டெலாங் ரோடு, மட்டுங்கா.
பூனா:—லார்ட் ரீயே இண்டஸ்டிரியல் மியூசியம், ரீயே மார்க்கட்.
மைசூர்:—சாபி & கோ., லான்ஸ் டௌனி பில்டிங்ஸ்.
பெங்களூர் சிட்டி:—இண்டஸ்டிரியல் & கம்மர்சியல் கோவாபரேடிவ் ஸொஸைடி லிமிடெட், சிடி மார்க்கட்.
மதராஸ்:—ஜெனரல் சுதேசி ஸ்டோர்ஸ், லிமிடெட், ஹைகோர்ட் எதிரில்.
,, தேசபந்து கம்பெனி, 288, சைனுபஜார் ரோடு.
,, பிரசிடென்ஸி ஸ்டோர்ஸ், 578, பைகிராப்ட்ஸ் ரோட், திருவல்லிக்கேணி.
,, மதராஸ் சுதேசி எம்போரியம் லிமிடெட், வில்லிங்டன் சினிமா பக்கம், மௌண்ட்ரோட்.
வேலூர்:—S. V. நாதம் & கோ., ஜெனரல் மர்ச்சண்ட், லாங் பஜார்.
சேலம்:—சுதேசி எம்போரியம், போலீஸ் ஸ்டேஷன் எதிர்.
திருவண்ணமலை:—ராவ் சாகிப் M. S. சேஷாசலமய்யர், பால்மடம்.
ஈரோடு:—கிருஷ்ணு & கோ., ஜெனரல் மர்ச்சண்ட், கடைவீதி.
கோயமுத்தூர்:—பெனரிஸ் சில்க் ஸ்டோர்ஸ், 115, ராஜவீதி.
உதகமண்டலம்:—சுதேசி எம்போரியம், கமர்ஷியல் ரோடு, காஷ் பஜார், ஊட்டி.
பாலக்காடு:—கிருஷ்ணு மெடிகல் & ஜெனரல் ஸ்டோர்ஸ், காந்தி ரோடு.
திருச்சூர்:—வர்க்கூர்ஸ் லிமிடெட், திரௌண்டு.
திருவனந்தபுரம்:—இந்தியன் எம்போரியம், மெயின் ரோடு.
திருநெல்வேலி:—P. K. சாமி & கோ., தெற்கு ரத வீதி.
நாகர்கோயில்:—சென்ட்ரல் ஸ்டோர்ஸ், கடைத்தெரு,
தூத்துக்குடி:—S. S. காளியப்ப நாடார், கிரேட் காட்டன் ரோடு.
மதுரை:—மதுரை சிடி கோவாபரேடிவ் ஸ்டோர்ஸ், லிமிடெட், 987, நாயகர் புது வீதி.
காரைக்குடி:—சாரதா ஸ்டோர்ஸ், கல்லுக்கட்டி.
புதுக்கோட்டை:—சம்பந்தம் & கோ., லிமிடெட், கீழவீதி.
திருச்சி:—S. முத்துக்குமாரசாமி பிள்ளை, ஜெனரல் மோட்டார் ஸ்டோர்ஸ், மேலப்புலிவார் ரோடு.
கரூர்:—S. K. ராஜகோபால் செட்டியார், ஷாப், திண்டுக்கல்ரோடு.
பொன்மலை:—M. R. சுவாமி & பிரதர்ஸ். ரைஸ் & ஜெனரல் மர்ச்சண்ட்.
தஞ்சாவூர்:—பெனரிஸ் சில்க் எம்போரியம், கீழ ராஜவீதி.
நாகப்பட்டணம்:—நாஷனல் எம்போரியம் லிமிடெட்.
கும்பகோணம்:—சுதேசி ஸ்டோர்ஸ் லிமிடெட், 1858, பெரிய கடைவீதி.
மாயவரம்:—டீச்சர்ஸ் & பியூபில்ஸ் கோவாபரேடிவ் ஸ்டோர்ஸ் லிமிடெட், மகாதானத் தெரு.
கடலூர்:—R. மீனாக்ஷிசுந்தரம் செட்டியார், சோடா பாக்டரி, திருப்பாப்புலியூர்.
விழுப்புரம்:—K. சுப்ரமணிய ஐயர், 7, ஹனுமார் கோவில் கிழக்கு அக்ராகாரம்.



ஹாங்காங் துறைமுகத்தைப் பிரிட்டிஷார் அரண் செய்திருக்கின்றனர்.

விசேஷ சக்திகளை இதன் சொந்தக்காரர் காட்டி வருகிறார். பஞ்சாப் மிருக சிகித்ஸை இலாகாத் தலைவர் மிஸ்டர் டி. எப். கர்க்கியும் இந்தக் காளையைப் பார்த்து அதன் அதிசய சக்திகளைப் பரீக்ஷித்திருக்கிறார். இதன் செய்கைகளில் அவர் மிகுந்த ஆச்சர்யமடைந்திருக்கிறார்.

காளைமாட்டின் சொந்தக்காரர் மூலம் கேட்கப்படும் கேள்விகளுக்கெல்லாம் இந்தக் காளைமாடு பதிலளிக்கிறது. இதன் சொந்தக்காரருக்கு பதில் தெரியக்கூடிய கேள்விகளுக்கு மாத்திரமல்லாமல் அவருக்குப் பதில் தெரியக் கூடாத கேள்விகளுக்குக்கூட காளைமாடு பதில் அளிக்கிறது. மாட்டுச் சொந்தக்காரருக்கு முன்பின் தெரியாத கூட்டத்திலுள்ள ஒருவர் பெயரைச் சொன்னால் அவரிடம் இந்த மாடு சென்று அவரைக் குறிப்பிட்டுக் காட்டுகிறது.

இக்கேள்விகள் கேட்கும் பொழுது இந்தக் காளையினுடையவும் காளையின் சொந்தக்காரருடையவும் கண்களை மூடினால்கூட அதில் எவ்விதப் பாதகமுமேற்படுவதில்லை. வாய் திறக்காத நிலைமையில் காளை பதிலளிக்கக் கூடியவாறு, தகுந்தபடி கேள்விகள் கேட்டால் சென்றகாலம், வருங்காலத்தைப்பற்றிய கேள்விகளுக்குக் கூட இந்த மாடு பதிலளிப்பதாகக் கூறப்படுகிறது.

* * * *

### குரங்கின் அட்டஹாஸம்

தூத்துக்குடியில் ஒரு குரங்கு செய்த அட்டஹாஸம் அங்கு பரபரப்பையும் பீதியையும் உண்டாக்கியிருக்கிறது. சுப்பய்யா பண்டிதன் ஒரு குரங்கை வளர்த்து வந்தான். இரண்டு மாதங்களுக்கு முன் அது எஜமானனைக் கடித்துக் காயமுண்டுபண்ணியது. அதனால் குரங்கு கட்டப்பட்டிருந்தது. பிறகு ஒருநாள் குரங்கு கட்டிலிருந்து விடுவித்துக்கொண்டு நகரின் பல தோட்டங்களை அழித்து வந்தது. அது சென்ற 6-ந் தேதி எஜமானன் வீட்டிற்கு அடுத்துள்ள ஒரு மாத்தில் உட்கார்ந்துகொண்டிருந்தது. அப்பொழுது சுப்பய்யா பண்டிதன் மகள் தன் $1\frac{1}{2}$-வயதுத் தம்பியுடன் பால் வாங்கிக்கொண்டு வந்துகொண்டிருந்தாள். குரங்கு சிறிக்கொண்டு துரத்தவே, அவள் குழந்தையை நடுத் தெருவில் விட்டு ஓடினாள். குரங்கு குழந்தைமீது பாய்ந்து படுகாயப்படுத்திக் குடலைக் கிழித்துக் கொன்றுவிட்டது. குரங்கைச் சுட்டுக் கொல்ல உத்தரவிடப்பட்டிருக்கிறது.

* * * *

### மாருதி கோயிலில் சத்தியாக்ரஹம்

பூனாவிலுள்ள மாருதி கோயிலில் மணி அடிக்கக் கூடாதென்று ஜில்லா மாஜிஸ்திரேட் உத்தரவிட்டதை எதிர்த்து சத்தியாக்ரஹம் நடைபெற்று வருகிறது. நூற்றுக் கணக்கானவர் கைது செய்யப்பட்டிருக்கின்றனர். பிரபல மஹாராஷ்டிரத் தலைவரான ஸ்ரீமான் என். ஸி. கேல்கர் ஸத்யாக்ரஹம் செய்து கைது செய்யப்பட்டார். பிறகு அவர் சொந்த ஜாமீனில் விடுதலை செய்யப்பட்டார். ஸத்தியாக்ரஹம் செய்வதற்கு முன் அவர் ஒரு கடிதம் எழுதியிருந்தார். அதில் பின் வருமாறு எழுதினார்:—நான் எப்பொழுதும் சட்டத்திற்குட்பட்டு அமைதியான வழியில் நடப்பவன். பொதுவாழ்விலிருந்து விலகிக்கொள்வதென்றும் நான் தீர்மானித்துவிட்டேன். ஆனால், அரசியல் உணர்ச்சி இன்னும் என்னை விட்ட கலவில்லை. அதிகாரிகளின் அநீதப் போக்கின் கொடுமை இதை:விடக் கேவலமாக விருப்பதற்கில்லை. ஜில்லா மாஜிஸ்திரேட்டின் உத்தரவு சுத்த ஆபாசமாகும். தன் மதிப்புள்ள எந்த ஹிந்துவுக்கும் இதை மறுப்பது தவிர வேறு வழியில்லை. எப்படியும் நான் மணி அடிக்கப்போகிறேன். மணியை அடிக்க வேண்டுவது தான். உத்தரவும் நாசமாகப் போகவேண்டுவதுதான்.

* * * *

### ஜெட்லண்டு அறிக்கையும் காந்திஜியின் பதிலும்

பிரபுக்கள் சபையில் லார்டு ஜெட்லண்டு ஒரு கேள்விக்குப் பதிலளிக்கையில் இந்திய நிலைமையைப்பற்றிப் பின்வருமாறு கூறினார்:—

வெகு சமீபத்தில் காங்கிரஸ் விடுத்துள்ள அறிக்கையில் தான் கேட்ட உறுதிமொழி இல்லாவிட்டால் பொதுஜன ஆதரவைப் பெற்ற மந்திரிகளின் வேலையில் அடிக்கடி ஆத்திரமூட்டத்தக்கவாறு தலையிடப்படுமெனப் பிரிட்டிஷ் சர்க்காரின் பழைய நடவடிக்கைகளும் தற்போதைய மனோபாவமும் நிரூபிப்பதாகத் தெரிவிக்கப்பட்டிருக்கிறது. இதற்கும் சட்டத்தின்படிப் பொதுஜன ஆதரவைப்பெற்ற மந்திரி சபைகள் வேலை செய்யும் முறைக்கும் மிகுந்த வித்தியாசமுண்டு.

(28-ம் பக்கம் பார்க்க)

மற்ற பக்கங்களில்


| | |
|---|---|
| வழிடும் கடவுள் (சரித்திரப்பகுதி) | 2 |
| விநோதக்கொத்து | 4 |
| தியாகம் (சிறு கதை) | 5 |
| தென்னிந்தியப் பிரமுகர்கள் | 9 |
| கண்ணோட்டம்-பிரமுகர்கள | 11 |
| நவநாகரீகம் | 12 |
| இந்திய வர்த்தமானம் | 13 |
| புஸ்தக விமர்சம் | 15 |
| ஸங்கீதப்பகுதி | 16 |
| கரும்பூதம் (புதிய தொடர்கதை | 23 |
| பிரபஞ்ச வர்த்தமானம் | 27 |
| நாட்டு நடப்பு-சித்திரக் கண்ணாடி | 30 |
| மரியாதைராமன் கதை | 34 |
| விதியின் விளையாட்டு (ஹாஸ்யப்பகுதி) | 35 |
| ஜோதிர்மண்டலம் | 37 |
| துப்பறிந்த மன்னன் (சிறுவர் பகுதி) | 39 |



ஆராய்ச்சி பூர்வமான
நவீன மருந்துகள்

மேத்தாஸ் காப் மிக்சர் : எல்லாவகையான இருமல் நோய்களுக்கும், க்ஷயரோகத்திற்கும் கைகண்ட ஒளஷதம்.

விலை புட்டி 1-க்கு ரூ. 2.

கே. எஸ். மேத்தா & கம்பெனி,

பிரபல மருந்து வியாபாரிகள்.

234, சைனா பஜார் — மதராஸ்.

மாதுளை மணிகளொத்த பற்கள்

நீங்கள் வெற்றிலை போட்டு மென்ற பிறகு பார்த்தால் உங்கள் பற்கள் மாதுளை விதைகளைப போல இருக்கும்; "நீம் டூத் பேஸ்ட்" உங்கள் பற்களை அவ்வளவு அழகாகச் சுத்தம் செய்யும். "நீம் டூத் பேஸ்ட்" உபயோகித்தால் உங்களுக்குப் பல் வலியே ஏற்படாது; ஈறுகளினின்றும் இரத்தம் பெருகும் தொந்தரவும் இருக்காது; பயரியாவின் ஆரம்பக் குறிகளாகிய இவற்றினின்றும் நீங்கள் விடுபடுவீர்கள். இன்றே "நீம் டூத் பேஸ்ட்" உபயோகிக்கத் தொடங்குங்கள்; எவ்விதமான பல் உபத்திரவமுமின்றி வாழ்வீர்கள்.



'Neem'
TOOTH-PASTE



ஸ்பானியக் கலக்காரர்களின் யுத்தக் கப்பல் ''வெலாஸ்கோ''

# புஸ்தகவிமர்சம்

——[ o ]——

## பிரஸன்ன குமாரி

[ஸ்ரீமதி வி. ராதாமணி இயற்றியது. கிடைக்குமிடம், ஆசிரியர், 28 நடுத்தெரு, மைலாப்பூர், சென்னை. விலை அணா 12.]

நாடகத்தின் பலாபலன்கள் அனேகம். ஒரு சரித்திரத்தையோ, நீதியையோ மனதில் பதிய வைப்பதற்கு உதவுவதன்றி கலைவளர்ச்சிக்கும் நாடகம் உதவுகிறது. ஆனால் ஒரு நாடகம் அது நடிக்கப்படுவதற்கான எல்லா அம்சங்களும் உடையதாகவிருக்கவேண்டும். இத்தகைய நாடகங்கள் நம் தாய் பாஷையில் குறைவாகவே இருக்கின்றன. பிரஸன்னகுமாரி என்ற நாடகம் நாடகமேடையில் நடிப்பதற்கு ஏற்றதாயும் முற்கால உயர் லக்ஷியங்களை அடிப்படையாகக் கொண்டதாயுமிருக்கிறது. இதன்கதைப் போக்கு உன்னதமானது. வஞ்சகமும் சூழ்ச்சியும் பலிக்காதென்பதையும், கடவுளை நம்பினோர் கைவிடப்படார் என்பதையும், உண்மை யன்பின் வெற்றியையும் காட்டுகிறது. ஆசிரியை ஆங்காங்கு பல பழமொழிகளையும், பழைய பாட்டுகளையும் கையாண்டிருப்ப நரஸமாகவிருக்கிறது. தமிழ் நாட்டினர் இதை ஆதரித்து இதுபோல் மற்றும் பல நூல்கள் வெளிவருவதற்கு ஆதரவளிப்பார்களென்று நம்புகிறோம்.

* * * *

## டால்ஸ்டாய்

[டால்ஸ்டாய் சரித்திரம்; டால்ஸ்டாய் சிறு கதைகள். ஸ்ரீமான் ஆக்கூர் அனந்தாச்சாரி இயற்றியவை. முதற் புத்தகம் விலை அணா 5; இரண்டாவது அணா 6. கிடைக்குமிடம்: கிட்டப்பா பிரசுராலயம், செங்கோட்டை.]

மேற்கூறப்பட்டுள்ள இரு நூல்களையும் எழுதியுள்ள ஸ்ரீமான் அனந்தாச்சாரியாரை தமிழ் நாட்டினர் அறிவார்கள். சிறந்த தேச பக்தர்; காந்தியத்தில் ஈடுபட்டவர். டால்ஸ்டாயின் கொள்கைகளுக்கும் மகாத்மா காந்தியின் கொள்கைகளுக்கும் பல ஒற்றுமைகள் இருக்கின்றன. ஆகையால், ஆசிரியர் டால்ஸ்டாயினிடம் ஈடுபட்டு அவரது சரித்திரத்தையும், அவர் இயற்றிய கதைகளில் சிலவற்றையும் பிரசுரிக்கமுன்வந்தது பொருத்தமேயாகும். டால்ஸ்டாயின் சரித்திரம் முன்பு ஒரு முறை வெளியாகி இப்பொழுது இரண்டாம் பதிப்பு வந்திருக்கிறது. இதில் பல புதிய விஷயங்கள் சேர்க்கப்பட்டிருக்கின்றன.

டால்ஸ்டாய் ஓர் பெரிய பணக்காரக் குடும்பத்தில் பிறந்து, உயர் பதவிகளிலிருந்து ஏழைகளின் துன்பத்தைக் கண்டு சகியாது அதை ஒழிக்க முன்வந்தவர். வாழ்வின் இன்பங்களை அனைவரும் அனுபவிக்க வேண்டுமென்ற அவாக்கொண்டவர். அவர் பின்பற்றிய வழிகளுக்கும் அதே போன்ற துன்பங்களை நீக்க மகாத்மா கையாண்டு வரும் வழிகளுக்கும் வித்தியாஸமிருந்த போதிலும் காந்திஜி அவரிடம் அபாரமான மதிப்புக்கொண்டவர். டால்ஸ்டாய் தமது வாழ்க்கையில் பல நூல்களை எழுதியிருக்கிறார். அவற்றில் முக்கியமான சில கதைகளே பிரசுரமாகியிருக்கின்றன. அவர் வாழ்க்கைச் சரித்திரமும், அவரது நூல்களும் இந்தியாவுக்கு வழிகாட்டியாகவிருக்குமென்பதில் சந்தேகமில்லை. ஆகையால் தமிழ்நாட்டினர் இப்புத்தகங்களை ஆதரித்து டால்ஸ்டாயின் கதைகள் மேலும் புத்தக ரூபமாக வெளி வருவதற்கு உதவுவார்களென்று நம்புகிறோம்.

* * * *

## ஸ்ரீமான் எஸ். ஜி. கிட்டப்பா சரித்திரம்

[ஸ்ரீமான் ஆக்கூர் அனந்தாச்சாரி எழுதியது. கிடைக்குமிடம் கிட்டப்பா பிரசுராலயம், செங்கோட்டை, விலை அணா 4.]

இப்புத்தகம் மூன்றாவது பதிப்பாகும். இதிலிருந்தே காலஞ்சென்ற நடிகர் திலகம் ஸ்ரீமான் கிட்டப்பா தமிழ் நாட்டினரால் எவ்வாறு மதிக்கப்பட்டார் என்பதும், அவரது சரித்திரத்தை அறிந்து கொள்ள நாட்டினர் எத்தகைய அவாக்கொண்டிருக்கின்றனர் என்பதும் தெரியவரும். இப்புதிய பதிப்பில் முன் பதிப்புகளில் காணப்படாத பல புதிய விஷயங்கள் சேர்க்கப்பட்டிருக்கின்றன. ஸ்ரீமதி கே. பி. சுந்தராம்பாள் ஸ்ரீமான் கிட்டப்பாவை வாழ்க்கைத் துணைவராக ஏற்றுக்கொண்டது, அவர்களிடையே நடந்த கடிதப் போக்குவரத்து, அக்கடிதங்கள் முதலியவை இப்புத்தகத்தில் பிரசுரமாகி இருக்கின்றன. தென்னாட்டுப் பிரபல சங்கீத வித்வான்களும் தேசியத் தலைவர்களும் ஸ்ரீமான் கிட்டப்பாவின் குணாதிசயங்களைப்பற்றியும், சங்கீதத் திறமையைப் பற்றியும் கொடுத்துள்ள, அபிப்பிராயங்களையும் ஆசிரியர் வெளியிட்டிருக்கிறார். மேலும் கிட்டப்பாவின் பல புதிய படங்களும் சேர்க்கப்பட்டிருக்கின்றன. இவற்றையுத்தேசித்து இப்புத்தகம் தமிழ் நாட்டினரின் ஆதரவிற்குப் பாத்திரமாகுமென்று நம்புகிறோம்.

* * * *


### பயனற்றவை வேண்டாம்.

இந்த ஆயிலை உபயோகித்தால் தலை நரை ஏற்படாது; வெள்ளை மயிர் கறுமை பெறும். தவறினால் இரட்டிப்பு விலையைத் திருப்பிக் கொடுக்க உத்தரவாதம். பாதி நரைக்கு ரூ. 5; அதிக நரைக்கு ரூ. 9. BAL KALA STORES., P. O. Kansisimri, (Darbhanga.)

### வருஷப்பலன்

மாதவாரி ஒருவருஷப்பலன் எழுத ரூ. 3 வாராந்திர பலன் எழுத ரூ. 10. தர்ம நியாயமான 5 கேள்விகளுக்கு பதில் எழுத ரூ. 1. வி. பி. செலவு 5 அணா. ஜாதக விவரம் அல்லது கடிதம் எழுதும்போதுள்ள நேரம், சுமார் வயது, பெயர் தேவை.

ஹனுமான் ஜோதிஷ ஆச்ரமம்,
திருத்தணி, S. இந்தியா.

ESTD. 1893.

சவரன்மாத்து தங்க நகைகளும் முதல் தரமான வைரங்களும் அசல்வெள்ளி சாமான்களும்

உத்திரவாதத்துடன் கிடைக்குமிடம் எங்கே?

வீகம்ஸி சபீல்தாஸ் & சன்ஸ்.
50 வருஷங்களாய் பிரக்யாதிபெற்றவர்கள்
112. சைனாபஜார் ரோட்டு மதராஸ்

# த்யாகராஜ கீர்த்தனம்.

[காபிரைட்.]

ஸங்கீதவித்வான் காஞ்சி பி. பி. ஸ்ரீனிவாஸய்யங்கார், பி. ஏ. எழுதியது.

I

பல்லவி

சிவ சிவ சிவ என ராதா?—ஓரி!
பவபய பாதல நணசுகோ ராதா? (சிவ)

சரணங்கள்

1. காமாதுல தெககோஸி, பர—பாமல தனமுல ரோஸி
பாமரத்வமு னெடபாஸி, அதி—நேமமுதோ பில்வார்ச்சனஜேஸி (சிவ)
2. ஸஜ்ஜன கணமுல காஞ்சி, ஓரி!—மஜ்ஜகதீச்வருனி மதினெம்சி
லஜ்ஜாதுல தொலகிம்சி, தன—ஹ்ருஜ்ஜலஜமுனனு தாபூஜிம்சி (சிவ)
3. ஆகமமுலனு நுதிம்சி, பஹு—பாகுலேனி பாஸல சாலிஞ்சி
பாகவதுல போஷிம்சி, வர—த்யாகராஜ ஸன்னுது லனியெம்சி (சிவ)

II

| | |
|---|---|
| ஓரி | —அடே! |
| காமாதுல தெக கோஸி | —காமம் முதலிய உட்பகைகளைச் சேதித்தொழித்து |
| பரபாமல (பர) தனமுல ரோஸி | —இதரர்களுடைய ஸ்திரீகளையும் இதரர்களுடைய பொருளையும் (பற்றி ஆசைப்படாமல்) வெறுத்தொதுக்கி, |
| பாமரத்வமுனு எடபாஸி | —அஞ்ஞானத்தைப் போக்கி |
| அதிநேமமுதோ பில்வார்ச்சன ஜேஸி | —அதிக நியமத்துடன் பில்வ தளங்களால் சிவ பெருமானைப் பூஜை செய்து, |
| ஸஜ்ஜனகண முல காம்சி | —ஸாதுக்களின் கூட்டங்களை ஆச்ரயித்து, |
| மத்ஜகதீச்வருலனி மதின் எஞ்சி | —அந்த ஸாதுக்கள் எம்மையாளும் ஜகதீச்வரர்கள் என்று மனத்திற் கொண்டு, |
| லஜ்ஜா துல தொலகிம்சி | —(பக்தி செய்யும் விஷயத்தில் அந்தஸ்து முதலியவைகளைக் கருதாமல்) லஜ்ஜையை அகற்றி, |
| தனஹ்ருத் ஜலஜமுன்னுதா பூஜிம்சி | —தன் ஹ்ருதயகமலத்தில் அவர்களை அர்ச்சித்து, |
| ஆகம முலனு நுதிம்சி | —ஆகமங்களைப் பாராட்டி, |
| பஹு பாகுலேனி பாஸல சாலிம்சி | —ஒழுங்கற்ற பேச்சை ஒழித்து, |
| பாகவதுல போஷிம்சி | —பக்தர்களைக் கொண்டாடி, |
| வரத்யாகராஜ ஸந்நுதுலனி எம்சி | —(அவர்களை) தியாகராஜனால் கொண்டாடப்படும் மிக்க சிரேஷ்டர்களென மனத்திற்கொண்டு, |
| சிவ சிவ சிவ எனராதா? | —சிவ, சிவ, சிவ என்று நாமஸ்மரணை செய்யக்கூடாதா? |
| பவபயபாதலனு அணசுகோராதா | —ஸம்ஸார பயம் பாதைகள் இவற்றை அடக்கக்கூடாதா? |

III

இந்தக்கிர்த்தனத்தில் பல்லவி, அனுபல்லவி, சரணமென்ற வேறுபாடுகள் காணப்படவில்லை. எனினும் சில நூல்களில் 'பவபய......ராதா?' என்பதை அனுபல்லவியெனக் குறிப்பிட்டுச்சிலர் அச்சிட்டிருக்கிறார்கள். கீர்த்தனையின் அமைப்பை நோக்கும்போது முற்கூறப்பட்டதே பொருத்தமென்பது தெளிவாகும்.

இதில், சிவபெருமானுடைய நாமகீர்த்தனம், குணகீர்த்தனம், பக்தி, த்யானம், சிவபக்தர்களிடத்தன்பு இவற்றின் பொருட்டு ஒவ்வொருவரிடமும் இருக்கவேண்டிய யோக்யதாம்சங்கள் இவற்றைப்பற்றி ஸ்வாமிகள் விசாரிக்கிறார்.

ஓரி:—இது மனத்தை ஸம்போதனம் செய்வதாகும்.

பவபய...ராதா?—'பவ'த்தைப் போக்கவல்லவர் 'பவ'னாகிய சிவபெருமானேயாவர். ஆதலால், சிவத்யானமும் சிவபக்தர்கள் பால் அன்பும் செய்யக்கூடாதா என்று வினவுகிறார்.

காமாதுல:—காமம் முதலிய உட்பகைகள் மக்கள் உஜ்ஜீவிப்பதற்குப் பெருந்தடைகளாயிருப்பவை. ஆகையால் அவற்றைச் சேதித்து ஒழித்தல் வேண்டும். காமாதிகள், காமம், க்ரோதம், லோபம், மோஹம், மதம், மாத்ஸரியம் ஆகிய இவைகளாம்.

பரபாமல தனமுல:—'த்யானமே வரமைன' என்ற கீர்த்தனத்தில் 'பரதன நாரீமணுலனு தூரி'—(இதரர்களுடைய தனத்தையும் ஸ்திரீகளையும் வெறுத்து) என்று ஸ்வாமிகளே கூறியிருப்பது ஒப்பு நோக்கற்பாலது.

பாமரத்வமு:—பகவத்யானம் செய்வோர்களுக்கு அற்பபுத்தியும் அஞ்ஞானமும் பரம சத்ருக்களாகும்.

நேம முதோ:—இதற்குப் பதிலாக, 'ப்ரேமரூபுடை பில்வார்ச்சன ஜேஸி' என்றும் பாடம் வழங்குகின்றது.

ஸஜ்ஜனகணமுல காம்சி:—மனுஷ்யப் பிறவியும், மோக்ஷ இச்சையும், மஹான்களின் ஸம்ஸர்க்கமும் மனிதர்களுக்குக் கிடைத்தற்கரியவை யென்றும், இவை கிடைப்பது முறையே ஒன்றற்கொன்று அதிகக் கஷ்டமானவையென்றும், இவை தெய்வானுக்கிரகத்தாலும் பூர்வ புண்யகர்மத்தாலும் மட்டுமே கிடைக்கத் தக்கவையென்றும், விவேக சூடாமணியில் சங்கர பகவத் பாதாள் அருளிச் செய்திருக்கிறார்கள். ஸாதுக்கள் நம்மை யாட்கொள்வதற்கென்று உலகில் தோன்றிய மஹாத்மாக்களென்று நாம் கருத வேண்டும். சிவனடியார்களைக் கண்டவிடத்துச் சிவபெருமானையே கண்டதாகக் கருத வேண்டும். பேறடைவதற்கு, குரு, லிங்க, சங்கமங்கள் மார்க்கமாகச் சைவ சித்தாந்திகளால் கூறப்பட்டிருக்கிறது. (குரு—ஆசார்யப் பிரதிபத்தி; லிங்கம், சுவாமி வழிபாடு; சங்கமம்—சிவனடியார் திருக்கூட்டத்தின் வழிபாடு.]

லஜ்ஜாதுல:—கடவுள் வழிபாட்டிலும் அடியார் வழிபாட்டிலும் அநேகர் தாங்கள் உலக விவகாரங்களில் வகிக்கும் அந்தஸ்தையும் பெருமையையும் கருதி, பகிரங்கமாக நடந்து கொள்வதில்லை: இது தவறு. பகவானுடைய சின்னங்களைத் தரிப்பதிலும், பகவந் நாமங்களைச் சொல்லுவதிலும், பக்தர்கள் வழிபாட்டிலும் மெய்ம்மறந்து இருப்பவர்களே பாக்கியவான்கள். அப்படிப்பட்டவர்களைக் குறித்துத்தான் 'ஆடிப்பாடி அரங்கவோ என்றழைக்கும் தொண்டர்

(18-ம் பக்கம் பார்க்க)




கீழ்க்கண்ட இடங்களில் பிராஞ்சுகள்:

பம்பாய் — ரங்கூன் — ஆண்ட்வர்ப்

அடிப்பொடி ஆடநாம் பெறில் கங்கை நீர் குடைந்தாடும் வேட்கை என் ஆவதே' என்பதுபோன்று திருவாக்குக்களால் குலசேகராழ்வார் மனமுருகிப் பாடியிருக்கிறார். "விஸ்ருஜ்யலஜ்ஜாமய: அதீதே, மந்நாமானி நிரந்தரம் குலகோடி ஸமாயுக்த: லபதேமாமகம் பதம்"—[வெட்கத்தைவிட்டு என்னுடைய நாமங்களை எவன் இடைவிடாமல் கீர்த்தனம் செய்கிறனோ அவனும் அவனுடைய தலைமுறைகளத்தனையும் என் பரமபதத்தை யடைகிறார்கள்] என்றும் கூறப்பட்டிருக்கிறதல்லவா?—'லஜ்ஜையைவிட்டுக் கஜ்ஜையைக் கட்டு' எனவும் ஆப்த வசனம் வழங்குகிறதல்லவா?

ஆகமுலனு:—நம் ஸநாதன தர்மத்தில் வேதங்களும் ஆகமங்களும் ஸகலத்திற்கும் ப்ரமாணங்களாகக் கருதிப் போற்றப்படுகின்றன. வேதங்கள் நான்கும் மூலாதாரமான நூல்கள். அவற்றின் கொள்கைகளை விளக்கவும், பூர்த்தி செய்யவும் ஆகமங்கள் ஏற்பட்டவை. அவை விஷ்ணு, சிவன், சக்தி ஆகியவர்களைப்பற்றின மூன்று வகைகளாக அமைந்தன. விஷ்ணுவைப் பற்றிய ஆகமங்கள், ஸநத்குமாரஸம்ஹிதை முதலான அறுபத்திஞன்கு கிரந்தங்களாம். சிவனைப்பற்றியவை, காமிகம் முதலிய இருபத்தெட்டு கிரந்தங்களாம். சக்தியைப்பற்றியவை யாமளதந்த்ரம் முதலிய அறுபத்திஞன்கு கிரந்தங்களாம். சதாசிவமூர்த்தி ஈசானம் தவிர்த்த மற்ற நான்கு முகங்களிலிருந்து காருடம், வாமம், பூததந்த்ரம், முதலான ஆகமங்களையும், ஈசானத்திலிருந்து 28 சிவாகமங்களையும் அருளினர்.

சிவாகமங்கள் 28-ம் பின் வருவனவாம்: காமிகம், யோகஜம், சிந்த்யம், காரணம், அஜிதம், தீப்தம், ஸூக்ஷ்மம், ஸஹஸ்ரம், அம்சுமான், ஸுப்ரபேதம், (இவை சிவபேதங்கள்); விஜயம், நிச்வாஸம், ஸ்வாயம்புவம், ஆக்நேயம், வீரம், ரௌரவம், மகுடம், விமலம், சந்த்ரஞானம், முகபிம்பம், ப்ரோத்கீதம், லலிதம், ஸித்தம், ஸந்தானம், ஸர்வோத்தமம், பாரமேச்வரம், கிரணம், வாதுலம், (இப்பதினெட்டும் ருத்ர பேதங்களாம்). இவைகள், வக்த்ராரம் முதல் விச்வாத்மகம் வரையிலுள்ள 208 பிரிவுகளைக் கொண்டவை.

இவை பொதுவாக பரமசிவனுடைய ஈசான முகத்தினின்றும் தோன்றினவென்று கூறப்படுவதோடு, இவற்றுள், முதலைந்தும், கௌசிக ரிஷியின்பொருட்டு ஸத்யோஜாதம் என்ற முகத்தினின்றும், அடுத்த ஐந்தும், காச்யப ரிஷியின்பொருட்டு வாமதேவம் என்ற முகத்தினின்றும், அடுத்த ஐந்தும், பாரத்வாஜ ரிஷியின்பொருட்டு அகோரமென்ற முகத்தினின்றும், அடுத்த ஐந்தும், கௌதம ரிஷியின்பொருட்டுத் தத்புருஷ முகத்தினின்றும், கடைசி எட்டும் அகஸ்த்ய மஹரிஷியின்பொருட்டு ஈசான முகத்தினின்றும் தோற்றுவிக்கப்பட்டனவென்று கூறப்படுகின்றது.

ஆகமங்கள் பகவானுடைய பாதங்கள், முகம், குண்டலம், பரியட்டம் முதலியவைகளாகக் கருதப்படுகின்றன.

'ஆகம' என்ற சொல்லில் 'ஆ' என்ற எழுத்து ஞானத்தையும் 'க' என்ற எழுத்து மோக்ஷத்தையும், 'ம' என்ற எழுத்து மல நாசத்தையும் குறிக்கும். ஆன்மாக்களின் மும்மலங்களையும் நாசம் செய்து, உண்மை ஞானத்தை உண்டாக்கி, முக்தியை அளிப்பதால் இந்த நூல்கள் ஆகமங்களென்று பெயர்பெற்றன என்று பெரியோர் கூறுவர். பகவானாலேயே அருளிச் செய்யப்பட்டவைகளாதலால் இவற்றிற்கும் வேதங்களுக்கும் பேதமில்லையென்க.

ஆகமங்கள் கூறும் சாதனங்கள் நான்கு; அவை சரியை, கிரியை, யோகம், ஞானம் என்பனவாம். அவற்றுள், நித்ய நைமித்திக கார்யங்கள் பிராயச்சித்தம் சிராத்தம், சிவலிங்க லக்ஷணம் முதலியவை சரியையைப்பற்றின பாகத்திலும்; மந்த்ரங்கள், ஜபம், ஹோமம், சாந்தி முறைகள் தேவாலய நிர்மாணம், விக்ரஹ ப்ரதிஷ்டை முதலியவை கிரியையைப்பற்றின பாகத்திலும், ப்ராணயாமம் முதலிய அஷ்டாங்கயோக விவரங்கள் யோகத்தைப்பற்றின பாகத்திலும், பதிபசுபாசம் முதலியவற்றைப்பற்றிய ஸ்வரூப லக்ஷணங்கள் ஞானபாகத்திலும் கூறப்படும்.

பாஸல சாலிம்சி:—'பயனில் சொல்லாமை' முதலியவற்றைப்பற்றித் திருக்குறள் முதலிய நூல்கள் விவரிப்பதைக் கவனிக்கவும்.

பாகவதுல போஷிம்சி:—பகவானுடைய ஆராதனத்தைவிடப் பாகவதர்கள் ஆராதனமே சிறந்ததென்பதும், பகவதபசாரத்தைவிடப் பாகவதாபசாரமே அதிகத் தீமையைப் பயக்கவல்லதென்பதும் பெரியோர்கள் கண்டறிந்த உண்மை. அம்பரீஷ சக்ரவர்த்தியின்பால் அபசாரப்பட்ட துர்வாஸ மஹரிஷியும், ஸீதாபிராட்டியின் பால் அபசாரப்பட்ட காகாஸுரனும் இளைய பெருமாள்பால் அபசாரப்பட்ட ஸீதாபிராட்டியும் பட்டபாட்டையறியாதவர்களார்?

வர...நதுலனி:—'வர' என்ற பதத்தை 'த்யாகராஜ' என்பதோடு சேர்த்துப் பொருள் கொள்ளுவதைவிட 'நதுலனி' என்ற பதத்தோடு சேர்த்துப் பொருள் கொள்ளுவதே சிரேஷ்டமானது.

[இந்தக் கீர்த்தனத்தின் கருத்துக்களை 'ஸம்ஸாருலைதே னேமைய' என்ற கீர்த்தனத்தின் கருத்துக்களோடு ஒப்பிடுக.]

IV

**காமவர்த்தனி** **ஆதிதாளம்**

இந்த ராகம் 72 மேளகர்த்தா முறையின்படி, 51வதாகும். இதையே 'பந்துவராளி' என்று கூறுவது வழக்கமாயிருக்கிறது. ஆனால் 'பந்துவராளி' என்பது சுபபந்து வராளி (வேங்கடமகியின் மதப்படி சிவபந்து வராளி) யேயாகும். சுப, அல்லது 'சிவ' என்பது 'கடபயாதி' ஸங்க்யாவிதிப்படி 45 என்ற எண்ணைக் குறிக்க ஏற்பட்ட எழுத்துத் தொடராகும். இந்த ராகத்தில் அவரோஹணத்தில் பஞ்சமவர்ஜமான பல பிரயோகங்கள் அழகாக இருக்கும்.

**பல்லவி**

| | | | | | | |
|---|---|---|---|---|---|---|
| ; * | ஸ்ஸா-நிதா | பாமா-கரிகா | பமபம | கா ; | ; ; | கம பத |
| ; * | சிவ-சிவ | சிவ-ய ன | ரா... | தா ; | ; ; | ஓ...... |
| நிஸ் * | ஸ்ஸா நிதா | பாமா-கரிகா | பமபம | கா ; | ; ; | கம பம கரி |
| ரி * | சிவ-சிவ | சிவ-ய ன | ரா...... | தா ; | ; ; | ஓ...... |
| ஸரி * | கமா-பதா | நீ ; ஸ்ஸா | ஸ்நிரிஸ் | நிதபம | பம கரி | கம பத |
| ரி * | பவ-பய | பா ; தல | ந ண | சு கோ | ரா... | தா...... |
| நிஸ் * | | | | | | |
| ... * | (சிவசிவசிவ) | | | | | |

**சரணம்**

| | | | | | | |
|---|---|---|---|---|---|---|
| ; * | ஸ்ா, நிதா | பாமா-காமா | பா | மா கா ; | ; ; | கம பத |
| ; * | கா, மா | துல-தெக | கோ... | லி ;.. | ; ; | ...... |
| நிஸ் * | ஸ்ா, நிதா | பாமா-காமா | கம | பம கா ; | ; ; | கா கா |
| ... * | கா, மா | துல-தெக | கோ... | லி ;... | ; ; | பா |
| ; * | கமா-கரீ | ஸாரீ-காகா | மபதநி | தப மப | கரி | ரீஸா ; |
| ; * | பா-மல | தன-முல | ரோ... | ......... | லி...... | ; |
| ; * | பா ; தா நீ ; | ஸ்ா ஸ்ா | ; | ஸ்ஸ்ஸா ; | ஸ்நிதா | நீஸ்ா ; |
| ; * | பா ; ம ர ; | த்ல மு | , | நெடபா ; | லி... | யதி |
| ; * | ஸ்ாஸ்ா-ஸ்நிதா | தா மா மா | கமபம | கரி ரிஸ | ரீ ; | கம பத |
| ; * | சேம-மு...... | ஜோ பில் | வா...... | ர்ச்சன | ஜே ; | லி... |
| நிஸ் * | | | | | | |
| ... * | (சிவசிவசிவ) | | | | | |

இதர சரணங்களையும் இவ்வாறே பாடவேண்டும்.



ஸ்ரீ ஷண்முகானந்தா டாக்கிஸாரின்

“பாலாமணி” அல்லது “பக்காத் திருடன்”

என்ற தமிழ்ப் பேசும் படத்தில் கதாநாயகியாக நடிக்கும் ஸ்ரீமதி ஜெயாள்.




ஹெர் ஹிட்லர் உருவமுள்ள ஸ்டாம்புகள் சென்ற மாதத்தி லிருந்து ஜெர்மனியில் வெளியிடப்பட்டிருக்கின்றன.



காலஞ்சென்ற பிரபல டச்சுக்காரரான சித்திர மெழுதுபவர் ரெம்ப்ரான்ட். எழுதிய டச்சுராணி ஜூனோவின் படம்.



மன்னர் மகுடாபிஷேக மெடல்கள் இங்கிலாந்திலும் குடியேற்ற நாடுகளிலுமுள்ளவர்களுக்குக் கொடுக்கப் படும்.



சூயஸ் கால்வாயில் ஒட்டகையைக் குளிப்பாட்டுதல்.





குடும்பத்தினர் அனைவருக்கும் உபயோகமான ஸைக்கிள். இது அமெரிக்காவில் கண்டுபிடிக்கப்பட்டிருக்கிறது.



அயர்லாந்திலுள்ள மெயின் ஆற்றில் ஒரு கிராமவாஸி வாள்கொண்டு பனிக்கட்டியை அறுக்கும் காட்சி.

(இடதுபக்கம்) வட இந்தியாவில் புகழ்பெற்றுவிளங்கிய ஜாலவித்தைக்காரர் ஒருவருக்கு பம்பாய் செயின்ட் ஜார்ஜ் ஆஸ்பத்திரியில் ரண சிகித்சை செய்து கத்திகள், சாவிகள் முதலியன எடுக்கப்பட்டன. இவருடைய வித்தை பலிக்காமல் அபாயமேற்படும் நிலையிலிருந்தார். இதைப்பற்றிய விவரமான செய்தி மே 2-ந்தேதி வாரப்பதிப்பில் 18-ம் பக்கத்தில் வெளியாயிருக்கிறது.



ஜெர்மனியிலுள்ள எல்ப் ஆறு. ஸாக்ஸொனி மலையிலிருந்து எடுத்த படம்.



"அமைதி" ஓர் இந்தியக் காட்சி.

நமது தொடர் கதை



# கரும்பூதம்

அல்லது

# கள்வனைக் காதலித்த காரிகை

[திருச்சி ஸ்ரீமான் கே. வி. எஸ். வாஸ், பி. ஏ. (ஆனர்ஸ்) எழுதியது.]

### முன் கதைச் சுருக்கம்.

**பாஸ்கரம் பிரபு** விஜயபுரியில் மிகுந்த செல்வவந்தர். அவருக்கு, கமலா, ஹிமாவதி என்ற இரு பெண்களுண்டு. மூத்தவளான கமலாவுக்கும் குணசீலம் பிரபுவின் ஒரே குமாரன்

**ஜயந்தனுக்கும்** பீஜப்பூர் கிராமத்திலுள்ள மாளிகையில் விவாகம் நடைபெறப்போகிறது. பாஸ்கரம்பிரபு விவாகத்திற்கான நகைகளை எல்லாம் விஜயபுரியிலுள்ள தமது "மன்மத விலாஸ" மாளிகையில் வைத்திருக்கிறார். துப்பறியும் இலாகா போலீஸ் கமிஷனர்

**துளஸிதாஸ்** நகைகளைப் பாதுகாத்து வருகிறார். ஆனால் கரும்பூதம் பாஸ்கரம் பிரபுவைப்போல் நடித்து மன்மத விலாசத்திற்கு வந்து வைரமாலையைக் கவர்ந்து செல்லுகிறான்.

**கரும்பூதம்** வீடு சென்ற சிறிது நேரத்திற்கெல்லாம் டெலிபோனில் ஒரு பெண் கூப்பிட்டு, "அங்கு பேசுவது கரும்பூதம்தானே" என்று வினவுகிறாள். தன் ரகசியம் தெரிந்துவிட்டதே என்று கரும்பூதம் மனம் புழுங்குகிறான். பிறகு தான் கரும்பூதம் என்பதை ஒப்புக்கொள்ளுகிறான். டெலிபோன் மாதின் வேண்டுகோள்படி கரும்பூதம் தான் கவர்ந்துவந்த நவரத்ன மாலையை பாஸ்கரம் பிரபுவின் வீட்டிலேயே மறுபடியும் கொண்டு போய் வைத்துவிடுகிறான்.

## அத்தியாயம்......3

## நளினம்.

**க**ரும்பூதம்! உம், கரும்பூதமாவது, செம்பூதமாவது! மிரண்டவன் கண்களுக்கு இருண்டதெல்லாம் பேய் தான்!" என்றிவ்வாறு அலக்ஷியமாகச். சொல்லிக்கொண்டே சுருட்டைப் பற்றவைத்த சுதர்சனம் பிரபுவைப் பக்கத்திலிருந்தவர்களெல்லாம் கூர்ந்து நோக்கினார்கள்.

நேயர்களே! இந்த சந்தர்ப்பத்தில் நமது கதையின் போக்கிற்குச் சுதர்சனம் பிரபுவையும் அவருடைய குடும்பத்தையும்பற்றி இடையில் சில விஷயங்களைக் குறிப்பிடவேண்டியது அவசியமாக இருக்கின்றது. அவருக்குத் தற்சமயம் சுமார் நாற்பது வயதிருக்கலாம். விஜயபுரியைச் சேர்ந்த பிர[illegible]ல தனவந்தர்களின் கோ[illegible]யில் அவரும் ஒருவர்.

அவருடைய மின்சாரத் தொழிற்சாலையும், வாசனைத் திரவிய சாலைகளும் உலகப் பிரசித்தி பெற்றவைகள். பர்மாவிலும் இலங்கையிலும் அவருக்கு அனேக தேயிலைத் தோட்டங்களும், வட்டிக் கடைகளுமிருக்கின்றன. இவைகளைத் தவிர பற்பல சில்லரை அலுவல்களிலும் அவர் அவ்வப்பொழுது ஈடுபட்டு வருவதுண்டு.

கட்டுமஸ்தான சரீரமும், காகத்தைவிடக் கருத்த மேனியுமுடைய சுதர்சனம் பிரபு இன்னமும் மணமின்றியே தமது காலத்தைக் கடத்தி வருகின்றார். சிற்றின்ப விஷயங்களில் அவருடைய மனம் பிரவேசிப்பது கிடையாது. களியாட்டங்களிலும் அவருடைய சிந்தை செல்லுவதில்லை. சர்வதா பொருள் திரட்டுவதிலேயே அவர் கண்ணும் கருத்துமாக இருப்பார். வாழ்க்கையைப்பற்றி நினைக்கவோ அல்லது உலக சுகங்களையனுபவிக்கவோ அவருக்கு அவகாசம் கிடைப்பதில்லை.

சுதர்சனம் பிரபுவிற்கு நளினம் என்னோர் சகோதரியுண்டு. கன்னிப்பருவத்திலிருக்கும் அவளுக்கு நமது கதை ஆரம்பமாகும் காலத்தில் சுமார் பதினெட்டு அல்லது பத்தொன்பது வயதிற்கு மேலிருக்க முடியாது. செல்வி நளினம் நவநாகரிகத்தின் நன்மை தீமைகளை நன்கறிந்தவள். அவள் ஆடவர்களுடன் கூச்சமின்றி நெருங்கிப் பழகுவதையும், பெரிய பொதுக்கூட்டங்களில் பயமின்றிப் பிரசங்கம் செய்ய முன்வருவதையும் கவனித்தால், இவள் வீட்டினுள் அடைபட்டுக் கிடக்கும் இந்தியப் பெண்களின் இனத்தைச் சேர்ந்தவள்தானாவென்று எவரும் சந்தேகிப்பார்களென்பது நிச்சயம். அவளுக்கு நடனத்திலும் சங்கீதத்திலும் அபாரமான பாண்டித்யமுண்டு.

செல்வி நளினத்தின் குணாதிசயங்களில் முக்கியமாக மூன்று விஷயங்கள் குறிப்பிடத்தக்கவை. முதலாவதாக, ஒழுக்கம் தவறி நடப்பவர்களை அவள் கட்டோடு வெறுக்கும் சுபாவமுடையவள். இரண்டாவதாக, பிறருடைய சக்தியையும் சாமர்த்தியத்தையும் பொறாமையின்றிப் பெருந்தன்மையுடன் ஒப்புக்கொள்ளக்கூடியவள். மூன்றாவதாக, வறுமையினாலும் வியாதிகளினாலும் வருந்தும் மக்களை கண்ணினால் காணச்சகியாத இளகிய மனமுடையவள். ஏழைகளின் இல்லங்களிலெல்லாம் செல்வி நளினத்தின் நாமதேயம் பக்தியுடனும் பிரியத்துடனும் ஸ்மரிக்கப்படுவதை அனேகமாக எல்லோருமறிவார்கள். தர்மகைங்கர்ய விஷயமொன்றில்தான் அவளுக்கும் அவளுடைய சகோதரராகிய சுதர்சனம் பிரபுவிற்கும் அடிக்கடி வாக்குவாதம் ஏற்படுவது வழக்கம்.

முந்திய அத்தியாயத்தில் பிரஸ்தாபிக்கப்பட்டிருந்த சம்பவங்கள் நிகழ்ந்து நான்கு நாட்கள் கழிந்தன. ஐந்தாம் நாள் மாலை கமலத்தையும் அவளுடைய கணவரையும் வாழ்த்துவதற்காகப்பாஸ்கரம் பிரபுவின் நண்பர்களிற் சிலர் ஆரியபவனத்தில் ஆடம்பரமான விருந்தொன்று நடத்தினார்கள். அதற்கு விஜயபுரியிலுள்ள எல்லாப் பிரபுக்களும் சீமாட்டிகளும் விஜயம் செய்திருந்தனர். மாலை சுமார் ஐந்தரை மணிக்கு கமலமும் ஜயந்தனும் திருமணக் கோலத்தோடு விருந்தினர்களுக்குக் காட்சியளித்தார்கள். பிறகு வாழ்த்துப் பிரசங்கங்களும், சம்பிரதாய முறைப்படித் திருமண தம்பதிகளின் வந்தனோபசாரச் சொற்பொழிவுகளும் இரவு ஏழரை மணிவரையில் நடைபெற்றன. அடுத்தாற்போல் விருந்து ஆரம்பமாயிற்று. விருந்திற்குப்பின் சங்கீதக் கச்சேரிகள் துவக்கப்படுகையில் சுதர்சனம் பிரபு, சரத்சந்திரன், ஜயந்தன், நளினம், ஆகிய நால்வரும் வட்டமேஜையொன்றைச் சுற்றியமர்ந்து பொழுதுபோக்காகப் பல விஷயங்களைப்பற்றிப் பேசிக்கொண்டிருந்தார்கள்.

சில நிமிஷங்களுக்குப்பின் பாஸ்கரம் பிரபு, கமலம், துப்பறி நிபுணர் துளஸிதாஸ், ஆகிய மூவரும் அங்கு வந்து சேர்ந்தார்கள். துளஸிதாஸைக்


**மனோரஞ்சனி**

இது ஒரு மாதாந்த நாவல் சஞ்சிகை. 1937 ஜனவரி முதல் சம்சார சன்னியாசி என்னும் நாவல் தொடர்ச்சியாய் வெளிவரும். இதன் வருட சந்தா ரூ. 1-8. மாதிரிக்காபி இனாம்!

எம். எஸ். ராமுலு கம்பெனி, 286, எஸ்பிளனேட், மதராஸ்.



''கள்வனுக்கு ஒழுக்கம் வேறு?'' என்று சொல்லி நகைத்தார் சுதர்சனம் பிரபு.

கண்டதும் அவர்களுடைய சம்பாஷணை சரத்சந்திரன் வரைந்துள்ள துப்பறி நாவல்களின்மீது திரும்பியது. அவ்வமயம் கமிஷனர் உள்பட எல்லோரும் நமது ஆசிரியனுக்கு அடுக்கடுக்காகப் புகழ்மாலைகளைச் சூட்டினர்கள். ஆனல், சுதர்சனம் பிரபுவிற்கு மட்டில் சரத்சந்திரனின் புத்தகங்கள் அளப்பரிய அருவருப்பையே கொடுத்து வந்தன.

''சரத்சந்திரரே! உங்களுடைய எழுத்துக்களிற் பெரும்பாலானவைகள் போலீஸாரையும், துப்பறிவோர்களையும் ஏளனம் செய்பவைகளாகவே இருக்கின்றன. ஆகையால், அவைகளை எனது சிப்பந்திகள் வெறுப்புடன் நோக்குவது இயற்கைதான். எனினும், ஒரு விஷயத்தில் உங்களுடைய கதாநாயகர்களை நான் முழுமனதுடன் வாழ்த்த வேண்டியவனாக இருக்கின்றேன். அதாவது, பெரும் பெரும் கொள்ளைக்காரர்களாக நடிக்கும் உங்களது கதாநாயகர்கள் போலீஸ் சிப்பந்திகளின் அறிவு எங்கெந்தத் தருணங்களில் மந்தித்து விடுகின்றதென்பதைத் தெளிவாகவும் அனுபவ முறையிலும் விளக்கிக் காட்டுகின்றார்கள். சுருங்கச் சொல்ல வேண்டுமானல், உங்களுடைய நாவல்கள் போலீஸ் இலாகாவிற்கு அரிய படிப்பினையாக இருக்கின்றனவென்றே நான் அபிப்பிராயப்படுகின்றேன்!'' என்ருர் துப்பறி நிபுணர் துளஸிதாஸ்.

துளஸிதாஸின் கருத்தைப் பாஸ்கரம் பிரபுவும், மற்றும் சிலரும் ஆமோதித்தார்கள். ஆனல், சுதர்சனம் பிரபு அதைக் கட்டோடு ஒப்புக்கொள்ளவில்லை. ''நண்பரே! சரத் சந்திரனின் கதாநாயகர்கள் போலீஸ் சிப்பந்திகளின் குறைகளை அனுபவ முறையில் சுட்டிக் காட்டுகின்ருர்களென்று சொன்னீர்கள். இது தவருன அபிப்பிராயமென்பதைக் கூற நான் மிகமிக வருந்துகிறேன். நீங்கள் 'அனுபவ முறையில்' என்ற பதத்தை இந்தச் சந்தர்ப்பத்தில் பிரயோகித்திருக்கவே கூடாது. ஏனெனில், நண்பர் சரத்சந்திரரின் கதாநாயகர்களெல்லாம் கற்பனைப் பேர்வழிகளேயன்றி அனுபவத்தில் இருக்கக் கூடியவர்களன்று. பல நாள் திருடன் ஒரு நாள் பிடிபட்டே தீருவான். அப்படியே பிடிபடாமலிருந்தாலும், அது போலீசாருடைய பேதமையைச் சுட்டிக் காட்டுமேயன்றி, கள்வனின் சாமர்த்தியத்தைக் குறிப்பதாக ஆகமாட்டாது. சீமூகச் சட்ட திட்டங்களைப் புறக்கணிக்கும் பேர்வழிகள் நீண்ட காலம் வரையில் தலைமறைவாக இருக்கக் கூடுமென்ற எண்ணத்தை அடியோடு விட்டொழித்து விடுங்கள். இது அனுபவ சாத்தியமற்ற விஷயம். நண்பர் சரத்சந்திரருடைய கற்பனைகளையும், அழகிய வசன நடையையும் உங்களைப்போல் நானும் மெச்சுகின்றவனே. ஆனல், வாழ்க்கை சம்பந்தப்பட்டமட்டில் அவருடைய நாவல்கள் இயற்கைக்கு முற்றிலும் மாருனவைகளென்பது என் அபிப்பிராயம்!'' என்ருர் சுதர்சனம் பிரபு.

அடுத்தாற்போல் ஆசிரியன் பேச வாரம்பித்து, ''ஐயா! என்னுடைய கதாநாயகர்களெல்லாம் கள்வர்களேயென்பதையோ அல்லது அவர்கள் கடைசிவரையில் தண்டனைக்குத் தப்பிக்கொண்டு வருகின்றவர்களென்பதையோ நான் ஆக்ஷேபிக்கவில்லை. சக்தியும் சாமர்த்தியமும், புத்தி தீக்ஷண்யமும் உடைய கள்வன் போலீஸாரையும் பொது ஜனங்களையும் நீண்ட காலம் வரையில் ஏமாற்றிக்கொண்டிருக்கலாமென்பது எனது நாவல்களுடைய அடிப்படையான கருத்து. இதிலிருந்து, கண்டு பிடிக்க முடியாத கள்வர்கள் இதற்கு முன் இருந்தார்களென்ருே அல்லது இப்பொழுது இருக்கின்ருர்களென்ருே நான் அபிப்பிராயப்படுவதாக நீங்கள் முடிவுகட்டி விடக்கூடாது. இப்படிப்பட்ட விகல்பமான தாத்பர்யங்களைச் செய்ய எனது நாவல்களில் கொஞ்சமும் இடமளிக்கப்படவில்லையென்பதை நான் உறுதியாகக் கூறுவேன். பிரபுவே, ஜம்புலிங்கம், கொடுக்கூர் ஆறுமுகம் முதலியோர்களுடைய வாழ்க்கையையும், அவர்களுடைய நடவடிக்கைகளையும் சாவதானமாகச் சிந்தித்துப் பார்த்தால், நீங்கள் என்னுடைய கதா நாயகர்களைப்பற்றித் தாழ்மையான அபிப்பிராயங் கொள்ள மாட்டீர்களென்பது நிச்சயம். ஜம்புலிங்கம் எத்தனை ஆண்டுகள்வரையில் தலை மறைவாகப் பல அட்டூழியங்களைச் செய்து வந்தான். அவனையும் ஆறுமுகத்தையும் கைது செய்யப் போலீஸார் எவ்வளவு தீவிரமான நடவடிக்கைகளையெடுத்துக் கொண்டிருந்தார்கள்? இவைகளையெல்லாம் நீங்கள் மறந்தது ஏனே?''

''நான் மறக்கவில்லை! அவர்களும் இறுதியில் கைது செய்யப்பட்டு விட்டார்களென்பதை நீங்கள்தான் மறந்து விட்டீர்கள் போலிருக்கிறது!'' என்று பதிலளித்தார் சுதர்சனம் பிரபு.

''ஆம்! போலீஸார் மிகுந்த பிரயாசையுடன் கடைசியாக வெற்றி பெற்ருர்களென்பது எனக்குந் தெரியும். அவர்களுக்கு வெற்றி கிடைத்ததின் காரணத்தைச் சிறிது அலசிப் பாருங்கள். என்னுடைய கதாநாயகர்களைப்போல் ஒழுக்கத்தில் அப்பழுக்கற்றவர்களாக இருப்பின், அவர்களைப் பிடிக்கப் போலீஸாரால் ஒருக்காலும் இயன்றிருக்காது!'' என்ருன் சரத்சந்திரன்.

''கள்வனுக்கு ஒழுக்கம் வேறு? சபாஷ்! மிஸ்டர் சரத்சந்திரரே, சபாஷ்! கள்வனை நல்லொழுக்கமுடையவனென்று சொல்லுவதற்கும் விபசாரியைப் பதிவ்ரதாசிரோமணியெனச் சொல்வதற்கும் பேதமுண்டாவென்பதைக்


## பிரபல ஜோதிஷர்



மஹாராஜாக்களால் தங்க மெடல்கள் பரிசு பெற்றவர். ஒரு ஜாதகம் கணிக்க ரூபா 2. 1 வருஷ மாதவாரிப் பலன் எழுத ரூபா 5. எதிர்காலத்தைப் பற்றின 3 கேள்விகளுக்கு ரூ 1. மேல் கேள்வி 1-க்கு அணு 8. ஜாதகம் அல்லது எழுதும் நேரம் தேவை. பண்டித காழியூர் ம. ஸ்ரீனிவாஸாச்சாரியார்: 58, லஸ் சர்ச் ரோடு, மைலாப்பூர், மதராஸ்.

## விலை ரூ. 1-4 தான்!

### பாக்ஸ் & போல்டிங் காமிரா.

ஆரம்பக்காரர்கள்கூட இக்காமிராவினல் ஒரு நொடியில் கார்டு சைஸ் படங்களெடுக்கலாம். வேலையற்றவர்கள் தினம் ரூ.5. சம்பாதிக்கலாம்.



**இலவசம்** ஒவ்வொரு காமிராவுடன் 1. டாக்ஸ் பிரிண்டிங் பேப்பர். 4 பிலிம்கள் ; டெவலப்பிங் கெமிக்கல்ஸ் & சாமானிய உபயோகக் குறிப்புகள். விலைகள்: பாக்ஸ் காமிரா நெ. 2--ரூ. 1-4; நெ.1-(a) ரூ. 2—8. படத்திலுள்ள போல்டிங் காமிரா ரூ.2; உயர்ந்தது ரூ.4-8. பிரத்யேக பிலிம்கள் டஜன் ரூ. 1; பிரிண்டிங் பேப்பர் டஜன் 6 அணு. பாக்கிங் முதலியன 10 அணு.

Young India Watch Co.,
(Depot 30)
159/C, Machua Bz. St. Calcutta.

பிரசித்திபெற்ற பழங்களைத் தரும்

### மாங்கன்றுகள்

தர்பங்கா, முஸபர்பூர் இவ்விடங்களைச் சேர்ந்தவை. மலிவான விலைகளில் கிடைக்கும். கா...ாக்குத் தெழுதுக. BIHAR NUR...RY, P.O. Bihar Nursery (Da...nga) Bihar.

கூறுங்கள்!" என்று சொல்லிக் கை கொட்டி நகைத்தார் சுதர்சனம் பிரபு.

"மிஸ்டர் சுதர்சனம்! இந்த விஷயம் சம்பந்தப்பட்டமட்டில் உங்களுடைய அபிப்பிராயத்தை ஆமோதிக்க நான் தயாராக இல்லை. சரத்சந்திரருடைய கதாநாயகர்களெல்லாம் கற்பனைப் பேர்வழிகளென்று கட்டோடு முடிவு செய்துவிடமுடியாது!" என்று இடையில் ஆரம்பித்தார் பாஸ்கரம் பிரபு.

"அப்படியானால் அவர்களைப் போன்ற பிடிபடாக் கள்வர் இப்பொழுது இருக்கக்கூடுமென்று நீங்கள் நினைக்கின்றீர்களா?" எனறு கேட்டார் சுதர்சனம் பிரபு.

"ஆம்! அப்படிப்பட்ட கள்வர்கள் பலரில்லாவிடினும் ஒருவனிருக்கின்றானென்பது நிச்சயமாக எனக்குத் தெரியும். தவிர, அவன் சரத்சந்திரரின் கதாநாயகனைப்போல் நல்லொழுக்கமுடையவனாகவும் காணப்படுகின்றான்!" என்றார் பாஸ்கரம் பிரபு.

பாஸ்கரம் பிரபுவின் மேற்படி வார்த்தைகள் அங்கிருந்தவர்களனைவரையும் பிரமிக்கச் செய்துவிட்டது. எல்லோரும் அவரைக் கூர்ந்து கவனித்தார்கள். "ஆம்! ஒருவனிருக்கிறான்! கரும்பூதத்தை நாம் இதுவரையில் மறந்துவிட்டோம்!" என்று பாஸ்கரம் பிரபுவை ஆமோதித்துப் பேசினார் துளஸிதாஸ். கரும்பூதத்தின் பெயர் உச்சரிக்கப்பட்டதைக் கேட்டதும் அங்கிருந்த மாதர்கள் "கரும்பூதம்! கரும்பூதம்" என்று இரண்டு மூன்று முறை அப்பெயரைத் தங்களுக்குள் சொல்லிக்கொண்டார்கள்.

"இந்தப் பேர்வழியைப் பற்றிப் பலமுறை நான் பத்திரிகைகளில் பார்த்திருக்கின்றேன். அவன் யார்? நீங்கள் அவனைப் பிரத்யக்ஷமாகக் கண்டிருக்கின்றீர்களா?" என்று பாஸ்கரம் பிரபுவையும் துளஸிதாஸையும் நோக்கி வினவினாள் செல்வி நளினம்.

"கரும்பூதம் ஒரு பெரிய மாயாவி. அவனை நான் நேரில் கண்டது கிடையாது. அதாவது, அவனுடைய உண்மையான தோற்றத்தைப் பிரத்யக்ஷமாகப் பார்த்ததில்லை!" என்று ஆரம்பித்தார் துளஸிதாஸ்.

"உண்மையான தோற்றத்தை என்றால் என்ன தாத்பர்யம்?" என்று வினவினான் ஜயந்தன்.

"அதாவது கரும்பூதம் என்பது அவனுடைய மெய்யான பெயரல்ல. அவன் மற்றொரு பெயருடன் சமூகத்தில் பழகி வருகின்றான். அவனைக் கறுப்பு உடையில் ஒரே ஒரு முறை பிரத்யக்ஷமாக நான் பார்த்திருக்கிறேன். அவனைக் கைது செய்வதற்குச் சென்னை மாகாணத்திலுள்ள எல்லாப் போலீஸார்களும் மூலைக்கு மூலை முயற்சி செய்து வருகின்றார்கள். ஆனால், அவர்களுக்கு வெற்றி கிடைக்கக் கூடுமென்ற நம்பிக்கை எனக்குக் கொஞ்சமுமில்லை. ஏனெனில், கரும்பூதமெனப்படும் இந்தப் பேர்வழி மற்ற கள்வர்களைப்போல் சாதாரணமானவனன்று! ஆயிரம் ஜம்புலிங்கங்கள் சேர்ந்தாலும் ஒரு கரும்பூதமாக முடியாது! அவனுக்கு இணையானவர்கள் சரத்சந்திரரின் நாவல்களில் காணப்படும் கள்வர்தான்!" என்று சாந்தமாகக் கூறினார் துளஸிதாஸ்.

"கமிஷனர் கூறுவது முற்றிலும் வாஸ்தவம்! கரும்பூதம் தனது கைவரிசைகளை என்னிடத்திலேயே ஒரு முறை காட்டிவிட்டான்!" என்று கூறிச் சில தினங்களுக்கு முன் நவரத்ன மாலை காணாமற் போனதைப் பற்றிய சம்பவங்களை எடுத்துரைத்தார் பாஸ்கரம் பிரபு.

"பிரபுவே! நீங்கள் சொல்லுவது எனக்குப் பேராச்சர்யத்தைக் கொடுக்கின்றது! அவன் நவரத்னமாலையை எதற்காகத் திரும்பக் கொண்டுவந்துவைத்தான்?" என்று கேட்டாள் செல்வி நளினம்.

"ஆவலுடன் களவாடிச் சென்ற ஆபரணத்தை எவனாவது திரும்பக் கொண்டுவந்து வைப்பானா?" என்று அடுத்துக் கேட்டான் ஜயந்தன்.

"நீங்களெல்லோரும் சரத்சந்திரருடைய நாவல்களைக் கூர்மையாகப் பரிசீலனை செய்திருப்பீர்களானால் கரும்பூதத்தின் நடவடிக்கைகளைக் குறித்து ஆச்சர்யமடையமாட்டீர்களென்பது நிச்சயம். உதாரணமாக "சிங்களத்துச் சிங்காரி!" என்ற நாவலில் சூசையப்பன் என்ற கள்வனை மிகுந்த சாமர்த்தியசாலியாகவும் நல்லொழுக்கமுடையவனாகவும் சரத்சந்திரர் சித்தரித்திருக்கின்றார். அவன் பெரிய கொள்ளைக்காரனென்பது வாஸ்தவமே. எனினும், களவுத் தொழிலை ஜீவனமார்க்கமாகக் கொண்டிருப்பவனைப்போல் அவன் காணப்படவில்லை. கரும்பூதமெனப்படும் பேர்வழியும் சூசையப்பனைப் போன்றவன்தான்! கரும்பூதம் களவுத் தொழிலை ஒரு கலையாக மதிக்கின்றானென்று நாம் நினைக்க வேண்டியிருக்கின்றது! இன்றேல் ஆயிரக் கணக்கான ரூபாய் பெருமதியுள்ள நவரத்ன மாலையை அவன் திரும்பக் கொடுத்திருப்பானா?" என்றார் பாஸ்கரம் பிரபு.

"இது மட்டுமல்ல! கரும்பூதத்தின் விஷயத்தில் கள்வர்களிடம் எதிர்பார்க்க முடியாத பல அரிய குணங்களுமிருக்கின்றன. அதாவது, அவன் இதுவரையில் எவரையும் ஹிம்சித்தது கிடையாது. பலாத்காரப் பிரயோகத்தை அவன் கட்டோடு வெறுப்ப




பூச்சிக் கடிகள், விஷக் கடிகளுக்கு

உங்கள் சருமம்மீது ஜாம்-பெக் தடவுங்கள்.

பூச்சிக்கடி, அல்லது விஷக்கடியால் நீங்கள் பாதிக்கப்பட்டால் உங்கள் இரத்தத்தில் விஷமேறுகிறது. இதனால் வீக்கமும், வலியும், எரிச்சலும் ஏற்படுகிறது. இதற்கு நிவர்த்தி ஜாம்-பெக் தான். இது விஷே சமனமூட்டும் சிறந்த கிருமிநாசினி; இதன மூலிகைச் சாறு சருமத்தினுள் ஊடுருவிச் சென்று வலியையும் ரணத்தையும் ஆற்றும். தழும்பு உண்டாகாது. ஜாம்-பெக் டப்பி 1-க்கு ரூ. 1 அல்லது ரூ. 2—4 வீதம் எல்லா மருந்து வியாபாரிகளிடமும் கிடைக்கும். ஏஜண்டுகள்: மேஸர்ஸ் தாதா & கம்பெனி, பார்க் டவுன், மதராஸ்.




மிருகக் கொழுப்பற்றது.

ஜாம்பெக்

Zam-Buk



# நீரிழிவு, மதுமேகம்

முதலிய சகல நீர் ரோகங்களுக்கு

பண்டிட் ஸ்வாமி ஸ்ரீநிவாஸய்யங்காரின்

## மயூரகாய கற்பம்

ஒரு தெய்வீக சஞ்சீவி!!

இதுவரை இதன் நன்மையைப் பிரபுக்கள் மட்டுமே பெற்று வந்தனர். இப்போது சகல ஜனங்களும் பயன்பெறவேண்டி 20 டோஸ் கொண்ட பொட்டணம் ரூ. 15-8-0 ஆகக் குறைக்கப்பட்டுள்ளது. 10 நாளைக்கு வரும். அதற்குள் கண்கூடாகக் குணங்காணும். பிரபல இங்கிலீஷ் டாக்டர்களுடையவும், குணமடைந்த பலருடையவும் உயர்ந்த உண்மை அபிப்பிராயங்கள் கொண்ட இலவசப் புத்தகத்திற்கு

இன்றே எழுதுங்கள்.

ஸ்கந்தாசிரமம்

தபால் பெட்டி, 759 : : எழும்பூர், மதராஸ்.

வன். எங்கு சென்றாலும் அவன் ஆயுதங்களெதுவும் எடுத்துச் செல்வதில்லையாம். தவிர, ஏழைகளின் இல்லங்களில் அவன் களவாடினானென்று நான் கேள்விப்பட்டதேயில்லை. சற்குணமுடையவர்களின் வீடுகளிலும் அவன் நுழைவது கிடையாது. பாஸ்கரம் பிரபு தெரிவித்ததைப்போல் கரும்பூதம் களவுத் தொழிலை ஜீவனமாகக் கொண்டவனல்லவென்பது மட்டில் நிச்சயம்! ஏனெனில், அவன் ஒரு பெரிய சீமானும். நம்முடனெல்லாம் நெருங்கிப் பழகுகின்றவனும்!" என்றார் துளஸிதாஸ்.

"நம்முடன் பழகுகின்றவனா?" என்று பேராச்சர்யத்துடன் வினவினான் ஜயந்தன்.

"அவனைப் பிரத்யக்ஷமாகப் பார்ப்பதற்கு நான் ரொம்பவும் ஆசைப்படுகின்றேன்!" என்று களிப்புடன் கூறினாள் செல்வி நளினம்.

"சகோதரி! இந்த ஆசையை விட்டுவிடுங்கள்! நீங்கள் கட்டாயமாக ஏமாந்து போவீர்கள்!" என்று சரத்சந்திரன் இடையில் கூறினான்.

"ஏன்? இவ்வளவு உறுதியாகச் சொல்லுவதைப் பார்த்தால் நீங்கள் அவனை அறிவீர்கள்போலிருக்கின்றதே!" என்றாள் செல்வி நளினம்.

செல்வி நளினத்தின் கேள்வி சரத்சந்திரனைத் திடுக்கிடச் செய்துவிட்டது. எனினும், சமயோசிதமாக நடந்துகொள்வதில் சாமர்த்தியசாலியான சரத்சந்திரன் தனது கலவரத்தை வெளிக்காட்டிக்கொள்ளாமல், "சகோதரி! நீங்கள் நினைப்பது சுத்தப் பிசகு! நான் கரும்பூதத்தை நேரில் பார்த்தது கிடையாது! அவனைப் போன்ற பேர்வழிகளைச் சுலபமாகப் பார்க்க விரும்புவது கைகூடும் விஷயமல்லவென்பதைத்தான் பொதுவாகச் சுட்டிக் காட்டினேன்" என்று பதிலளித்தான்.

"நீங்கள் என்ன சொன்னாலும் சரி! அவனை என்றைக்காவது ஒருநாள் பிரத்யக்ஷமாகக் காணலாமென்ற நம்பிக்கை எனக்குப் பூரணமாக இருக்கின்றது! அவனுடைய சாமர்த்தியத்தையும் ஒழுக்கத்தையும் உண்மையில் நான் பாராட்டுகின்றேன்!" என்றாள் செல்வி நளினம்.

"அப்பப்பா! ஒரு கொள்ளைக்காரனைப்பற்றி நீங்களெல்லோரும் இவ்வளவு தூரம் பாராட்டிப் பேசுவது எனக்கு வியப்பைக் கொடுக்கின்றது. கரும்பூதமெனப்படும் பேர்வழி உங்களுடைய புகழ்மாலைகளுக்கெல்லாம் யோக்யதையுடையவனானால் என்னுடைய மாளிகையில் நுழைந்து களவாடட்டும் பார்க்கலாம்!" என்று வீரம் பேசினார் சுதர்சனம் பிரபு.

"அண்ணா! நீங்கள் இவ்விதம் சொல்லியது கரும்பூதத்தின் செவிகளில் விழுந்தால் [illegible] மாட்டானென்று நான் அஞ்சுகின்றேன்! அவனுக்கு ஊரெங்கும் உளவுகாரர்களிருக்கக்கூடுமென்பதை நீங்கள் ஞாபகத்தில் வைத்துக்கொள்ள வேண்டும்!" என்று அச்சத்துடன் கூறினாள் செல்வி நளினம்.

"உஸ்! அவன் மட்டில் நமது மாளிகையில் நுழைந்து 10 ரூபாய் மதிப்பிற்கு மேற்பட்ட ஒரு பொருளைக் களவாடிச் சென்றுவிட்டால், மறுதினம் மாதர் மறுமண சகாய சங்கத்தின் நிதிக்கு நான் 50,000 ரூபாய் நன்கொடையளிக்கின்றேன். இந்தப் பந்தயத்தை எவர் வேண்டுமானாலும் அவனிடம் போய்ச் சொல்லட்டும்! அதைப்பற்றி எனக்குக் கவலையில்லை!" என்று உரக்கக் கூறினார் சுதர்சனம் பிரபு

"நிச்சயமாகவா?" என்று அடுத்தாற்போல் கமிஷனர் வினவினார். "ஆம்! சத்தியமாக!" என்று சுதர்சனம் பிரபு தமது பந்தயத்தை இரண்டு மூன்று முறை ஊர்ஜிதம் செய்து கூறவும் எல்லோரும் அவரைக் கூர்ந்து நோக்கினார்கள்.

"கரும்பூதத்தின் நடவடிக்கைகளைக் கவனித்தால் அவன் உங்களுக்குப் பெருத்த நஷ்டத்தை நிச்சயமாக விளைவித்து விடுவானென்று பயப்படவேண்டியிருக்கிறது. அவனைப் பிடிப்பதற்கு நீங்கள் எவ்வளவு தீவிரமான நடவடிக்கைகளையெடுத்துக் கொண்டாலும் அவைகளையெல்லாம் கரும்பூதம் இலட்சியம் செய்யக்கூடியவனல்ல! உதாரணமாக, அவன் என்னுடைய நவரத்ன மாலையைக் களவாடியது எப்படியென்ற இரகசியம் இதுவரையில் துளசிதாஸருக்கோ அல்லது எனக்கோ புலப்படவில்லை!" என்றார் பாஸ்கரம் பிரபு.

"நண்பரே! மனிதனை மனிதனால் ஏமாற்ற முடியும். இயந்திரங்களையோ எவராலும் ஏமாற்ற முடியாது. எனக்கு உலகப் பிரசித்திபெற்ற மின்சாரத் தொழிற்சாலையொன்றிருக்கின்றதென்பதை நீங்கள் மறந்து விடக்கூடாது. ஒரே ஒரு நிமிடத்திற்குள் எவரும் பிரவேசிக்கவியலாவண்ணம் மாளிகையைச் சுற்றி மின்சாரமமைக்கும் சாமர்த்தியம் எனக்கிருக்கின்றதென்பதை இப்பொழுதாவது தெரிந்துகொள்ளுங்கள்!" என்று; கர்வமாகப் பேசினார் சுதர்சனம் பிரபு.

* * * *

சரத்சந்திரன் ஆரியபவனத்திலிருந்து தனது மாளிகைக்குத் திரும்புகையில் நள்ளிரவாகிவிட்டது. ஆயாச மிகுதியினால் கட்டிலின்மீது விரித்து வைக்கப்பட்டிருந்த படுக்கையில் அவன் படுத்தான். ஆனால் அவனுக்கு உறக்கம் வருவதாக இல்லை. சுதர்சனம் பிரபு [illegible] களும் மறுபடி ஒன்றன்பின் ஒன்றாகத் தோன்றிக்கொண்டிருந்தன. தனது நாவல்களையும், கதாநாயகர்களையும் பழித்துப் பேசிய அவரிடம் நமது சரத்சந்திரனுக்கு ஆத்திரமும் ஆக்ரோஷமும் பொங்கியெழுந்தது. "என்னைப் பலர் முன்பாக அவமானம் செய்த சுதர்சனம் பிரபுவிற்கு நல்லதொரு படிப்பினையை விரைவாகப் புகட்ட வேண்டும். அடுத்தாற்போல் எழுதப்போகும் நாவலில் அவரை நான் வெட்கும்படிச் செய்கின்றேன்!" என்று தனக்குள் சபதம் கூறிக்கொண்டான் சரத்சந்திரன். அதே சமயத்தில் பக்கத்திலிருந்த டெலிபோன் மணி கிணுகிணுவென்று ஒலித்தது. கரும்பூதம் டெலிபோனைக் கையிலெடுத்துக்கொண்டு "ஹலோ!" என்றான்.

"அங்கே பேசுவது கரும்பூதம்தானோ?" என்றது டெலிபோன்குரல். அந்தக் குரல் நான்கைந்து தினங்களுக்கு முன் பேசிய மர்மப் பெண்ணின் இனிய த்வனியேயென்பதைச் சட்டென்று அறிந்துகொண்ட கரும்பூதம் "ஆம், நான்தான்!" என்று பதிலளித்தான்.

"கரும்பூதமென்று சொல்லிக்கொள்ள உண்மையில் நீங்கள் பெருமையடையவில்லையா? ஒளியாமல் கூறுங்கள்!" என்றாள் மர்மப்பெண.

"சகோதரி! என்னை நீ ஏளனம் செய்கிறாயென்று நினைக்கிறேன்!" என்றான் கரும்பூதம்.

"இல்லை! ஒருக்காலுமில்லை. ஆண்டவன் சாக்ஷியாக உங்களை நான் மனப்பூர்வமாக நேசிக்கின்றேன்!" என்றாள் மர்மப் பெண். இந்த வார்த்தைகளைக் கூறுகையில் அவளுடைய குரல் முன்னைவிடப் பன்மடங்கு இனிமையுள்ளதாகக் கரும்பூதத்திற்குத் தோன்றியது. "வாஸ்தவமாகவா? நீ கூறுவது உண்மைதானா?" என்று அவளுடன் வினவினான் கரும்பூதம். "ஆம்! ஆம்!" என்று அழுத்தம் திருத்தமாக இருமுறை கூறினாள் மர்மப் பெண்.

"அப்படியானால் உன்னுடைய பெயரையும் விலாசத்தையும் எனக்குச் சொல்லக் கூடாதா?" என்று கெஞ்சினான் கரும்பூதம்.

"உஸ்! அதைமட்டில் இப்பொழுது கேட்கக்கூடாது! நாளடைவில் நீங்களே சுலபமாகத் தெரிந்துகொண்டுவிடலாம். அதுவரையில் தயவு செய்து பொறுத்திருங்கள்!" என்று பதிலளித்தாள் மர்மப் பெண்.

"ஆனால், கட்டாயமாக இப்பொழுது சொல்லமாட்டாயா?" என்று ஏமாற்றத்துடன் மறுபடியும் கேட்டான் கரும்பூதம்.

"அது கிடக்கட்டும்! இப்பொழுது உங்களிடம் ஒரு முக்கியமான விஷயத்தைப்பற்றிப் [illegible]


**மியூச்சுவல் அஷ்யூரன்ஸ் கம்பெனி, லிமிடெட்.,**

தலைமை ஆபீஸ்:

187, மவுண்ட் ரோட், மதராஸ்

**இதில் இன்ஷ்யூர் செய்துகொள்ளுங்கள்.**

ஏனெனில், இது வெகு வசீகரமான ஆயுள் அஷ்யூரன்ஸ் திட்டங்களையும், வியாபாரிகளுக்கும், பணக்காரர்களுக்கும் இன்வெஸ்ட் செய்ய விசேஷத் திட்டங்களையும் வழங்குகிறது.


பிரஸ்தாபிக்க வேண்டியிருக்கிறது!" என்று ஆரம்பித்துச் சம்பாஷணையைச் சாதுர்யமாகத் திருப்பினாள் மர்ம மாது.

"என்ன விஷயம்?" என்றான் கரும்பூதம்.

"நான் உங்களுடைய கையொப்பமிட்டு ஒரு கடிதம் எழுதியிருக்கின்றேன். இதற்காக என்னைத் தயவு செய்து மன்னித்துவிட வேண்டும்!" என்றாள் டெலிபோன் பெண்மணி.

"என்னுடைய கையொப்பத்தையிட்டா? அடஓ! எவருக்கு எழுதினாய்?" என்று அச்சத்துடனும் ஆச்சர்யத்துடனும் வினவினான் கரும்பூதம்.

"ஆரியபவனத்தில் நடந்த விருந்தில் சுதர்சனம் பிரபு உங்களைப்பற்றி அலட்சியமாகப் பேசியதுடன் கரும்பூதம் என்னுடைய வீட்டில் களவாடிவிட்டால் மாதர் மறுமண சகாய சங்கத்திற்கு நான் 50,000 ரூ. நன்கொடையளித்துவிடுகின்றேன்!" என்று சபதமும் கூறினாரல்லவா? அவருடைய கர்வத்தை அடக்க வேண்டுமென்பது என் ஆவல். ஆகையால், உங்களுடைய கையொப்பத்துடன் கூடிய கடிதமொன்றை அவருக்கு நான் அனுப்பியிருக்கின்றேன்!' என்றாள் மர்மப் பெண்.

"அதில் என்ன எழுதியிருக்கிறாய்?" என்று கேட்டான் கரும்பூதம்.

"அதாவது, வருகிற வியாழக்கிழமையன்று நீங்கள் பிரபுவின் வீட்டைக் கொள்ளையடிக்க உத்தேசித்திருப்பதாகக் குறிப்பிட்டிருக்கின்றேன். எப்படியேனும், பிரபுவின் பந்தயத் தொகை மாதர் மறுமண சகாய சங்கத்திற்குச் சேர்ந்துவிடும்படிச் செய்யவேண்டியது உங்களுடைய பொறுப்பு!" என்றாள் மர்மப்பெண்.

(தொடரும்.)



நேபாள தேச கோஷ்டியார் மன்னர்பிரானுக்கு ''ராஜான்ய'' என்ற பட்டத்தை அளிக்க பக்கிங்ஹாம் அரண்மனைக்குச் செல்லுகையில் எடுத்தபடம்.

# பிரபஞ்ச வர்த்தமானம்

——:[○]:——

### மிஸஸ் ஸிம்ஸன் விவாக ரத்து

சென்ற 3-ந்தேதி லண்டன் விவாக ரத்துக் கோர்ட்டில் மிஸஸ் ஸிம்ஸன் விவாக ரத்து உறுதி செய்யப்பட்டது. இச்செய்தி உடனே வின்ட்ஸர் கோமகனுக்கு அறிவிக்கப்பட்டது. அவர் உடனேயே புறப்பட்டு மிஸஸ் ஸிம்ஸனை அடைந்தார்.

* * * *

### பிரிட்டன்மீது இத்தாலி சர்க்கார் சீற்றம்

இத்தாலி சர்க்கார் பின் கண்டபடி ஒரு அறிக்கை வெளியிட்டிருக்கின்றனர்:—

"இத்தாலிமீதும், இத்தாலியப் படைகள்மீதும் அநேகமாக எல்லாப் பிரிட்டிஷ் பத்திரிகைகளும் விரோதபாவம் கொண்டிருக்கின்றன. எனவே, மறு உத்தரவு வரை "டெயிலி மெயில்" "ஈவனிங் நியூஸ்" "அப்ஸர்வர்". இந்த மூன்றைத் தவிர வேறு பிரிட்டிஷ் பத்திரிகை எதுவும் இத்தாலிக்குள் வரக்கூடாதெனத் தடுக்கப்பட்டிருக்கிறது. லண்டனிலுள்ள இத்தாலியப் பத்திரிகை நிருபர்களனைவரும் உடனே இத்தாலிக்குத் திரும்பி விடுமாறு உத்தரவு பிறப்பிக்கப்பட்டிருக்கிறது"

ஸ்பெயினில் இத்தாலியர் தோல்வியடைந்ததாகவும் பெர்மியோவில் ஆத்திரமுற்ற ஸ்பானிய ஸ்திரீகளும் புருஷர்களும் இத்தாலியரை ஜன்னல்கள் வழியாகக் கீழே தள்ளியதாகவும் பிரிட்டிஷ் பத்திரிகைகளில் வெளியான செய்திகளைக் கண்டு இத்தாலியர் மிகவும் கோபமடைந்திருக்கின்றனர்.

இத்தாலிய சர்க்காரின் உத்தரவின்பேரில் லண்டனிலுள்ள இத்தாலிய நிருபர்களனைவரும் இத்தாலிக்குப் பிரயாணமாகிவிட்டார்களென்று செய்திகிடைத்திருக்கிறது.

### சையாமின் நிலை

சையாம் ராணுவ மந்திரியான கர்னல் லாங்குபீல்டு சமீபத்தில் லண்டனில்ரேடியோமூலம் செய்த ஒரு பிரசங்கத்தில் ஐரோப்பாவில் யுத்தமேற்பட்டால் ஜப்பான் சிங்கப்பூரையும் ஹாங்கையும் பிடிக்க முயலுமென்றும், இக்காரணத்தால்தான் இங்கிலாந்து அதிகப்பணம் செலவழித்து சிங்கப்பூரைப் பாதுகாப்பதற்கு முயன்று வருகிறதென்றும், ஆகையால் ஜப்பான் முதலில் சையாமைப் பிடித்துக்கொண்டு பிறகு தெற்கு மார்க்கத்தில் சென்று சிங்கப்பூரைப் பிடிக்குமென்றும் கூறினர். சையாமுக்கு வலிமையில்லையென்று தெரிந்தால் ஆங்கிலேயர் உதவிக்கு வருவார்களென்றும் சையாம் நடுநிலைமைவகிப்பதற்குப் போதிய ராணுவபலமில்லாது போனல் இரண்டு தேசங்களுக்கும் சையாம் யுத்தரங்கமாகி விடுமென்று அவர் தெரிவித்தார்.

* * * *

### மகுடாபிஷேகப் படங்கள்

லண்டனில் நடைபெறும் மகுடாபிஷேகப் படங்கள் மகுடாபிஷேகம் நடந்த 20 மணி நேரத்திற்குள் அமெரிக்காவில் காட்டப்படும். இதற்காக பிரபல விமானியும் நடிகருமான மிஸ்டர் டிக்மெர்ரில் என்பவர் மிஸ்டர் ஜாக்லாம்பி என்ற விமானியுடன் லண்டன் வந்திருக்கிறர். இவர்கள் மகுடாபிஷேகப்படத்துடன் வெற்றிகரமாகத் திரும்பி வந்தால் ஒவ்வொருவருக்கும் 20,000 பவுன் பரிசு கொடுக்கப்படுமாம்.

* * * *

### பார்லிமேண்டு மெம்பர்கள் கைதி

இராக் பார்லிமெண்டு மெம்பர்களில் மூவர் தேவனியா மாகாணத்தில் புரட்சிகரமான வேலையில் ஈடுபட்டிருந்ததாகக் கைது செய்யப்பட்டிருப்பதாயும் அங்கு படைகள் அனுப்பப்பட்டிருப்பதாயும் பாக்தாதிலிருந்து செய்தி கிடைத்திருக்கிறது.

### எம். எஸ். எம். சீஸன் டிக்கட்டுகள்

இக்கோடை விடுமுறையிலும் எம். எஸ். எம். ரயில்வே கம்பெனியார் இஷ்டம்போல் பிரயாண டிக்கட்டுகளையேற்படுத்தியிருக்கின்றனர். மே 20 முதல் இவை விற்கப்படும். நிபந்தனைகள் முன்பு கொடுக்கப்பட்ட டிக்கட்டுகளுக்கிருந்தவை போலவேயாகும்.

ஆசிரியர்களுக்கும் மாணவர்களுக்கும் ஏற்படுத்தப்பட்ட ஸ்பெஷல் டிக்கட்டுகள் இப்போதே அமுலிலிருக்கின்றன.

6 மாத ஒரு வருஷ சீஸன் டிக்கட்டுகள் எல்லா வகுப்புகளுக்கும் கொடுக்கப்படுகின்றன.


அபார சக்திவாய்ந்த டானிக்!

**S.K.M.**

Dr. N. V. ஸ்ரீராமாச்சார்லுவின்

—ஸித்தகல்ப—

மகாத்வஜம்

60 மாத்திரை ரூ. 10.
30 மாத்திரை ரூ. 5.

விவரத்திற்கு எழுதவும்:

மதராஸ் ஆயுர்வேதிக் பார்மஸி லிமிடெட்.,

த. பெ. நெ. 151. (ஸ்தாபனம் 1915-ஆ) 289, எஸ்பிளனேட் மதராஸ்.

மாலை நேரங்களில்

சென்னைக்கு விஜயம் செய்யுங்கள்

சென்னையை அடுத்துள்ள இடங்களிலிருப்பவர்கள் இப்பொழுது மாலை நேரங்களில் சென்னையில நடைபெறும் சினிமா முதலிய தமாஷாக்களில் கலந்துகொண்டு இரவு நெடு நேரம் வரையிருந்து தங்கள் இருப்பிடங்களுக்குத் திரும்ப ரெயில வசதி இல்லாமலிருக்கிறது. இக்குறையை அகற்ற வேண்டி

17—5—37 முதல்

தினசரி புது வண்டி

ஒன்று விடப்படும்.

| | | | இரவு |
|---|---|---|---|
| மதராஸ் சென்டிரல | ... | புற | 9-22 |
| பேஸின் பிரிட்ஜ் | ... | ,, | 9-29 |
| கொருக்குப்பேட்டை | ... | ,, | 9-34 |
| தண்டையார்பேட்டை | ... | ,, | 9-39 |
| திருவொத்தியூர் | ... | ,, | 9-46 |
| எண்ணூர் | ... | ,, | 9-58 |
| அத்திபட்டு | ... | ,, | 10 8 |
| மீஞ்சூர் | ... | ,, | 10-16 |
| அனுப்பம்பட்டு | ... | ,, | 10-23 |
| பொன்னேரி | ... | சேர் | 10-30 |

எம். எஸ். எம்



27 [வ]ருஷத்திற்குப் பிறகு விடுதலை யடைந்த ஸ்ரீமான் ஸவர்க்கர்.

## இந்திய வர்த்தமானம்

(14-ம் பக்கத் தொடர்ச்சி)

கவர்னரும் மந்திரிகளும் அடிக்கடி அவர்களிடை தகராறு ஏற்படத்தக்கவாறு தனித்தனி வழிகளில் அதிகாரம் செலுத்தக்கூடிய முறையில் அரசாங்கத்தை இரு கூராக்கலாமென யாரும் எண்ணவேண்டியதில்லை. மாகாண அரசாங்கத்திற்கான பொறுப்பு முழுதும் பெயரளவில் கவர்னரிடமிருந்தபோதிலும் அது மந்திரிகள் தங்கள் பதவிகளை ஏற்றுக்கொண்டவுடன் அவர்களுடைய கைக்குப் போய்ச் சேருகிறது. மந்திரிகள் தங்கள் வேலையைச் செய்வதில் அவர்களுக்குக் கவர்னர்கள் முக்கியமாக தங்கள் அரசியல் அனுபவத்தையும், நிர்வாக ஞானத்தையும் கொண்டு உதவிபுரிய வேண்டியது அவர்களுடைய கடமையாகும்.

கவர்னர்களின் விசேஷாதிகாரங்களைப்பற்றிக் காங்கிரஸ் வாதிகள் பிரமாதமாகப் பேசி வருகின்றனர். கவர்னர்கள் அவற்றைச் சாதாரணமாகப் பிரயோகிக்கமாட்டார்கள். சட்டத்தின்படி அவர்களிடம் ஒப்படைக்கப்பட்டிருப்பவையும், ஆக்ஞாபத்திரங்களின் மூலம் வற்புறுத்தப்பட்டிருப்பவையுமான விசேஷப் பொறுப்புகளுக்குப் பாதகம் ஏற்படுமென அவர்கள் எண்ணுகையிலேயே அவ்வதிகாரங்களைப் பிரயோகிக்க இடமேற்படும். இங்ஙனம் இடமேற்படுகையிலும், உடனே கவர்னர்கள் மந்திரி சபைக்கு விரோதமாக பகிரங்கமாக நடவடிக்கை எடுத்துக்கொண்டு விடுவரென எண்ணுவது தவறு.

இத்தகைய சந்தர்ப்பங்களில்தான் அரசியல் சட்டத்தின் கருத்துக்கொத்த முறையில் நடந்துகொள்ள வேண்டுமென வற்புறுத்தப்பட்டிருக்கிறது. கவர்னர்கள் மேற்குறிப்பிட்டவாறு உடனே மந்திரி சபைக்கு விரோதமாகச் செயல்புரிவரென நான் எதிர்பார்க்கவுமில்லை. விரும்பவுமில்லை.

மந்திரிகளின் பொறுப்புகளிலும் வேலையிலும் கவர்னர்கள் அடிக்கடி மிக்க சங்கடமுண்டாக்கத் தக்கவாறு தலையிடுவரென எண்ணச் சிறிதும் இடமில்லை.

காந்திஜி இது சம்பந்தமாகப் பின்கண்ட அபிப்பிராயத்தை வெளியிட்டிருக்கிறார்:—

பிரசங்கத் தோரணை சம்பந்தப்பட்டவரையில் அவர் இதே விஷயமாக முன் செய்த பிரசங்கத்தைவிட இது மேலென்பதில் சந்தேகமில்லை. ஆனால், முட்டுக்கட்டையை நீக்க இது உபயோகப்படுமென நான் நினைக்கவில்லை. காங்கிரஸ் கேட்ட உறுதிமொழி பற்றி அகில இந்தியக் கமிட்டி செய்த தீர்மானத்தைச் சென்ற காரியக்கமிட்டித் தீர்மானம் நன்கு தெளிவுபடுத்திவிட்டது. இதன் கருத்து என்னவென்பது இப்பொழுது உலகம் நன்கறியும். கவர்னர்கள் சகிக்கக் கூடாத நிலைமை ஏற்பட்டால் மந்திரிகள் ஒன்று ராஜினாமாச் செய்ய வேண்டும்; அல்லது கவர்னர் இஷ்டத்திற்குட்பட வேண்டுமென எதிர்பார்ப்பதைவிட கவர்னர்களே மந்திரிகளை விலக்குவதான பொறுப்பை ஏற்க வேண்டுமென்று கேட்பது சட்டத்திற்கு எவ்விதத்திலும் மாறாக நடப்பதாகாது. எங்கும் எதிர்ப்பேற்பட்டிருக்கும்பொழுது கவர்னர்கள் நியமித்த மந்திரிகள் செய்த காரியங்களை ஒரு உதாரணமாக எடுத்துக்காட்டுவது நிலைமையைச் சீர்படுத்துவதற்கில்லை. இது இன்னும் சந்தேகத்தை அதிகரிக்கிறதென்பதே எனது அபிப்பிராயம்.

காங்கிரஸ் மந்திரி பதவி ஏற்றுச் சட்ட வரம்பிற்குட்பட்டுச் சாத்தியமானவரையில் அதன்மூலம் பூர்ண சுயேச்சை பெறுவதான தனது லக்ஷியத்தைப் பெறக் காங்கிரஸ் முயற்சிக்க உண்மையில் அக்கரைகொண்டிருக்கிறது.

* * * *

### 27 வருஷங்களுக்குப் பிறகு விடுதலை

ஸ்ரீமான் விநாயக தாமோதர சவர்க்கார் சென்ற 10-ந் தேதி நிபந்தனையின்றி விடுதலை செய்யப்பட்டார். ஸ்ரீமான் சவர்க்கார் 1910-ம் வருஷத்தில் இங்கிலாந்தில் கைது செய்யப்பட்டார். அவர் அந்தமானில்சிறை வைக்கப்பட்டிருந்து சிலவருஷங்களுக்கு முன் ரத்னகிரிஜில்லாவில் பந்தோபஸ்துக் கைதியாகவிருந்தார். ஸ்ரீமான் சவர்க்கார் விடுதலையடைந்ததும் அவரைப் பத்திரிகை நிருபர் பேட்டி கண்டபோது பின்வருமாறு கூறினார்:—ரத்னகிரி ஜில்லா மாஜிஸ்திரேட் என்னிடம் கவர்ன்மெண்டின் கடிதத்தைக் கொடுத்தார். அதில் எனது சுதந்திரத்திற்கும், பொது நடமாட்டத்திற்கும் ஏற்படுத்தப்பட்டிருந்த நிபந்தனைகளும் நிர்ப்பந்தங்களும் வாபீஸ் பெறப்பட்டுவிட்டன என்றும் என்னை நிபந்தனையின்றி விடுதலை செய்திருப்பதாகவும் சர்க்கார் குறிப்பிட்டிருக்கிறார்கள்.

* * * *

### திருவாங்கூரைப் பின்பற்றும் வட இந்திய சமஸ்தானம்

மே மாதம் 16-ந்தேதி முதல் தமது சமஸ்தான ஸர்வஜன மந்திரம் என்கிற பிரக்யாதி பெற்ற கோவிலில் ஹரிஜனங்களை அனுமதிக்க லாதி (கத்தியவார்) சமஸ்தானாதிபதி முடிவு செய்திருக்கிறார். இந்தக் கோவிலில் ஸ்ரீராமர் விக்ரஹம் பிரதிஷ்டை செய்யப்பட்டிருக்கிறது.

* * * *

### காங்கிரஸ் கூடுமிடம்

பார்டோலியிலுள்ள ஹரிபுரா கிராமத்தில் அடுத்த காங்கிரஸ் நடைபெறுமென்று தெரிகிறது. இது சம்பந்தமாக மகாத்மா காந்தி ஒரு அறிக்கை வெளியிடுவார்.

* * * *

### பம்பாய் மந்திரிகள்மீது நம்பிக்கையில்லாத் தீர்மானம்

சென்னை மாகாணத்தைப் போல் பம்பாயிலும் மந்திரிகள் மீது நம்பிக்கையில்லை என்று ஒரு தீர்மானத்தில் சட்ட சபை அங்கத்தினர்கள் கையெழுத்திட்டு பம்பாய் கவர்னருக்கு அனுப்பியிருக்கின்றனர். இதில் 105 பேர் கையெழுத்திட்டிருக்கின்றனர். இந்த நம்பிக்கையில்லாத் தீர்மானத்திற்குப் பூர்ண மெஜாரிட்டியிருக்கிறது.

மத்தியமாகாணத்திலும் இத்தகைய மகஜர் தயாராகிவிட்டது.

* * * *


**எங்கே பார்த்தாலும் கலியாண கோலம்**

ஜவுளி

துணிகளின் அழகும், மாதிரியும் முன் எப்போதுமில்லாததாய் இருக்கின்றன. கலியாணப் பெண்ணும் மாப்பிள்ளையும் வெகு உல்லாசமாயன்றே காணப்படுகின்றனர்?

புத்தப் புதிய தினுசுகளில் ஜவுளிவகை வந்து குவிந்திருக்கிறது.

**கேவல்ராம்ஸ்**

இடம்:
வைட் ஷாப்
9—13,
ரட்டான் பஜார்
சென்னை.

ஸ்தாபிதம் 1910

உத்திரவாதமுள்ளது. 800 ரூபா மதிப்புள்ளது.

**22 காரட் ரோல்டு கோல்டு தங்க ஒட்டியாணங்கள்**



விலைகள் சரசமுள்ளதாயும் 300 கெஜ்ஜைகள் கட்டியதும் அசல் சவரன் பொன்னுக்கு ஒப்பானதாக எமது கம்பெனியில் கைதேர்ந்த வேலைக்காரர்களைக்கொண்டு தங்கத்தினல் செய்த ஒட்டியாணத்திற்கும் இதற்கும் யாதொரு வித்தியாசப்படாமல் தயாரித்துள்ளோம். இதை சிறுவர் முதல் பெரியோர் வரையிலும் அணியக்கூடிய ஜாலர் ஒட்டியாணம் 1-க்கு ரூ. 6-8--0; ஷை சின்னது 1-க்கு ரூ. 5-8-0; சாதா கெஜ்ஜை வங்கி ஒட்டியாணம் முதல் நெம்பர் 1-க்கு ரூ. 5-8-0; 2-ம் நெம்பர் 1-க்கு ரூ. 4-8-0; 3-ம் நெம்பர் 1-க்கு ரூ 3-8-0; கைவளையல் பெரிய ஜதை 1-க்கு ரூ. 3-8-0; சின்ன ஜதை 1-க்கு ரூ. 2-8-0; கழுத்துச் செயின் சரம் 1-க்கு ரூ. 3-8-0; கல்மாலை ரூ. 3-0-0. டாலருடன் ரூ. 3-8-0. வி. பி. சார்ஜ் வேறு.

கே. நாதமுனி அண்டு சன்ஸ், 168, சைனபஜார்ரோடு, மதருஸ்.

**காங்கிரஸ் மகாசபை சரித்திரம்**

மூன்று பாகங்கள் விலை ரூ. 6.

மானேஜர், சுதேசமித்திரன் புத்தகசாலை, சென்னை.

"ZANDU"
KESARI JIVAN
THE IDEAL TONIC FOOD
SALE AGENTS DAMODER & Co.
78. CHINA BAZAAR ROAD MADRAS.

## நவ நாகரீகம்

(12-ம் பக்கத் தொடர்ச்சி)

கொள்ளுவதாக இருந்தால், ஒரு நாள் விவாகம் சௌகரியம்தான்.

உபசார முறை ஒன்றுதான்; நவீன வாழ்க்கைக்குத் தகுந்தபடி, சில்லரை விஷயங்களில் வரும் விருந்தினர்களுக்குச் சௌகரியமாக இருக்கும்படி ஏற்பாடுகள் செய்வதையே உங்கள் பக்கந்தாத்து மாட்டுப் பெண் நாருக்கு என்கிறாள். நான் சமீபத்தில் ஒரு சிநேகிதர் வீட்டுக் கலியாணத்திற்குப் போயிருந்தேன். முகூர்த்தத்திற்கு வந்திருந்தவர்களை நாற்காலிகள் போட்டு உட்கார வைத்து, ஐஸ்—பானம் கொடுத்து உபசரித்தார்கள். வெயிலில், தாகமாக என்னமோ இருக்கிறது. இதில் சுடச்சுட காபியைக் கொடுப்பதற்குப் பதிலாக ஐஸ்—பானம் கொடுத்தால் தாகம் அடங்கி ஆரோக்கியமாகவும் இருக்கும். பிறகு பசியும் கெடாது. கலியாணமே என்று சரிகை போட்ட புதுப் புடவைகளைக் கட்டிக்கொண்டு போகிறோம். கலியாண கும்பலில் இது அசௌகரியமாகவே இருக்கிறது. நாற்காலியில் உட்காருவதினால் சற்று விஸ்தாரமாக இருப்பதுடன், சுற்று முற்றும் பார்ப்பதற்கும் சௌகரியமாக இருக்கிறது. சீர் வரிசைகளை அப்படியே அடுக்கி வைக்காமல், வெள்ளி டம்ப்ளர்கள் கிண்ணங்களில், பல வர்ண ஜலத்தை நிரப்பிக் கோலங்கள்போல் தட்டுக்களில் ஜோடித்து வைத்திருந்தார்கள்.

* * * *

### ஊர்கோலம்

மோட்டாரை ஜோடித்து ஊர்கோலம் விட்டால் ஜோராக இருக்குமே? மல்லிகைப் பூக்களினால் மோட்டாரை ஒரு தோணிபோல் அலங்கரித்து, இடையிடையே கனகாம்பரம், மருக்கொழுந்து இவைகளினால் வர்ண வேற்றுமை ஏற்படுத்திச் சிங்காரித்திருந்தார்கள். மோட்டாரை ஒரு அன்னப் பறவை இழுத்துச் செல்வதுபோல் அலங்கரித்திருந்தார்கள். அன்னத்தின் மூக்கில் லகான் போட்டு, இதை இரண்டு பொம்மைகள் பிடித்து ஓட்டும் பாவனையாக வைத்திருந்தது. அன்னத்தின் மின்சார விளக்குக் கண்கள் மிகவும் அழகாக ஜொலித்தது. மோட்டார் காரை ரதம்போல் மூடிவிடாமல், ஒற்றைக் குடையை வைத்துத் திறந்தே ஜோடித்திருந்தார்கள். தெருவில் ஊர்கோலம் மெதுவாக வரும்பொழுது, தோணி அசைந்து, அசைந்து, வருவதுபோல, மிகவும் நேர்த்தியாக இருந்தது. ஆனால், ஊர்கோலம் வர வரக் குறைந்துகொண்டுதான் வருகிறது. நவ நாகரீகத்தில் அதிக முன்னேற்றம் அடைந்தவர்கள், 'ஊர்கோலத்துடன் யாரு தெருவோட நடக்கிறது' என்று இதை நிறுத்திவிடுகிறார்கள். ஆனால் நாகரீகத்தில் முன்னேற்றம் என்பதை எவ்விதம் வரை அடைகிறது என்பதும் புரியவில்லை. புதிய பழக்க வழக்கங்களை அனுசரிப்பவர்கள் என்று நாம் நினைத்துக்கொண்டிருக்கிறோம்; திடீரென்று ஒரு பழைய வழக்கத்தை அனுசரிக்கிறார்கள். தற்காலத்தில், அநேகமாக நல்ல வயது வந்த தம்பதிகளுக்கே விவாகம் செய்கிறார்கள். இதில் நலுங்கு என்று ஒன்று வைக்காவிட்டால் என்ன? சிறிய குழந்தை தம்பதிகள், ஒருவரை ஒருவர் விளையாட்டாக அறிமுகம் செய்துகொள்ளுவதற்காக நம் முன்னோர்கள் நலுங்கு வைத்தார்கள். வேடிக்கையாகவும் இருந்தது. இதை இப்பொழுது ஒரு முக்கியமான அம்சமாகக் கொண்டாடுவானேன்? இது நாகரீகமா?

ஸர் சின்னையா சொல்லுவதுபோல் மின்சார சக்தி ஒரு அப்ஸரஸ். அவளுடைய உதவியினால், வர்ண விளக்குகளைக் கொத்துக் கொத்தாகப் போட்டு, ஜகத் ஜோதியாக சிங்காரம் செய்யப்பட்ட பந்தல்கள், தோட்டங்களைப் பார்த்தால், பிறகு, நீ 'லஸ்டர்' அழகு இல்லையா என்று கேட்கமாட்டாய். அதுவும் பளிச்சென்று கண்ணைப் பறிக்காமல், சற்று மங்கலான பலவர்ண விளக்குகளைப் போட்டு மிகவும் நேர்த்தியாக ஜோடித்து விடுகிறார்கள். ஒரு தரம் பட்டணம் வந்து இதை எல்லாம்தான் பாரேன்.

* * * *

### தினைப் பொங்கல்

சாதாரண வெண்பொங்கலைப் போலவே தினை அரிசியையும் பொங்கல் செய்யலாம். தினையைப் பச்சையாக வேக வைப்பதற்குப் பதிலாக சற்றே வறுத்துப் பயற்றம் பருப்புடன் கலந்து வேகவைக்க வேண்டும். தினையை ஜலத்தில் போட்டு அரித்து எடுத்தால் தான், நன்றாகச் சுத்தமாயிருக்கும். தினையை இலேசாக வறுத்து, அரித்துக் களைந்து ரவை உப்புமா செய்வதுபோல் எலுமிச்சம்பழ ரஸம்விட்டு, உப்புமாக் கிண்டலாம். ஆனால் தினை நன்றாக வேகுவதற்கு நாழிகை ஆகும். இது மலர வெந்து, அளவு நிறையக் காணும். உப்புமாவைவிடப் பொங்கல்தான் நல்ல ருசியாக இருக்கும். தினை உப்பு பக்ஷணங்களைவிட தித்திப்புப்போட்டுப் பண்ணினால் அதிக ருசியாகவும் மணமாகவும் இருக்கும். தினையை அரித்து எடுத்து, நெய்யில் இலேசாகப்பொரித்துப் பாலில் வேகவைத்து மட்டுச் சர்க்கரை, கொஞ்சம்குங்குமப்பூ, ஏலக்காய் போட்டுப் பாயசம்செய்தால்நல்ல ருசியாகவும், வாசனையாகவும் இருக்கும். தினையை நன்றாக வறுத்துத் திரித்து, கியாதிபெற்ற தேனும் — தினைமாவுமாகவும் சாப்பிடலாம். தேனுக்குப் பதிலாக, சர்க்கரை சூடாகக் காய்ச்சப்பட்ட நெய்விட்டுக் கலந்து சாப்பிட்டாலும் நன்றாக இருக்கும். தினை சாப்பிடுவதினால் உடம்புக்கு நல்ல புஷ்டி ஏற்படும் என்று கூறுகிறார்கள். இதைப் பச்சையாக ஊற வைத்து அரைத்து, கோதுமை ஹல்வாப்போல் செய்து பார்க்க உத்தேசிக்கிறேன். பிள்ளையாராக முடிந்தால் உனக்கு எழுதுகிறேன். இல்லாவிட்டால் கப்-சிப் என்று இருக்க வேண்டியதுதானே? மற்றைய விஷயங்கள் அடுத்த கடிதத்தில்.

* * * *



சென்னை இந்தியன் ஓவர்ஸீஸ் பாங்கி காஷியர் ஸ்ரீமான் ஷண்முகசுந்தரமுதலியார் குமாரி பத்மாவதிக்கும் ஸ்ரீமான் ஏ. எம். ஸ்ரீனிவாஸனுக்கும் சமீபத்தில் விவாகம் நடந்தது.



திருப்பத்தூர் ஸ்டேஷன் மாஸ்டர் ஸ்ரீமான் ஆர். தப்புரமணிய அய்யர் குமாரி ராஜலக்ஷ்மிக்கும் காவேரிப்பட்டணம் மாஜி போஸ்ட் மாஸ்டர் ஸ்ரீமான் வெங்கட்ரமணய்யர் குமாரன் லக்ஷ்மி நாராயணனுக்கும் சமீபத்தில் விவாகம் நடந்தது.



திண்டுக்கல் அட்வகேட் ஸ்ரீமான் வி. ஆர். விஸ்வநாதய்யர் குமாரி கல்யாணிக்கும் மதுரை மிராசுதார் ஸ்ரீமான் வி. ஆர். சிவராமசுப்பையர் குமாரன் சுந்தர ராமசுப்ரமணியனுக்கும் சமீபத்தில் விவாகம் நடந்தது.


## ரஞ்சிதமான துணிமணிகள்

எம்மிடம் ஏராளமாக இருக்கின்றன. எல்லாம் மனதிற்கு உகந்த ரகங்கள்; வந்து பாருங்கள்; வேண்டியதை மகிழ்வுடன் தெரிந்தெடுங்கள்.

**என். வி. பாலுசாமி அய்யர் & ஸன்,**

—மூலைக் கடை—

நைனியப்ப நாயக்கன் வீதி, மதராஸ்.



வழுக்கை, செம்பட்டை இள நரைகளைத் தீர்ப்பது

## கேசவர்த்தினி

ஒன்றே

மாத உபயோகத்துக்குப் போதுமான புட்டி

விலை அணா 12.

மேற்செலவு வேறு.

தயாரிப்பவர்: தென் இந்திய ரஸாயன சாலை

மயிலாப்பூர், சென்னை.



# நாட்டு நடப்பு-சித்திரக் கண்ணாடி

(மேல்படம்)

ஸ்பானிய யுத்தம்-பில்போ போர்-முனை.

(வலது பக்கம்)

பம்பாயில் ஸ்ரீமான் எம். ஆர். ஜெயகர் மூன்றுவது இந்தியக் கைத்தொழில் பொருட் காட்சியைத் திறந்து வைத்தார்.









தஞ்சையில் நடைபெற்ற 28-வது சென்னை மாகாண கல்வி மகாநாட்டை ஸ்ரீமான் ஸி. ராஜகோபாலாச்சாரியார் திறந்து வைத்தார். (வலது பக்கம்) சென்றமாதக் கடைசியில் ஹிட்லரின் பிறந்ததினக் கொண்டாட்டம் நடைபெற்றது. அப்போழுது 14,000 போர்வீரர்கள் அணிவகுத்துச் சென்றதை ஹிட்லர் பார்வையிட்டுக்கொண்டிருந்தபோது எடுத்தபடம்.

## தென்னிந்தியப் பிரமுகர்கள்

(10-ம் பக்கத் தொடர்ச்சி)

உதவிக் காரியதரிசியாக முறையே இருந்தார். 1905 முதல் 1908 வரை ரெவினியூ போர்டு உதவிக் காரியதரிசியாக இவர் இருந்தார். 1910-ல் ஜில்லாக்களிலும் செகரடேரியட் ஆபீஸ், ரெவினியூ போர்டாபீஸ்களிலும், இவரது நீண்டகால உழைப்பைப் பாராட்ட, இவருக்கு "ராய்பஹதூர்" பட்டம் அரசாங்கத்தாரால் வழங்கப்பட்டது. உத்தியோகத்திலிருந்து விலகுவதற்கு முன்பு இவர் தேவகோட்டையில் டிபுடி கலெக்டராகவிருந்தார். இவர் தமது சலுகை மூலம், ஆஸ்பத்திரி கப்பலுக்கு நாட்டுக்கோட்டைச் செட்டிமார்களிடமிருந்து சுமார் 12 லக்ஷம் ரூபாய்கள் வசூலித்துக்கொடுத்தார்; தவிரவும் அவர்கள் பெருந் தொகைகளை யுத்தக் கடனுகக் கொடுக்கும்படியாகவும் இவர் செய்தார். இவ்விஷயமாக இவர் செய்த காரியங்களும் கவர்னர் பெண்ட்லண்டு பிரபுவால் சிலாகிக்கப்பட்டது. 1919-ம் வருஷாரம்பத்தில் இவர் உத்தியோகத்திலிருந்து பென்ஷனுடன் விலகிக்கொண்டார். ஆகவே, இவர் அநேக வருஷங்கள் அரசாங்கத்தாருக்காக உழைத்து வந்தார்.

### ஸ்தலஸ்தாபன சேவை

ராய்பஹதூர் சிவக்ஞானம் பிள்ளை பின்பு திருநெல்வேலிக்குத் திரும்பினர். உடனே திருநெல்வேலி ஜில்லா போர்டுக்கு, முதலாவது உத்தியோகப்பற்றில்லாத பிரஸிடெண்டாக இவரைக் கவர்ன்மெண்டார் நியமித்தனர். இந்த ஸ்தல சுயவாட்சி விஷயங்களில் விசேஷ ஞானம் உள்ளவராதல்பற்றி இவர் 1923 வரையில் இந்த ஸ்தானத்தைத் திறமையுடன் நிர்வகித்தார். இக்காலத்தில் இவர் தாம் பிரதான நிர்வாகி என்பதை உணர்ந்து, மெம்பர்களின் நோக்கங்கள் முதலியவற்றில் கலந்துகொள்ளாமல், தாம் கௌரவமாகவிருந்து வந்தார். திருநெல்வேலி திருச்செந்தூர் இருப்புப்பாதையை நிர்மாணிப்பதில் இவரே முக்கியஸ்தராகவிருந்து வந்தார். தவிரவும் இதே காலத்திலிருந்தே இவர் ஜில்லா கூட்டுறவு பாங்கிங் யூனியன், சிவ தேவஸ்தானக் கமிட்டி, ஜில்லா கல்விச் சங்கம் ஆகிய பொது ஸ்தாபனங்களின் கௌரவ அக்ராஸனதிபதியாக விருந்து சிரமப்பட்டு வந்தார். இவர் எல்லா பெரிய பதவிகளையும் ஸ்வீகரித்துவிட்டு, அலெக்ஸாண்டர்போல், புதிய உலகங்களைக்கைப்பற்ற எதிர்பார்த்து வந்தார் என்று "மதராஸ் மெயில்" பத்திரிகை அச்சமயம் எழுதியது.

இந்த சந்தர்ப்பத்தில்தான் இவருக்குச் சென்னை மாகாண மந்திரி பதவி கிடைத்தது. 1919-ம் வருஷம் ஜூலை மாதம் திருநெல்வேலி, மதுரை, ராமநாதபுரம் ஜில்லாக்களின் பிரதிபிரதிநிதியாக இவர் சென்னை சட்டசபைக்குத் தேர்ந்தெடுக்கப்பட்டார். பின்பு 1922-ல் இவர் திருநெல்வேலி—பாளையங்கோட்டை பிரதிநிதியாகவும் இவர் அனுப்பப்பட்டார். 1923-ல் திருநெல்வேலி மஹம்மதியரல்லாதார் தொகுதியினராலும் இவர் தேர்ந்தெடுக்கப்பட்டார்.

### பப்ளிக் ஸர்விஸ் கமிஷன்

1922-ல் ராய்பஹதூர் சிவக்ஞானம்பிள்ளைக்கு, "திவான் பஹதூர்" பட்டமும் அளிக்கப்பட்டது. திவான்பஹதூர் சிவக்ஞானம் பிள்ளை 1923-ல் அபிவிருத்தி மந்திரியாக நியமிக்கப்பட்டு, 1927-ம் வருஷ பரியந்தம் உயர்பதவியை அலங்கரித்து வந்தார். மந்திரியாகவிருக்கையிலும் இவர் அற்பச் சண்டைகளில் ஈடுபடாமல், தேசத்தின் அபி




# திட ஆரோக்கியமே

## மண வாழ்க்கையில் சந்துஷ்டி தருவது

புருஷனும், மனைவியும் ஆரோக்கியமாக விருந்தால் அவர்களது மண வாழ்க்கையைத் துயரம் கவிந்து கொள்ளாது. அவர்களது குழந்தைகளும் ஆரோக்கியமாகவிருக்கும்.

ஆனல் புருஷன் மெலிந்து போயும், மனைவி நோய் வாய்ப்பட்டும் இருந்தால் அவர்கள் வாழ்க்கையில் சுகமேது, இன்பமேது?

எனவே தேகம் மெலிந்து, அயர்ச்சி ஏற்பட்டுக் கொண்டிருந்தால் தவறுமல் ஸனடோஜன் சாப்பிடுங்கள். புதிய இரத்தத்தைப் பெருக்க வல்ல சத்துக்கள் ஸனடோஜனிலிருக்கின்றன. ஸனடோஜன் மீண்டும் யௌவனத்தைத் தருகிறது; புருஷனும் மனைவியும் இன்புற்று வாழும்படி; உங்கள் மனைவி அழகுடனும், மகிழ்வுடனுமிருக்கவும் நீங்கள் வலுவுடனும், ஜீவசக்தியுடனுமிருக்கவும் தவறுதீர்கள்.

ஸனடோஜன் உபயோகித்த ஒருவர் எழுதுகிறுர்:

"என் குடும்பத்திற்கே ஆதாரம் ஸனடோஜன். என் மனைவி மீண்டும் இளமையையும சவுந்தர்யத்தையும் பெறருள்; என் குழந்தைகள பூரண ஆரோக்யத்துடனிருக்கின்றன; அவர்கள ஆனந்தமாக விளையாடுவதைக் கண்டால் மனதிற்கு இன்பமாக விருக்கிறது இம்மட்டோ! நானும நல்ல வஜ்ஜிர சரீரத்துடனிருக்கிறேன்.

உங்கள் குடும்பத்திலும் இத்தகைய ஆரோக்கியம் நிலவட்டும், மண வாழ்க்கையில் சௌக்கிய முண்டாகட்டும்.




# SANATOGEN

உண்மையான டானிக் உணவு.

எல்லா மருந்து ஷாப்புகளிலும் கிடைக்கும்

ஸனடோஜன் கைபடாமல் தயாரிக்கப்படுவது; மத பூர்வமான ஆட்சேபிக்கக்கூடிய எந்தச் சாக்குமில்லை.

விருத்திக்கான முறைகளிலேயே தமது நோக்கத்தைச் செலுத்தி வந்தார். பதவிகளுக்கு ஆட்களை நியமிப்பதற்கு மந்திரிகளுக்கு இருந்த அதிகாரங்கள், பொறுப்பாட்சிக்கு விரோதகரமானது என இவர் நம்பினார்; தவிரவும், இதனால் சர்விஸ்களுக்கு அனர்த்தம் விளைவதாகவும் இவர்நம்பினார். இவர் தாமே ஆட்களைப்பொறுக்கியெடுக்காமல், அவ்வவ் விலாகாத் தலைவர்களுக்கே அந்த உரிமையை விட்டுக்கொடுத்து விட்டதைப்பார்த்து இவரது கக்ஷிக்காரர்கள் இவரைத் தூஷித்ததுண்டு. ஜாதிப் பிரகாரம் உத்தியோகஸ்தர்களை நியமித்துக்கொண்டபோதிலும், அவரவர்கள் உழைப்பிற்கேற்றபடி அவர்கள் உயர்த்தப்படவேண்டும் என்பது இவரது துணிபு. பின்பு ஸைமன் கமிஷன் முன்பு இவர் ஒரு யாதாஸ்தை சமர்ப்பிக்கையில், "பப்ளிக் சர்விஸ் கமிஷன்" ஒன்று சீக்கிரம் ஸ்தாபிக்க வேண்டுமென்றும், அப்போதுதான் பொது உத்தியோகங்கள் அற்ப விஷயங்களால் பாதிக்கப்படாமலிருக்கும் என்றும் இவர் எழுதினார். இதில் அபிப்பிராய பேதம் நேரிடக்கூடுமாயினும், இவர் தாம் அந்தரங்கமாக எண்ணியதை சர்விஸ்களின் நன்மையை யுத்தேசித்து வெளியிட்டார். இன்னும் பல விஷயங்கள் பற்றி இவர் தயாரித்த யாதாஸ்து பெருமை வாய்ந்ததாகும். ஆனால், இவர் மந்திரியாகவிருந்து செய்த காரியங்கள் பூராவும் வெளியே தெரிவது எதிர்பார்க்கக் கூடியதல்ல. ஆரம்ப வழிகளை நிர்மாணித்து, அவை அனுசரிக்கப்படுவதை இவர் பிறருக்கு விட்டுவிட்டார். ஆனால் இவரது காரியங்களுக்குள் மிக்க பஹுமானிக்கத்தக்கது தம் கீழ் இருந்த இலாகாக்களுக்கு இந்தியர்களையே அதிகாரிகளாக நியமித்ததுதான். விவசாயம், கைத்தொழில், கூட்டுறவு முதலிய விலாகாக்களுக்கு இந்தியர்கள் அதிகாரிகளாக விருந்தால், விரிந்த நோக்கத்துடன் உதவுவார்கள் என்ற எண்ணம் இவருக்கு உண்டு. இவ்விஷயத்தில் இவர் ஜயம் பெற்றார். மிஸ்டர் (இப்போது ஜஸ்டிஸ்) வி. பாண்டுரங்கராவை இவர் அபிவிருத்தி இலாகாவின் முதலாவது காரியதரிசியாக நியமித்தார். கைத்தொழில் இலாகாவின் முதலாவது இந்திய டைரக்டராக இவர் மூலம் ஸர் டி. விஜயராகவாச்சாரியார் நியமிக்கப்பட்டார். திவான்பஹதூர் கே. தெய்வசிகாமணி முதலியாரைக் கூட்டுறவு இலாகா ஜாயிண்ட் ரிஜிஸ்திராராகஇவர் நியமித்தார். விவசாயக் கல்லூரியின் முதலாவது இந்திய பிரின்ஸிபாலாக இவர் ராவ்பஹதூர் எம். ஆர். ராமஸ்வாமி சிவனை நியமித்தார். மீன் பிடிப்பு இலாகாவின் முதல் இந்திய டைரக்டராக இவர் டாக்டர் பி. சுந்தரராஜை நியமித்தார்.

1907-ல் ராயல் அதிகாரப் பிரிவினை கமிஷன் முன்பு இவர் சாக்ஷியம் கொடுத்தார். அப்போதே ஸ்தல சுயவாட்சி ஸ்தாபனங்களின் அவசியத்தை இவர் வற்புறுத்தினார். இதேமாதிரியாக 1927-ல் ஸைமன் கமிஷன் முன்பும் இவர் தமது யாதாஸ்தில் குறிப்பிட்டார். தாலுகா போர்டுகள் நிர்வாக வண்டியில் ஐந்தாவது சக்கிரம் என்றும், அவையும் போகவேண்டும் என்று இவர் சொன்னார். ஜனங்களுக்குள் உணர்ச்சியானது பஞ்சாயத்துகள் மூலம்தான் ஏற்படக்கூடும் எனவும், இது கூட்டுறவு இயக்கம்போல் நடத்தப்படவேண்டுமெனவும் சொன்னார். ஹார்டாக் கமிட்டி முன்பு இவர் ஒரு தமிழ்ச் சர்வகலாசாலையை ஏற்படுத்தப்படவேண்டியதின் அவசியத்தைப் பற்றி விரிவாகச் சொன்னார்; இச்சமயம் இவர் தமது அபீஷ்டங்கள் பூராவையும் வெளிப்படுத்தினார். முன்பு மந்திரியாகவிருந்தபோது இந்த யோசனையைப் பூராவும் வெளிப்படுத்த மற்றவர்கள் விரும்பவில்லை!

**தமிழ் சர்வகலாசாலைத் திட்டம்**

இவருடைய தமிழ் சர்வகலாசாலைத் திட்டமானது இவருக்கு பெரிய மகிழ்ச்சியை விளைவிப்பதாக விளங்கி வந்தது. இந்தத் திட்டத்தில் இவர் சர்வகலாசாலைக் கல்வியுடன் நின்றுவிடவில்லை. தமிழ் நாட்டுச் சிறுவர்களுக்கான ஆரம்ப உயர்தரக் கல்வி அவசியத்தைப் பற்றியும் இவர் எழுதினார். இவர் செலவில்லாத ஒரு கல்வி முறையைத் தயாரித்தார். இதன் பிரகாரம் சிறுவர்கள் விஷயங்களைக் கற்பதுடன் தங்கள் வேலை மூலம் சம்பாதிப்பதும் அனுகூலமாகியது. இந்த முறை சர்வகலாசாலை வித்யாப்யாசத்திற்கு முன்பு சாதாரண புத்தியுடைய இளைஞர்களுக்காக என இவரால் குறிப்பிடப்பட்டது. தமிழ் ஜில்லாக்களுக்கு ஒரு சமஷ்டி சர்வகலாசாலை தான் பொருந்தும் என்பதும் இவரது அபிப்பிராயம். தவிர இவர் அக்காலத்திலேயே ஹிந்திபாஷைக்குப் பிரதான்யம் அளிக்கப்படவேண்டும் என்று போதித்து வந்தார்; ஆனால், ஹிந்திக்குத் தமிழிற்கு அடுத்த ஸ்தானம் தான் இவரால் நிர்ணயிக்கப்பட்டது. இப்போதுதான் ஹிந்தியைக் கற்கவேண்டியதின் அவசியம் எல்லோருக்கும் புலப்பட்டு வருகிறது.

**எல்லோருடனும் சகஜமாக விருப்பவர்**

1926-ல் திவான்பஹதூர் பிள்ளையவர்களுக்கு "ஸர்" பட்டமும் அளிக்கப்பட்டது. ஸர் சிவக்ஞானம் பிள்ளைக்கு நல்ல ஸ்வபாவம் உண்டு. கோழி வளர்ப்பதில் இவருக்கு விசேஷ பிரியம் உண்டு. தாம் மந்திரியாகவிருந்த காலத்திலும் இவர் மேற்குறிப்பிக்கப்பட்டபடி பொழுதுபோக்குவதில் பிரியம் கொண்டு வந்தார். உருதுபாஷையில் இவருக்கு விசேஷ ஞானம் உண்டு; இந்த பாஷையை இவர் தமது மனவமைதிக்காக அப்யஸித்து வந்தார். தமது வாழ்நாள் முழுமையும் இப்பாஷா ஞானத்தை விஸ்தரிப்பதிலேயே இவர் கழித்து வந்தார். தமது அந்தியக் காலத்திலும் உருது பாஷையிலேயே இவர் மகிழ்ந்திருந்தார். பிலியர்ட்ஸ், படகு ஓட்டுதல் முதலிய விளையாட்டுகளிலும் இவர் திறமை வாய்ந்தவராகவிருந்தார். ஒரு சமயம் தமது ஆபீஸில் குமாஸ்தாவாகவிருந்த ஒரு நண்பர் காவேரி நதியில் விழுந்துவிட்டபோது, இவர் அவனைக் காப்பாற்றினார்; இதற்காக அச்சமயம் கலெக்டர் துரை இவருக்கு ஒரு தங்க மோதிரத்தைப் பரிசாகக் கொடுத்தார். மற்றுமொரு சமயம் மந்திரியாகவிருக்கும்போது, மலையாளப் பிரதேசத்தில் சுற்றி வருகையில், கழி ஜலத்தில் படகை ஓட்டும்போது, இவர் தமது உடுப்பைக் களைந்துவிட்டு, தாம் ஒரு பிறவிப்படகோட்டிபோல, படகை ஓட்ட ஆரம்பித்துவிட்டார்! எல்லோருடனும் சகஜமாகவிருந்து, பலரையும் தம்மிடம் ஆகர்ஷிக்கும் சக்தி இவரிடம் அமைந்திருந்தது. ஆயினும் ஸர் சிவக்ஞானம் வாழ்க்கையில் பலவித துயரங்களுக்கும் ஆளாகியவர்.

ஒரு சமயம் ஒரு ஸாதுவுடன் பேசும்போது முடிவில் இவர், "நம்மிருவருக்கும் உள்ள வித்யாஸம் நமது ஆடையில்மட்டுமே" என்று சொல்லி முடித்தார். இதிலிருந்து இவரது மனோபாவம் தெளிவாக வெளிப்படுமன்றோ! இவர் போன்றவர்களுக்கு, ராஜ விசுவாசமானது தேச பக்தியின் முக்கியாம்சமாக விளங்கியது. இவர் பொதுவாக மிருதுவான ஸ்வபாவத்துடன், இருந்தவர், தீவிரவாதியல்லர். ஒரு சமயம் ஒரு பொதுக் கூட்டத்தில் "நாமார்க்கும் குடியல்லோம்" என்ற திருநாவுக்கரசரின் அடிகளை இவர் ஆரம்பித்துவிட்டார். ஆயினும் பின்பு ராஜவிசுவாசத்தைத் தெரிவித்துத் தீவிரத் தன்மையை அப்போது நிவர்த்தித்துக் கொண்டார். இளம்பிராயத்தில் தமது நாஸ்திக வாதத்தை இவர் தமது கிறிஸ்துவர் கலாசாலைப் பத்திரிகையில் எழுதிய வியாஸங்களால் நிரூபித்தார். சிறுவர்களிடம் இவருக்கு விசேஷ அன்பு உண்டு. ஒரு சமயம் இவர் ஒரு பள்ளிக்கூடத்தைப் பரீக்ஷிக்கச் சென்றார். அப்போது ஒரு வகுப்பில் ஒரு உபாத்யாயர் பிரம்பை வைத்துக்கொண்டு உபயோகிப்பதைப் பார்த்து, உடனே அங்கு சென்று, அந்தப் பிரம்பை மூன்று துண்டாக முறித்து எறிந்தாராம்!

அரசியல் விவகாரங்களில் இவருக்கு எதிரிகளாகவிருந்தவர்களும் இவரது சிரேஷ்டமான குணத்தையும் லக்ஷியத்தையும் சிலாகிக்காமலிருந்ததில்லை. மஹாத்மா காந்திஜி மாதிரி, உணவு விஷயங்களில் இவர் கருத்து கொண்டிருந்தார். கொடைக்கானல், அடையாறு "போட் கிளப்பு"களில் இவர் மெம்பராகவிருந்தார். அடையாறு கிளப்பில் இவருக்கு முன்பு ஒரு ஹிந்துவும் சேர்த்துக் கொள்ளப்பட்டதில்லை. இந்த அநியாயத்தை இவர் கவர்னர் பிரபுவுக்குத் தெரியப்படுத்தி, தமது உரிமையைச் சாதித்துக் கொண்டார். மந்திரி பதவியிலிருந்து நீங்கிய பின்பு இவர் ஒரு தமிழ் பண்டிதரை அமர்த்திக்கொண்டு, அவரிடம் முறையே சைவ சித்தாந்தம், குறள்முதலியவற்றைபடித்தார்.

ஸர் சிவக்ஞானம் பிள்ளை அடிமை வாழ்வு பூண்டவரல்லர். இவர் யாவரையும் சமமாகவே பாவித்து வந்தார். இவர் மதுரையில் டிபுடி கலெக்டராகவிருந்தபோது ஜலக்கஷ்டம் ஏற்பட்டது. அப்போது வைகை நதியிலிருந்து குடிப்பதற்கு மட்டும் தான் ஜலம் எடுத்துக்கொள்ளப்படவேண்டும் என்ற உத்தரவு பிறப்பிக்கப்பட்டது. கலெக்டரின் வண்ணான் இவரிடம் வந்து கலெக்டர் துரையின் துணிகளை வைகையில் தோய்க்க அனுமதிக்க வேண்டும் என்றும், கலெக்டர் கோடைக்கானலில் துணிகளை அவசரமாக எதிர்பார்ப்பதாகவும் சொன்னான். ஆனால், இவர் அனுமதிக்க மறுத்துவிட்டார்.

ஸர் சிவக்ஞானம் பிள்ளை தமது அந்திய பத்து வருஷங்களை நிம்மதியாகக் கழித்து வந்தார். காங்கிரஸ்வாதிகள் சட்டசபையில் பிரவேசித்ததன் காரணமாக ஸர் சிவக்ஞானம் 1927-ல் சட்டசபைத் தேர்தலில் தோல்வியுற்றார். அது முதற்கொண்டே இவர் அதிகமாகப் பொதுவாழ்வில் கலந்துகொள்ளவில்லையாயினும், இவரது சிறப்பு குறையவில்லை. 1936-ம் வருஷம் ஜூன் மாதம் ஸர் சிவக்ஞானம் பிள்ளை தமது ஊரில் தமது 75-வது பிராயத்தில் சில காலமாகவே தேக அசௌக்யத்தினால் உபத்திரவப்பட்டு சிவபதமடைந்தார். இப்பெரியாருடைய மறைவினால் தென்னிந்தியா ஓர் அரும் புருஷரை இழந்தது!

SAVE YOUR EYE

From ALL TROUBLES, even Cataract.
Try 'SELLER'S LOTUS HONEY
—The nature's own remedy. Absolutely safe. Sure, world-wide reputed and Tested. At all Chemists. Literature Free
'L. H. Seller, Samta, Bengal
Beware of Imitation—Insist on SELLER'S






**மதுரம்மிக்க மாங்காய்கள் மலிந்து தோன்றும் காலமிது**

உணவுக்கு உருசியையும் உடலுக்கு உறுதியையும் கொடுக்கவல்ல மாங்காய்களைக் கொண்டு

**ஊறுகாய்கள்**

போடுவதற்கு உகந்த காலம் இதுவன்றோ!




ஊறுகாய்கள் நறுமணங் கமழ்ந்து நாட்பட இருக்க வேண்டுமானல் **எல். ஜி** பெருங்காயத்தை நிறைய உபயோகிக்க மறந்துவிடாதீர்கள். எந்தக்காயம் தமிழ் நாட்டில் பழமையானதோ எது தமிழன்னைகளால் பட்டணங்காயமென்று சிலாகிக்கப்பட்டு வருவதோ, கணக்கில்லாத தங்க வெள்ளிப் பதக்கங்களைப் பெற்று ஒப்பும் உயர்வும் இன்றி விளங்குகின்றதோ அதுவே, அந்த **எல். ஜி.** பெருங் காயத்தை ஊறுகாய்களுக்கு உபயோகப்படுத்தி, ஜாடிகளில் நிரப்பிவைத்து ஆண்டு முழுவதும் உணவுடன் சுவைத்துச் சுவைத்து இன்புறுங்கள்.



**லால்ஜி கோது & கம்பெனி.**
பிரபல பெருங்காய வியாபாரிகள்.
தலைமை ஆபீஸ்:
பம்பாய் — சென்னை.
பிராஞ்சு :
கும்பகோணம்.



**உங்கள்**

**குழந்தைக்கு**

**டோங்கரேயின்**

**பாலாம்ருதமும்**

கொடுங்கள்.

டோங்கரேயின் பாலாம்ருதம் என்பதென்ன ?

1. **டோங்கரேயின் பாலாம்ருதம்** குழந்தைகளுக்கான ஓர் சிறந்த டானிக்.

2. நீடித்த தொந்தரவான இருமலையும், சாதாரண ஜுரத்தையும் போக்குகிறது.

3. மேலிந்து கிடக்கும் குழந்தைகளுக்கு வலுவூட்டுகிறது.

4. பல் முளைக்கையில் குழந்தைகளுக்கு உதவிசெய்கிறது.

மதராஸ் ஏஜண்டுகள்:

**ஏ. பி. பரேக்,** 268, சைனு பஜார் ரோட்.




**10 வருஷம் உத்திரவாதமுள்ள புது மாதிரியான பஞ்சவர்ண கல்செயின்கள்**

(செயின் 1-க்கு)

**ரூபாய் 5-0-0.**

**எங்கள் ரோல்டு கோல்டு செயின்கள் ஐந்துவித நிறமான செயற்கை கற்கள் வைத்துக் கட்டிய இந்த புது மோஸ்தர் செயின்களை குழந்தைகளும், பெரியவர்களும் அணிந்து ஆனந்தமடையலாம்.**

(கேட்லாக் இலவசம்)

***R. S. பிரகாசம் & Co,***

அலாய் கோல்டு ஜுவல்லர்ஸ்.

**187, சைனு பஜார் ரோட், ஜி. டி மதறாஸ்.**

## இது ஓர் ஆச்சரிய ஜோதிடம்!!!

ஆண் பெண் சகல மதஸ்தர்களுக்கும் இல்வாழ்க்கை திறவுகோல் இதுவே! தங்கள் எண்ணத்தை எனக்கு தெரிவிக்காமலே ஜனன காலம் தேவை அல்லது எனக்கு கடிதம் எழுதும நேரம் எழுதவும். திரிகாலபலனை தங்களுக்கு அறிவிக்க ரூ. 2-0-0. தங்கள் எண்ணத்தை தெரிவித்து 1 முதல் 5 கேள்விக்கு ரூ. 1—0—0. ராசி முதல் டிக்ரிவரை கணித்து ஒரு வருட பலன எழுத ரூ. 5-0-0 இஷ்டார்த்த சித்தி ரக்ஷையும், மூலிகையுடன் தயார் செய்து அனுப்ப ரூ. 10-0-0 வி. பி. பிரத்தியேகம். по, முத்துவேல் முதலியார், கலைமகள் ஜோதிடம், தேரடி வீதி, 48 நெ, திருப்பாபுலியூர் (தென் இந்தியா)




# மரியாதைராமன் கதை

வழியில் வித்வான் திரவியத்தைப் பிடுங்கிக்கொண்டது.



ஹாஸ்யப்பகுதி



மேஜையைத் துடைத்துக்கொண்டிருந்த நாயரை ஒரு பார்வை பார்த்தார் ஹோட்டல் சொந்தக்காரர். உடனே குமரன் முகத்திலும் தலையிலும் முதுகிலும் அடிகள் விழுந்தன.

# விதியின் விளையாட்டு

(ஸ்ரீமான் எஸ். ரங்கஸ்வாமி)

லோன்ஸ்கொயர் பார்க்கில் உள்ள ஒரு பெஞ்சில் குமரன் மிகுந்த ஆயாசத்துடனும், மனக்கவலையுடனும் உட்கார்ந்துகொண்டிருந்தான். வானம் முழுதும் கறுத்த மேகங்களால் மூடப்பட்டிருந்தது. சிலுசிலென்று சாரல் காற்று அடித்துக்கொண்டிருந்தது. ஒரு மெல்லிய சட்டையையும், ஒரு நாலு முழத்தையும், ஒரு சிறிய துண்டையும் அணிந்திருந்த குமரனால் குளிரைத் தாங்க முடியவில்லை. மழைக்காலத்தின் கஷ்டங்களைத் தவிர்க்க ஒரு வழி தேடவேண்டும் என்ற முடிவிற்கு வந்தான்.

அவன் ஆசை சிரம சாத்தியமானதல்ல. அவன் கோரியதெல்லாம் கொஞ்சகால ஜெயில் வாழ்க்கைதான். சாப்பாட்டுக் கவலையின்றி குளிர், மழைகளின் உபத்திரவமின்றி மாரிகாலத்தைக் கழிக்க வேண்டுமென்பதுதான் அவன் விருப்பம். அவன் ஒரு பழைய பெருச்சாளி. ஜெயில் வாழ்க்கை அவனுக்குப் புதிதல்ல. பலதடவைகளில் சின்னஞ் சிறு திருட்டுக் குற்றங்களுக்காக சர்க்கார் விருந்தாளியாக இருந்திருக்கிறான். இப்பொழுதும் ஏதாவதொரு குற்றத்தைச் செய்து ஜெயிலுக்குப் போவதென்று தீர்மானித்தான். இதைச் செய்வதற்குப் பல சுலபமான வழிகளுண்டு. ஒரு காப்பி ஹோட்டலில் நுழைந்து வயிறாரப்பலகாரங்களையும் காப்பியையும் சாப்பிட்டுவிட்டுக் கையில் காசு இல்லை என்று சொல்லிப் போலீஸாரிடம் ஒப்படைக்கப்பட்டு, மறுநாள் போலீஸ் மாஜிஸ்டிரேட்டால், தண்டிக்கப்படுவதுதான் மற்றவைகளைக் காட்டிலும் த்ருப்திகரமானது.

குமரன் பெஞ்சை விட்டு எழுந்திருந்து பிராட்வே வழியாக எஸ்ப்ளனேடை அடைந்து அங்கே உள்ள முதல்தரமான ஹோட்டல்கள் ஒன்றின் முன் நின்றான். வாயிற்காப்போன் சந்தேகத்திற்காளாகாமல், அவனிடம் தப்பி உள்ளே நுழைந்துவிட்டால் அவன் விரும்பியது கைகூடிவிடும். வாயிற் படிக்கட்டுகளைக் கடந்து உள்ளே நுழையப் போகும் சமயம் காவல்காரன் குமரனை ஏற இறங்க ஒரு முறை பார்த்துச் சட்டென்று கையைக் கெட்டியாகப் பிடித்துப் பத்து கஜ தூரத்திற்கப்பால் கொண்டு போய்விட்டான்.

தன் விருப்பம் நிறைவேறாததால் ஏமாற்றத்தை யடைந்த குமரன் யோஜனையிலாழ்ந்து சைனாபஜாரை நோக்கி நடந்தான். ப்ரபல தங்க, வைர வியாபாரிகளான பகவன்தாஸ் அண்டு - ஸன்ஸ் கடையை அடைந்ததும் பளிச்சென்று ஒரு யுக்தி அவனுக்குத் தோன்றியது. பக்கத்தில் கிடந்த ஒரு கல்லை எடுத்து வாயில் ஜன்னல் கண்ணாடியைக் குறிபார்த்து வேகமாக எறிந்தான். கண்ணாடி உடைந்த சப்தத்தைக் கேட்டு, கடைச் சொந்தக்காரர்களும், அக்கம் [illegible] லுள்ள ஜனங்களும் [illegible] லீஸ் அதிகாரியும் வீதியில் ஓடி வந்தார்கள்.

கைகள் இரண்டையும் பின்னால் கட்டிக்கொண்டு போலீஸ் அதிகாரி வருவதைப் பார்த்து ஒரு புன் சிரிப்புச் சிரித்தான் குமரன்.

சற்றுப் பரபரப்புடன், "இந்த அதிக்ரமத்தைச் செய்தது யார்?" என்று வினவினார் போலீஸ் அதிகாரி.

"ஏன், நான்தான் கண்ணாடியை உடைத்தேன். இதை நான்தான் செய்திருக்கக்கூடும் என்று நீர் அனுமானிக்கவில்லையா?" என்றான் குமரன், கொஞ்சம் பெருமையுடனும், தான் எதிர்பார்த்த அதிர்ஷ்டத்தை அடைபவன் போலும்.

போலீஸ் அதிகாரி குமரன் சொன்னதை நம்பவில்லை. அவர் எள்ளளவும் அவனைச் சந்தேகிக்கவில்லை. ஜன்னல் கண்ணாடிகளை உடைக்கும் திருடர்கள், போலீஸார் வருகைக்குக் காத்திருந்து அவர்களிடம் வாக்குவாதம் செய்யமாட்டார்கள். அவர்கள் வருமுன் காற்றாய்ப் பறந்துவிடுவார்கள். சற்று தூரத்தில் புறப்பட்டுக்கொண்டிருந்த டிராம்காரைப்பிடிப்பதற்காக வேகமாக ஓடிக்கொண்டிருந்த ஒரு மனிதனைத் துரத்திச் சென்றார் போலீஸ் அதிகாரி. இருமுறை தோல்வியடைந்த குமரன் மிகுந்த வெறுப்புடன் மேலே நடந்தான்.

எதிர்ப்பக்கத்தில் ஒரு சிறிய ஹோட்டல் இருந்தது. தைர்யமாக உள்ளே சென்று வயிறு நிறையப் பூரியையும் உருளைக்கிழங்கையும் தோசையையும் காப்பியையும் சாப்பிட்டுவிட்டுத் தன்னிடம் காலணாக்கூட இல்லை என்பதைத் தெரிவித்தான். ஹோட்டல் சொந்தக்காரர் கொஞ்சம் யோஜனை செய்தார்.

"என்ன யோஜனை? இந்த மாதிரி ஒரு கனவானைக் காக்க வைப்பது அழகல்ல. உடனே போலீஸுக்குத் தகவல் சொல்லி, மேல் நடவடிக்கை எடுத்துக்கொள்ளும். அதோ ஒரு போலீஸ்காரன் இருக்கிறான்" என்றான் குமரன்.

"உன்னைப் போலீஸாரிடம் ஒப்படைக்கப் போவதில்லை. உனக்குச் சரியான சூடு கொடுத்தனுப்புகிறேன் பார்" என்று சொல்லி மேஜையைத் துடைத்துக்கொண்டிருந்த நாயரை ஒரு பார்வை பார்த்தார் ஹோட்டல் சொந்தக்காரர்.

உடனே குமரன் முகத்திலும், தலையிலும், முதுகிலும் பல அடிகள் விழுந்தன. அடி பொறுக்கமாட்டாமல் ஹோட்டலை விட்டு வெளியே ஓடினான். இதையெல்லாம் கவனித்துக்கொண்டிருந்த போலீஸ்காரன் குமரனைப் பார்த்துப் பரிஹாசமாகச் சிரித்துவிட்டுத் தன் வழியே சென்றான்.

குமரன் என்ன செய்வதென்று தெரியாமல் க்லேசமடைந்தான். இந்தப் போலீஸ்

மூலவியாதி அடியோடு நீங்கும்

"ஹடன்ஸா"




இரத்தம் வடிதலை நிறுத்தி மூலவியாதி எந்த நிலைமையிலிருந்தாலும் குணப்படுத்துகிறது. உலகப்பிரசித்திப்பெற்ற வைத்தியர்களால் சிபார்சு செய்யப்பட்டது. எல்லா ஆஸ்பத்திரிகளிலும் உபயோகிப்பது. மூலம் பௌத்திரம் வியாதிகளுக்கு பத்திரமும் சீக்கிரமுமான நிவாரணி. ஆபரேஷன் செய்யவேண்டிய அவசியம் இல்லை.

ஸ்டாகிஸ்ட்டுகள் :

தாதா & கம்பெனி, 52, நைனியப்ப நாய்க்கன் தெரு, மதராஸ்.

காரர்களுக்கு என்ன் வந்து விட்டது! தகுந்த காரணம் இருந்தும் என் அவர்கள் அவனைக் கைதி செய்யவில்லை? ஏதோ ஒரு நூதன மந்திர சக்தி ஜெயிலுக்குப் போக விடாமல் அவனைத் தடுப்பதாகப் பயப்பட்டான்.

மனக் குழப்பத்துடன் கொஞ்சதூரம் சென்று ஒரு சினிமாக் கொட்டகையை அடைந்தான். அப்பொழுது தான் ஒரு காக்ஷி முடிந்ததால் ஜனக் கும்பல் உள்ளே போவதும், வருவதுமாக இருந்தது. இரண்டு போலீஸ்காரர்கள் கொட்டகை வாசலில் நின்று பேசிக்கொண் டிருந்தார்கள். அவர்களைக் கண்டதும் கொஞ்சம் சந்தோஷமடைந்தவனாகக் குமரன் ஒரு யுக்திசெய்தான். ஒரு குடிகாரனைப் போல் நடித்தான், ஆடினான், பாடினான், ப்ரமாதமாகச் சத்தம் செய்தான். ஆனால், போலீஸ்காரர்கள் அவனைக் கைதி செய்யவில்லை. "இது ஒரு தீங்கற்ற பைத்தியம். எனக்கு வெகு நாளாக இதைத் தெரியும். இதை நாம் சட்டை செய்ய வேண்டியதில்லை" என்று ஒருவன் மற்றொருவனுக்குச் சொன்னான். இருவரும் சினிமாக் கொட்டகைக்குள் நுழைந்தார்கள்.

குமரன் மறுபடியும் தோல்வி யடைந்தான். போலீஸார் அவனைத் தொடக்கூட மாட்டார்கள்போலும். ஜெயில் வாசம் கிட்டாத மோக்ஷம் போல் தோன்றியது.

கொஞ்ச தூரத்திற்கப்பால் ஆடம்பரமாக உடைதரித்திருந்த ஒரு மனிதன் ஒரு வெற்றிலைப்பாக்குக் கடையில் தாம்பூலம் தரித்துக்கொண்டிருந்தான். புதிய குடை ஒன்று அவன் பக்கத்தில் இருந்தது. உடனே அங்கு சென்று குடையை எடுத்துக்கொண்டு மெல்ல நடந்தான் குமரன். வெற்றிலை போட்டுக்கொண்டிருந்த மனிதன் குமரனைப் பின் தொடர்ந்து,

"என் குடை" என்று கடுமையாக மொழிந்தான்.

"ஓகோ! அது உம்முடையதா? அப்படியானால் ஒரு போலீஸ்காரனைக் கூப்பிட்டு என்னை ஒப்படைப்பதுதானே! உம்முடைய குடையை நான் திருடிவிட்டேனல்லவா? அதோ மூலையில் ஒரு போலீஸ்காரன் இருக்கிறான். அவனைக் கூப்பிடும்" என்று பரிகசிப்பவன்போல் பதிலளித்தான் குமரன்.

குடைச் சொந்தக்காரன் சற்றுத் தயங்கி நின்றான். குமரனும் அப்படியே செய்தான். இப்பொழுதும் விதி தனக்கு விரோதியாக இருக்குமோ என்று கவலையுற்றான். போலீஸ்காரன் இருவரையும் கூர்ந்து கவனித்தான்.

குடைக்காரனுக்குக் கொஞ்சம் அசடு தட்டிற்று. "இந்... இந்தமாதிரிக் கைத்தவறுதல்கள் ஏற்படுவது சகஜம். அது உன்னுடைய குடையாயிருந்தால் என்னை மன்னிக்கும்படி கேட்டுக்கொள்ளுகிறேன். சற்று முன்புதான் ஒரு டிராம் காரில் 'அதைக் கண்டெடுத்தேன்" என்றான்.

"அதெதற்கென்ன சந்தேகம். அது என்னுடையதுதான்" என்றான் குமரன்.

குடைக்காரன் மெல்ல நழுவினான். தனக்கு வேலை ஒன்றும் இல்லையென்பதை யுணர்ந்த போலீஸ்காரன் அவ்விடம் விட்டு நகர்ந்தான். குமரனும் கொஞ்சதூரம் சென்று வலதுபக்கம் திரும்பித் தங்கசாலை வீதியில் நுழைந்தான். குடையை முறித்து மிகுந்த கோபத்துடன் ஒரு சந்தில் எறிந்தான். தன் விதியை நொந்துகொண்டான். போலீஸ் வர்க்கம் முழுவதையும் சபித்தான். வலுவில் வந்து அவர்கள் கைகளில் சிக்கிக்கொள்ள விரும்பிய அவனைக் குற்றமே செய்யக்கூடாத ஒரு மகான் என்று கருதினார்கள் போலும்.

கொஞ்ச தூரம் சென்று ஒரு பெரிய அழகிய கட்டிடத்தின் முன் நின்றான். அது ஜெயினர்கள் கோவில். பல ஜனங்கள் அங்கே கடவுளைத் தொழுதுகொண்டிருந்தார்கள். ஆகாயத்தில் சந்திரன் ப்ரகாசித்துக் கொண்டிருந்தது. ஜனநடமாட்டமோ, வண்டிகளின் போக்கு வரத்தோ அதிகம் இல்லாததால், எப்பொழுதும் இல்லாத ஒரு அமைதிநிலவியிருந்தது. நடையினாலும், ஏமாற்றத்தாலும் களைப்பையும் மனச்சோர்வையும் அடைந்திருந்த குமரன் தெருப்படிகளில் ஒன்றின்மேல் உட்கார்ந்தான்.

உட்கார்ந்திருந்த இட விசேஷத்தாலோ என்னமோ, அவன் மனத்தில் ஒரு புதிய நல்லுணர்ச்சியும் சுபாவத்தில் ஒரு மாறுதலும் ஏற்பட்டது. தான் இதுகாறும் நடத்திவந்த தீய வாழ்க்கையை வெறுக்கலானான். இந்தப் புதிய உணர்ச்சி தன் கொடிய விதியை எதிர்த்துப் போராடும்படி அவனைத் தூண்டியது. தான் விழுந்த படுகுழியிலிருந்து கரையேறித் தூய வாழ்க்கை நடத்துவதென்று தீர்மானித்தான் ஏதாவதொரு வேலையிலமர்வதென்று நிச்சயித்தான். அவனுக்குத் தெரிந்த ஒரு வியாபாரி முன்பு ஒரு தரம் அவனுக்கு வேலை தருவதாகச் சொல்லி யிருந்தார். நாளையே அவரைத் தேடிப் பிடித்து, வேலையைத் தரும்படி கேட்பதென்று முடித்தான். தீய வழக்கங்களை அறவே ஒழித்து உலகத்தில் தானும் ஒரு சத்புருஷனாக விளங்கவேண்டும் என்று பலத்த அவாக் கொண்டான்.

யாரோ அவனைத் தட்டியது போல் இருந்தது. கண்களை விழித்துத் தலையைத் தூ... கினான். எதிரே ஒரு போலீஸ்காரன் நிற்பதைக் கண்டான்.

போலீஸ்காரன் "இங்கே என்ன செய்துகொண்டிருக்கிறாய்" என்று அதிகாரத்துடன் கேட்டான்.

"ஒன்றுமில்லை" என்றான் குமரன்.

"அப்படியானால் என்னுடன் வா" என்றான் போலீஸ்காரன்.

"யாதொரு ஜீவனோபாயமும் ... சந்தேகாஸ்பதமான ... திரிந்துகொண்டிருந்ததற்காக உனக்கு மூன்று மாதக் காவல் தண்டனை விதிக்கிறேன்" என்றார் மாஜிஸ்டிரேட் மறுநாள்.

* * * *





ஸோல்ஜர் உருவம் இல்லாத டின் பிளிட் அல்ல.

தென்னிந்தியாவிற்கு சோல் டிஸ்டிரிபியூட்டர்கள்:—
டி. டி. கிருஷ்ணமாச்சாரி, 11-14, அரமனைக்காரத்தெரு, மதராஸ்.

"குஜராத்சமாச்சார்" (தினப் பதிப்பு)
"பிரஜாபந்து" (வாரப் பதிப்பு)

[1898-ல் ஸ்தாபிக்கப்பட்டவை]

குஜராத்தில் பிரபல்யம் வாய்ந்தவை. ஆமதாபாத்தினின்று பிரசுரிக்கப்படுபவை.

குஜராத்தில் உங்கள் வியாபாரம் பெருக வேண்டுமானல்
**இப்பத்திரிகைகளில் விளம்பரஞ் செய்யுங்கள்.**
ஆங்கிலத்திலேயே கடிதங்கள் எழுதவேண்டும்.

Manager, Gujarat Samachar & Praja Bhandhu
AHMEDABAD

தமிழன்பர்களுக்கு ஓர் நல்விருந்து!
புதுமைக்கவி ஸ்ரீ பாரதியாரின் நூல்களைப் படித்து
ஆனந்தமடையுங்கள்

| | | |
|---|---|---|
| 1. கவிதைகள் (8-பாகங்கள்) | ரூ. | 2—8—0 |
| 2. வசனங்கள் (6-பாகங்கள்) | ,, | 2—0—0 |
| 3. கதைக்கொத்து | ,, | 0—8—0 |
| 4. பகவத்கீதை | ,, | 0—8—0 |
| 5. கட்டுரைகள் பகுதி 1 தத்துவம் | ,, | 0--10--0 |
| ,, ,, 2 மாதர் | | 0—8—0 |
| ,, ,, 3 கலைகள் | ,, | 0—8—0 |
| ,, ,, 4 சமூகம் | ,, | 0--12- 0 |
| **6. Bharathi and his works** by Mr. C Visvanathan, Brother of Bharathi | | 0 4 0 |

பாரதி பிரசுராலயம்,
திருவல்லிக்கேணி, சென்னை.



ஜகத்ரக்ஷக
ஸ்ரீ ஷண்முக யந்திரம்
125.6600.ஜனங்கள் போற்றுவது
பரீக்ஷை வெற்றி, ஜீவன விருத்தி, சொற்பன மிரட்சி, சத்துரு அடக்கம், வழக்கு ஜெயம், புத்திர விருத்தி, குடும்ப ஒற்றுமை, நோய்பேய் ஒழிதல், யந்திரம் 1க்கு ரூ 2.
மாந்திரீக மருத்துவ ஆபீஸ்,
வாலாஜாபாத், P.O, S.I.R. சென்னை.

# ஜோதிர் மண்டலம்

## ஈஸ்வர வருஷம்—வைகாசி மாதம்

(ஸ்ரீமான் பி. ஸ்ரீநிவாஸவரதன் எழுதியது.)

இப்பக்கத்திலுள்ள நக்ஷத்திர மண்டலம், இம்மாதம் இராக்காலத்தில் சென்னையில் நமக்குத் தென்படும் நக்ஷத்திரக் கூட்டங்களைக் காட்டுகிறது. படத்திலுள்ளபடியே முதல் தேதியன்று (14-5-37) இரவு 10-30-மணிக்கும், 15-ம் தேதியன்று (28-5-37) இரவு 9-35-மணிக்கும், 31-ம் தேதியன்று (13-6-37) இரவு 8-32-மணிக்கும் இக்கூட்டங்களை நாம் காணலாம். சென்னை தவிர மற்ற இடங்களுக்கும் இதை உபயோகப்படுத்தலாம். சென்னைக்கு வடக்கே இருக்கும் ஊர்களுக்கு இப்படத்தை உபயோகப்படுத்த வேண்டுமானால், வடக்கே அடிவானத்தருகே சில நக்ஷத்திரங்கள் அதிகமாகவும், தெற்கடிவானில் சில நக்ஷத்திரங்கள் மறைந்தும் இருக்கும். நக்ஷத்திரங்கள் ஒவ்வொன்றும் ஒவ்வொரு இரவும், முன்னிரவைவிட நான்கு நிமிடங்கள் சீக்கிரமாகவே உதயமாகின்றன. ஆதலால் இன்று இப்படத்திலுள்ளபடி நக்ஷத்திரங்கள் இரவு 10-30-மணிக்குத் தென்பட்டால் நாளைக்கு 10-26-க்கு அப்படியே தெரியும். இம்மாதிரியே நாம் எந்தத் தேதிக்குப் படம் எத்தனை மணிக்கு உபயோகப்படும் என்பதைக் கணக்கிட்டுக் கொள்ளலாம்.

படத்தை உபயோகிக்க நாம் எத்திசையை நோக்கி நிற்கிறோமோ, அத்திசை அடிபாகமாக வரும்படிப் படத்தைத் திருப்பி வைத்துக்கொள்ள வேண்டும். அப்பொழுது நமக்கு எதிரில் தெரியும் முக்கிய நக்ஷத்திரங்களைப் படத்தில் அடிக்கோடு முதல் நடுவரையில் காணலாம். படத்தின் நடுவே மத்திய ஆகாயம் நமக்கு வல இடப்புறம் இருக்கும் கூட்டங்களை முறையே வல இடப்புறங்களில் படத்தில் காணலாம்.

இம்மாதம் மேலே குறிப்பிட்டுள்ள நேரங்களில் ஆகாய கங்கையின் பிரவாகம் வடகிழக்கு முதல், தென்மேற்கு வரை, வில்போல் வளைந்து, அடிவானத்தையொட்டினாற்போலவே பாய்கிறது. அது முறையே இராஜாளி, தனுசு, விருச்சிகம், லூபஸ், சென்டாரஸ், தென் சிலை முதலிய கூட்டங்களிடையே பாய்ந்து, கடைசியில் ஆர்கோநேவிஸ் கப்பலுடன் தென்மேற்கடிவானத்தையடைகிறது. சென்டாரஸ் கூட்டத்திற்குக் ·✗ கிழக்கே, இரு பிளவாகத் தோன்றும் இப்பிரவாகம் ஒளிமிகுந்து அழகுடன் விளங்குகிறது. தனுசுக் கூட்டத்தில் இதன்பிரகாசம் உன்னதத்தை யடைகிறது.

### நக்ஷத்திர மண்டலங்கள்

கடகம், சிம்மம், கன்னி, துலாம், விருச்சிகம், தனுசு, முதலிய இராசிக் கூட்டங்கள் மேற்கு முதல் தென் கிழக்கு வரை முறையாக ஆகாயத்தில் மேற்குறித்த மணிகளில் அமைந்திருக்கின்றன. கீழ்வானில் முன்னிரவில்கோடைக் கால அறிகுறியாகிய துலாம்-விருச்சிக-தனுசுக் கூட்டம் மிகவும் ஒழுங்குடன் விளங்குகின்றன. துலாம் மிகச் சிறிய கூட்டம். ஆனால் விருச்சிகத்தின் அமைப்பும், தனுசின் பிரகாச நக்ஷத்திரங்களின் ஒளியும் நம் மனதைக் கவர்கின்றன. மேற்கே ஆகாயத்தின் சிம்மாதிபதி இன்னும் கொஞ்ச நேரத்தில் அடிவானத்தை யடைந்துவிடும்.

வடக்கே துருவனும், அதன் மண்டலமும் நமக்கு நன்கு விளங்குகின்றன. துருவனிடமிருந்து நமக்கு ஒளி வந்துசேர சுமார் 65 வருடங்கள் ஆகின்றன. வடமேற்கே ஸப்தரிஷிகள் வீற்றிருக்கின்றனர். இவைகளிடையே துருவனின் காவற்காரனை அசுரனும் கம்பீரமாகத் தோன்றுகிறான். வடமேற்கே ஸப்தரிஷிகளைத் தவிர வேறு முக்கிய கூட்டம் எதுவும் இல்லை. வடவானத்தின் முக்கிய நக்ஷத்திரமாகிய 'வீகா' நக்ஷத்திரம் வடகிழக்கேகாணப்படுகிறது. வடகிழக்கே வீகாவினருகில் அம்சம் பறந்து வருகிறது. பூட்ஸ் நேர் வடக்கேயும் கிரீடமும், ஹெர்குலீஸும் வடகிழக்கேயும் காணப்படுகின்றன. பூட்ஸ் முக்கிய நக்ஷத்திரம் 'ஸ்வாதி' இது 'ஆரஞ்சு' வர்ணத்துடன் பிரகாசிக்கிறது. இது ஆகாயத்தில் ஒரு நிமிஷத்திற்குச் சுமார் 12,000 மைல் வீதம் வேகமாகப் பாய்ந்து கொண்டிருக்கிறது. ஆனாலும் நமக்








குழந்தைகளின் நோயெனும்
இருளை நீக்க வந்துள்ள

பாஸ்கரனின வரப்ரசாதம்

நோயினால் வருத்தமுறும குழந்தைகளை நோயினின்றும் மீட்டு ஆரோக்யத்தைப் பெருக்கச் செய்வது "பால பாஸ்கர"

குழந்தைகளைப் பீடித்து வருத்தமுறச் செயயும் வியாதிகளில ஈரல் குலைக்கட்டி என்னும் வியாதிகளே தக்க சிகிச்சையின்மையால் உயிருக்கே கேடுவிளைவிக்கின்றன. இவ்வியாதிகளை எந்நிலைமையிலும் தடுத்து குணத்தைக் கொடுக்க வல்லதென நிரூபிக்கப்பட்டுள்ள ஔஷதம் "பால பாஸ்கர" இதர ஔஷதங்களால் பயனற்றுப் போன விடங்களில் ஆச்சர்யத்துடன் பலனைத் தருவதெனப் போற்றப்படுவது.

**பால பாஸ்கர**

குழந்தைகளின்
ஈரல் குலைக்கட்டிகளுக்கு
**அற்புத நிவாரணி.**

**ஆயுர்வேதாஸ்ரமம்,**
151 கோவிந்தப்ப நாய்க்கன் வீதி,
தபால் பெட்டி 287, மதராஸ்.

ஏஜன்டு:
மெஸர்ஸ்: அமரசந்த், சோபா சந்த்.
கெமிஸ்ட்ஸ், மதராஸ்.

கும் அதற்குமிடையேயிருக்கும் பல்லாயிரக் கணக்கான மைல்களால் நமக்கு ஸ்வாதி அமைதியுடன் ஒரே இடத்தில் இருப்பதாகக் காணப்படுகிறது. பாம்பும், பாம்பாட்டியும் கிழக்கே உன்னத ஸ்தானத்தில் வீற்றிருக்கின்றன.

தெற்கே ஹைட்ரா அழகுடன் தோன்றுகிறது. ஆர்கோ நேவிஸ் அடிவானத்தையடைந்துவிட்டது. ஸென்டாரஸ் நேர் தெற்கே காணப்படுகிறது. இவைகளினிடையே தென்வானத்தின் மிக அழகிய சிறு கூட்டமாகிய 'தென் சிலே' பிரகாசிக்கின்றது.

## வைகாசிமீ கிரஹங்களின் நிலே

புதன்:—சென்றமாதம் கடைசிவாரம், 29-ம் தேதியன்று புதன் சூரியனுடனேயே உதயமாகி அஸ்தமித்தது. அப்பொழுது சூரியனின் பிம்பத்தின்மேல் ஊர்ந்து செல்வதாகவும் தோன்றியது. அதற்குப் பிறகு இக்கிரஹம் சூரியனுக்கு முன்னகவே உதயமாகி விடுகிறது. இம்மாதக் கடைசியில் புதன் சுமார் விடியற்காலே 4-10 மணிக்கு—அதாவது சூரிய உதயத்திற்கு சுமார் 95 நிமிடங்கள் முன்னதாகவே—உதயமாவதால், இதைக்கீழ் வானத்தில் பார்க்கமுடியலாம். இம்மாதம் 25-ந் தேதியன்று (7-6-37) புதன் மேஷக்கூட்டத்தைவிட்டு ரிஷபத்திற்கு மாறுகிறது. இம்மாதம் 11-ந் தேதியன்று புதன் வக்ரத்யாகமடைகிறது.

சுக்கிரன்:—சூரியன் உதயத்தைத் தெரிவிப்பதுபோல், சுக்கிரன் அழகிய பிரகாசத்துடன் விடியற்காலேயில் தோன்றுகிறது. இது மாத முதலில் விடியற்காலே 3-30 மணிக்கும், மாதக்கடைசியில் 2-56 மணிக்கும் உதயமாகிறது. சூரியன் வருகையைத் தெரிவிக்கும் தூதனைத் தோன்றும் இக்கிரஹம் இம்மாத முதலில் மீனத்திலும், 18-ம்தேதிக்குப் பிறகு மேஷத்திலும் சஞ்சரிக்கிறது. இம்மாதம் 11-ம்தேதியன்று (24-5-37) சுக்கிரன் அதிப்பிரகாசத்தையடைகிறது. சென்ற மார்ச்சு 12-ம்தேதியன்று மேற்கே பிரகாசித்தபொழுது இதற்கிருந்த ஒளியில் சிறிது இப்பொழுது குறைந்திருந்த போதிலும், கீழ்வானத்தில், அமைதி மிகுந்திருக்கும். விடியற்காலேயில் இக்கிரஹத்தின் அழகிய தோற்றமும், ஒளியும், எவ்வித ஆகாயக் காக்ஷியினுலும்தோற்கடிக்க முடியாது.

குஜன்:—மாத முதலில் குஜன் விருச்சிகத்தில் வக்ரீயாய் இருக்கிறுன். இக்கிரஹம் சூரிய அஸ்தமனத்திற்கு முன் கிழக்கே உதயமாகி விடுகிறது. ஏறத்தாழ இரவெல்லாம் இக்கிரஹம் பிரகாசிக்கிறது. தேளின் தலேப்பாகத்தில் அழகுடன் விளங்குவதைக் காணலாம்.

குரு:—இம்மாதம் முதலில் குரு மகாக்கூட்டத்தினிடம் அணுகிவிட்டது. ஆயினும், 2-ம் தேதியன்று வக்ரிக்கஆரம்பித்து விடுகிறது. மாத நடுவில் இரவு 10 மணிக்கு உதயமாகி இரவெல்லாம் பிரகாசிக்கிறது.

சனி:—மீனக் கூட்டத்தில் மீனின் வால்பாகத்தில் காணப்படுகிறது.

உரானஸும், நேப்டியூனும்:- முறையே மேஷத்திலும், சிம்மத்திலும் ஊர்ந்து வருகின்றன.

சந்திரன் ஆகாயத்திலுலவி வருகையில்,கீழ்க்கண்ட தேதிகளில் கீழ்க்கண்ட க்ரஹங்களினருகில் இருக்கும்.

மேமீ
24௳— குஜனருகில்
29௳— குருவினருகில்
ஜுன் மீ
4௳— சனியருகில்
5௳— சுக்கிரனருகில்
7௳— புதனருகில்

இம்மாதம் 26-ம் தேதி (8-6-1937) ஒரு பூர்ண சூரிய க்ரஹணம் சம்பவிக்கிறது. ஆனல், இது நமக்குத் தெரியாது. பஸிபிக் மஹா சமுத்திரத்தில் சில பாகத்திலிருந்தும், வட அமெரிக்காவின் தென் கோடியிலும், தென் அமெரிக்காவின் வடகிழக்குப் பாகத்திலிருந்தும் பார்சுவமாகவும் தென்படும்.

ஜோதிடத்தில் பிரியமுள்ளவர்கள்பொருட்டு, இம் மாதத்திய இராசி சக்கரத்தைக் கீழே கொடுத்திருக்கிறேம்.

ஈஸ்வர வருஷம் - வைகாசி மாதம் - 15௳ - சூரிய உதயம்.

| சனி | புதன் சுக்கிரன் | சூரியன் கேது | |
|---|---|---|---|
| | 1௳—ரிஷப—ரவி (0-46)<br>10௳—மேஷ—சுக்கிரன்<br>23௳—துலா—குஜன் (வக்ரீ)<br>26௳—ரிஷப—புதன் | | |
| குரு | | | |
| | குஜன் ராகு | | |

# கிராமபோன் சங்கீதம்

## பிராட்காஸ்ட் புது வெளியீடு

——:[*]:——

மே மாத பிராட்காஸ்ட் கிராமபோன் ரிகார்டுகள் வெளியீட்டில் மிகவும் அரிய ரிகார்டுகள் அடங்கியிருக்கின்றன. செம்பை வைத்தியநாத பாகவதர் பைரவி ராகத்தில் "சேதுலார ஸ்ருங்காரமு" என்ற கீர்த்தனத்தைக் கொடுத்திருக்கிறார். இரு பக்கங்களில் பாடப்பட்டுள்ள இந்தப்பாட்டு மிக இனிமையாக விருக்கிறது. ஸ்ரீமான் பாகவதரின் சாரீரம் கணிப்பாக விருக்கிறது. சௌடய்யாவின் பிடிலும்,:ராமதாஸ் ராவின் மிருதங்கமும் பக்க வாத்தியங்கள். இவை ஏற்ற முறையிலிருக்கின்றன. பாட்டின் கடைசியில் கொடுக்கப்பட்டிருக்கும் ஆவர்த்தனம் நன்கு சோபிக்கின்றது. ஒவ்வொருவரும் விரும்பிக் கேட்கக்கூடிய இந்தப் பாட்டின் ரிகார்டை கிராமபோன் சங்கீத அபிமானிகளுக்கு நாம் சிபார்சுசெய்கிறேம்.

கும்பகோணம் ராஜமாணிக்கம்பிள்ளை தமது பிடிலில் பேகடை ராகத்தில் "ஸ்வாமிகி சரி" தன்யாசியில் "சங்கீத ஞானமு" என்ற கீர்த்தனங்களைக் கொடுத்திருக்கிறார். 'பிடில் பேசுகிறது' என்று கூறுவது மிகையாகாது. இந்த ரிகார்டு சங்கீதம் ஒரு தனி இனிமை பெற்றிருக்கிறது.

மன்னார்குடி ராஜகோபால் பிள்ளை காஹரப்பிரியா ராகத்தில் "பக்கல நிலபடி" என்ற தியாகராஜகீர்த்தனத்தை ஒரு ரிகார்டில் பாடியிருக்கிறார். ஆரம்பத்திலுள்ள ராக ஆலாபனம் போற்றத்தக்க முறையில் அமைந்திருக்கிறது. பாட்டும் அதேபோல் மனதை ஆகர்ஷிக்கிறது.

குன்னக்குடி வெங்கட்ராமய்யர் ஒரு பக்கத்தில் காஹரப்பிரியாவில் 'தில்லேதில்லே' என்ற கீர்த்தனத்தைக் கொடுத்திருக்கிறார். இத் தமிழ்ப்பாட்டு மிக மேன்மையாகப் பாடப்பட்டிருப்பதுடன் பாட்டின் பதங்களும் தெளிவாகக் கேட்கின்றன. இவர் மற்றொரு பக்கத்தில் ஜின்ஜூடி ராகத்தில் "ஸர்வம் பிரம்மமயம்" என்ற பாட்டைப் பாடியிருக்கிறார் இது முற்றிலும் ஸம்ஸ்கிருத பதங்கள் அடங்கியது; பஜனை வகையில் சேர்ந்தது. ஒரேயடியாகக் கீர்த்தனங்களேயே கேட்டுக்கொண்டிருக்கையில் அதற்கு மாருகவிருக்க இந்த ரிகார்டு மிகவும் பிரயோஜனகரமானது. ஆகையால் இது விரும்பத்தக்கது.


வஜ்ர சரீரத்தைத் தருவது

NERVINUS
(WITH GOLD)
Your only Chance.



The Best Tonic of the Day

நர்வினஸ்
(தங்கம சேர்ந்தது)

சிறந்த பலவிருத்தி டானிக்
ஆண்மையும், ஊக்கமும் பெற இதுவே சிறந்த சாதனம்

பிரபல டாக்டர்கள் ஒருமிக்கப் புகழ்கிறார்கள்.

வெளிப்புறத்தில் கஸ்தூரி லினமெண்டுடன் உபயோகித்தால் நீங்கள் புருஷ சக்தி ததும்பி நிற்பீர்கள். நர்வினஸ்-1 மாத உபயோகத்திற்கு புட்டி 1-க்கு ரு. 5; லினமெண்ட்-ரு. 2—8; இரண்டும் சேர்ந்து ரு. 7. வி. பி. சார்ஜ் தனி. ஆர்டர்களும் கடிதங்களும் ஆங்கிலத்திலேயே.

BEHAR CHEMICAL WORKS, BHAGALPUR

ஸ்டாக்கிஸ்டுகள்:
அப்பா & கம்பெனி & தாதா & கம்பெனி மதராஸ்.



"நஞ்சன்கூடு பல்பொடி" பாக்டெரியின் மற்றும் சில மருந்துகள்—

எவ்வித ஜுரங்களுக்கும் ஜ்வரோக ஓர் அரிய ஔஷதம்
ஜீரகம் உற்சாகம் ஊட்ட ஜீர்சீப் அஜீர்ண. பித்தசமனி
குழந்தைகளுக்கு பாலக்ஸ் சுகபேதியாக

திருநெல்வேலி, மதுரை, திருச்சி, தஞ்சாவூர், கும்பகோணம், சேலம், ஈரோடு, திருப்பூர் டிப்போக்களிலிருந்து பெற்றுக்கொள்க.

சிறுவர் பகுதி

# துப்பறிந்த மன்னன்

(கௌரீ குமாரன்)

நல்ல மாலை நேரம். வெகுதூரம் நடந்து வந்த அலுப்பினால் சன்யாசி ஒருவன் பிரகாசபுரி நகருக்குத் தள்ளாடியபடியே வந்துகொண்டிருந்தான். அப்புது மனிதனை காண ஜனங்கள் ஏராளமாகக் கூடினர். யாசகம் செய்ய கப்பரை ஒன்று அவனிடமிருந்தது. தலைமயிரெல்லாம் ஒன்றோடு ஒன்று சேர்ந்து சடைகளாகத் தொங்கின. பார்வைக்கு சிவக்கொழுந்தாய் தோன்றினான். அந்த நகர்வாசிகள் மிக பக்தியுடன் விசுவா[illegible]ம் காட்டினர். பொன் வெள்ளி காசுகள் கொடுத்தனர். தன்னிடம் வருபவர்கள் யாவருக்கும் சன்



யாசி ஹிதோபதேசம் செய்துவந்தார். துறவறத்தின் மேன்மையைத் துலக்கினார். நாளடைவில் சன்யாசியின் பெயர் நாடெங்கும் அடிபட்டது. கிராக்கி அதிகரிக்க அதிகரிக்கச் சாமியாரின் வருமானமும் விர்ரென்று ஏறியது.

வெளிப் பார்வைக்கு உண்மைத் துறவிபோல் தோன்றினாலும் விஷயத்தில் அப்படிக்கில்லை. வடிகட்டின உலோபியாக இருந்ததினால் தனக்குக் கிடைத்த பணத்தைச் சன்மார்க்கங்களில் செலவிடப் பிரியமில்லை. சொந்த உடல் நலத்தைக்கூடப் பெரிதாய் நினைக்கவில்லை. பணம் சேர்ந்தால் போதுமென்ற ஏக்கமே சாமியாரின் ஹிருதயத்தில் குடிகொண்டிருந்தது.

தினம் இராப்பொழுது எப்போது வருமென்று எதிர்பார்த்துக்கொண்டிருப்பான். கொடிய காரிருளையும் லட்சியம் செய்யான். காட்டிற்குச் செல்வான். அன்று கிடைத்த காசுகளை மரத்தடியில் குழி தோண்டிப் புதைத்து வைத்துவிட்டு வருவான்.



எக்காரியம் தவறினாலும் புதையலை விருத்தி செய்வதில் என்றும் தவறுவது கிடையாது. சாமியாரின் உயிர் அம்மரத்தடியில்தான் இருந்தது. இந்த இரட்டை வாழ்வு பல மாதங்கள்வரை செவ்வனே நடந்து வந்தது.

பட்டப்பகல்போல் நிலா காய்கிறது. சாமியார் மரத்தடியைச் சேர்ந்தார். குழியைப் பார்த்தார். ஐயோ என்றார். எவ்வளவு நேரம் மயங்கிக் கிடந்தோமென்பது அவருக்குத் தெரியாது. எழுந்தார். அங்குமிங்கும் ஓடினார். நெருப்பில் விழுந்த புழுபோல் துடியாய்த் துடித்தார். ஹிருதயம் வெடித்தாற்போலிருந்தது. அப்படியே உட்கார்ந்தார். மிரளமிரள விழித்தபடியே இருந்தார்.

கதிரவன் கீழ் கடலிலிருந்து கிளம்பவே, மறுதினம் ஆரம்பமானது. ஒரு முடிவுடன் நகருக்குள் கிளம்பினான். அத்தேச அரசனிடம் தனது குறையை சொல்லி பொருளையும் குற்றவாளியையும் கண்டுபிடிக்க வேண்டு



மென்று கேட்டுக்கொண்டான். எட்டு தினங்களில் நியாயம் கிடைக்கவில்லையானால், தான் தற்கொலை செய்துகொள்ள முடிவு கட்டிவிட்டதாகத் தெரிவித்துக்கொண்டான்.

நியாயவிரதன் என்ற அவ்வரசன் நீதி தவறாது குடிகளைப் பேணும் தன்மை கொண்டவன். சன்யாசிக்குச் சமாதானம் சொல்லி அனுப்பிவிட்டு இக்களவு பற்றி யோசித்தான். சாட்சி அற்ற சம்பவம். ஆனால் நம்ப வேண்டும். முடிந்த மட்டும் துப்பறிந்து பார்ப்

சமையலறையில் எறும்புத் தொல்லையா? பிளிட் பவுடர் அவற்றைக்கொல்லும்
புகழ் பெற்ற பிளிட் காரரின் தயாரிப்பு.



378 டிசைன் 64 பக்க நகை கேட்லாக்.
பி. கோபாலசுவாமி நாயுடு & சன்ஸ்
பறங்கிமலை P. O. (சென்னை)

உயர்ந்த ரோமசங்காரி


வேண்டா. ரோமத்தை உடனே நீக்கி சருமத்தை மிருதுவாக்கி பாதுகாக்கின்றது. பெரிய குடும்பங்களால் உபயோகிக்கப்படுகின்றது.
பெரியடியூப் அணா 12; சிறிய டியூப் அணா 6
பெரிய பாட்டில் அணா 14
சிறிய பாட்டில் அணா 10
வி. பி. வேறு. எங்கும் விற்கப்படுகின்றது.
Agents: Shivlal & Co., Bombay.



உயர்ந்த
வைரங்கள்
**T. R.**
**ஜோஷி & சன்ஸ்,**
**Diamond Merchants,**
38, ஏகாம்பரேசுவரர் அக்ரஹாரம்
பி. டி. மதராஸ்.

மோ
கி
னி
க்
கு



கவலையில்லை குறையுமில்லை
ஒரே ஆனந்தமே,
நவயௌவன விலாஸம்
உங்களுக்கு குறை ஏன்?

அவளுக்கு

பூர்ணரோக்கியம்!
அது உங்களுக்கில்லை

ஸ்திரீக்கு ஆரோக்கியமிருந்தால் எல்லாம் ஆனந்தமே!! கிரஹ யஜமான்யம், சந்தான சம்பத்து, பெருமை இவைகளெல்லாம ஆரோக்கியமிருந்தால்தான் அமைந்திருக்கும

ஆரோக்யம்—ஸ்திரீகளின ஆரோக்கியம் முக்கியமாக கர்ப்ப கோசத்தின் ஸ்திதியை ஒட்டியிருக்கிறது. கர்ப்பகோசத்தில் யாதொரு தோஷமுமில்லாதிருந்தால் ஸ்திரீக்கு அந்த ஆனந்தமும், அந்த சௌந்தர்யமும், அந்த நவயௌவன விலாஸமும சந்தான சோபை எல்லாம அமையும்

தேக்ம அநாரோக்யமாய் விட்டதென்றும், குணப்படாதென்றும் கைவிடுபவர்கள் பாரோ! அவ்வித மலைப்பு அனவசிய ஆனந்தம் உங்கள் அருகாமையிலேயே இருக்கிறது.

**லோத்ரா**
ஆரோக்யப் பிரதாயினி
கேஸரி குடீரம்—மதராஸ்.

**G. கன்னையா கம்பெனி**
இரும்புப்பெட்டி வியாபாரம்.



137. பிராட்வே மதராஸ்

போம் என்ற முடிவுடன் கிளம்பினன். காட்டிற்குச் சென்று காலியாயிருந்த குழியையும் அதைச் சுற்றி உள்ள இடத்தையும் கவனித்துவிட்டு அரண்மனை திரும்பினன்.

இரண்டு தினங்கள் சென்றன. மன்னனுக்குக் கொடிய தலைநோய் கண்டிருப்பதாகச் செய்தி பரவியது. நகரிலுள்ள எல்லா வைத்தியர்களும் உடனே அரண்மனை வந்து சேரும்படி ராஜாங்க உத்தரவு பிறப்பிக்கப்பட்டது. அரசருடைய நோயைச் சொஸ்தம் பண்ணிப் பெரும்பொருளும் புகழும் சம்பாதிக்க பல வைத்தியர்கள் கும்பல் கும்பலாக வந்து கூடிவிட்டனர்.

அரசன் வந்தான். யாவரும் அடிவணங்கினர். தனக்கு எவ்வித நோயுமில்லை என்றும் ஆனல், ஒவ்வொரு வைத்தியரும் அவரவர் பார்வையில் சென்ற ஒருவார காலமாக சிகிச்சை பெற்று வரும் நோயாளிகள் யாவர் என்றும் அவர்களுக்குக் கொடுத்து வரும் மருந்தின் விவரம் எது என்றும் சொல்ல வேண்டுமென்றும் உத்திரவிட்டான். எந்த வைத்தியராவது இதில் உண்மையை மறைத்தால் தூக்கு மேடைக்குப் போகவேண்டுமென்று அறிவிக்கப்பட்டது. ஒவ்வொரு வைத்தியராகத் தங்களது விஷயங்களை ஒப்புவித்துக் கொண்டே வந்தார்கள்.

'ஞானமுத்து' என்ற வியாபாரிக்கு உடம்பில் ஊரல் நோய் கண்டிருந்தது. நாகவல்லி செடியின் இலையை இடித்து சாரை உபயோகிக்கும்படி சொன்னேன்' என்று அறுபத்திமூன்ருவது வந்த மருத்துவன் கூறினன். இத்துடன் நிறுத்திக்கொண்டு வைத்தியர்கள் யாவரையும் வந்தனோபசாரத்துடன் அனுப்பிவைத்தான்.

வியாபாரி வரவழைக்கப்பட்டான். விசாரணையில் சோலை என்ற வேலையாள்தான் நாகவல்லி இலை பிடுங்கி வந்ததாக வெளியானது. உடனே வேலைக்காரனைக் கைது செய்யப்பட்டான். 'அடே, உனது எஜமானனுக்காக நீ நாகவல்லிச் செடி பிடுங்கச் சென்ற விடத்தில் திருடிய திரவியங்களும் ஆபரணங்களும் எங்கே?' என்று அரசன் அதட்டியதுதான் தாமதம்! சோலை உண்மையைக் கக்கிவிட்டான். இலைகளை பறித்துக்கொண்டிருந்தவிடத்தில் மரத்தடியில் மண் சிறிது கிளறி இருந்ததைக்கண்டதாகவும் சந்தேகத்திஞல் தோண்டிப் பார்த்தபோது அப்புதையல் கிடைத்ததாகவும் வேண்டுமென்று திருடவில்லையென்றும் சொல்லி மன்னிப்பிற்கு மன்ருடிப் பிரார்த்தித்தான்.

பொருள்கள் சன்யாசிக்கு சேர்ந்தன. சந்தர்ப்பத்திஞல் அபகரித்து அதன்மூலம் திருட்டு குற்றத்திற்கு ஆளாகிவிட்டாலும் உண்மையை ஒப்புக்கொண்டதற்காக வேலைக்கார சோலைக்கு மன்னிப்பு கிடைத்தது. மன்னருடைய நுண்ணறிவை யாவரும் மெச்சினர். சன்யாசிக்குப் புத்தி வந்தது. இருந்த செல்வத்தையும் பின்னர் கிடைத்த பணத்தையும் சத்காரியங்களில் செலவழித்தான்.

* * * *

**வருங்கால பலன்**



புராதன சாஸ்திர
ஆராய்ச்சியின் பேரில
அனுபவம் பெற்ற
இருவர் கலந்து
தெளிவுபடக்
கூறுவதாம்.



பண்டிட் M. R. K. மூர்த்தி,
ஜோதிஷ கலா வல்லபர்

பண்டிட் E. S. K. சுவாமி,
ஜோதிஷ தத்வக்கியானி

ஒரு ஜாதகம் கணிக்க ரூ. 1. காரணமுடன கேள்வி 1-க்கு ரூ. 1. ஒரு வருஷ மாதவாரி பலன் ரூ. 2. ஆயுள்வரை பொதுப்பலன் ரூ. 10. ஜாதகமாவது பிறந்த நேரம் அல்லது கடிதம் எழுதும் நேரம் தேவை.
"ஜோதிட கழகம்" 38, தேவராஜமுதலி தெரு, பி. டி. மதராஸ்.

**PASSED MATRIC**

பம்பாயிலிருந்து மிஸ்டர்.......... எழுதுவதாவது: "நான் மெட்ரிக் பரீக்ஷையில் தேறினேன்; இதற்கு தங்கள் "மூலிகை"யே காரணம். சீனியர் காம்பிரிட்ஜ் பரீட்சைக்காக ஒன்று அனுப்பவும்."

"திபேத் மூலிகை"யால் கீழ்க் கண்டவை சித்தியாகின்றன; லாமா யோகியின் வரப்பிரசாதம்.



**வசீகரன்,** ஆண் பெண் இரு பாலருக்கும் இடையில் இன்பமயமான காதலை உடனே விளைவிக்கும். இதை அணிபவர் அதன் ஆச்சரிய சக்தியை விரைவில் அறிவர். விலை ரூபா 3-8-0. 2. **வியாபாரமும், தொழிலும்:**—நிச்சயமான தொழிலபிவிருத்தியும், இலாபமும்சித்திக்கும். விலைரூ.3-8-0 3. **வியாஜ்யங்கள்:**—இதன் சக்தியால் நம்பமுடியாத எவ்விதவியாஜ்யங்களும் ஜெயமாகும். விலை ரூ. 3-8-0 4. **வியாதிகள் :**— முடியாதென்க் கைவிடப்பட்ட சகலவித கொடிய ரோகங்களும் அடியோடு நீங்கும். விலை ரூபா 3-8-0 5. **உத்தியோகம்:**—வேலையில்லாத் திண்டாட்டத்தில் அவதிப்படும் இளைஞருக்கு அவரவர் ஸ்திதிக்குத் தகுந்தபடி உத்தியோகம் கிடைக்கும். சம்பள உயர்வும் உத்தியோக மேன்மையும் நிச்சயம். விலை ரூ. 3-8-0. 6. **பரீக்ஷைகள்:**-எவ்விதப் பரீக்ஷைகளிலும் நிச்சயமாய்த் தேறலாம். விலை ரூபா 3-8-0 7. **சத்ருக்களை ஜெயித்தல்:**—எவ்வளவு அபாயகரமான விரோதிகளும் இதை அணிபவர் முன், முழந்தாளிட்டுப் பணிவர் விலை ரூபா 3-8-0 8. **கிரஹ தோஷம்:**-எல்லாவிதமான கிரஹ தோஷங்களும் சாந்தியாகும். விலை ரூபா 3-8-0. 9. **ஆரோக்யமும், செல்வமும்:**—எளிதில் சித்திக்கும். விலை ரூ. 3-8-0.

**அறிவிப்பு:**—இந்த சாஸ்திரங்களில் நம்பிக்கையுள்ளவர்கள் மாத்திரம் தங்கள் நோக்கம் இன்னதென்பதைக் குறித்து எழுதவும். ஒவ்வொரு நோக்கத்துக்கும் தனிப்பட்ட மூலிகை அவசியம். ஒரு மூலிகையின் விலை ரூபா 3-8-0. தபால் சார்ஜு வேறு ஒரே தடவையில் 3 மூலிகைகள் வாங்கினுல் தபால் சார்ஜ உள்பட ரூ. 9-0-0.

தபால் சார்ஜ் தனி. அணு 8.
**BIJOYA LODGE, (S.W.).**
P. O SALKIA HOWRAH.

**சேலத்தில் முதல் முதல் ஸ்தாபிக்கப்பட்ட நர்சரி தோட்டம்**

3 வருஷத்தில் காய்க்கக்கூடிய ஒட்டுமாஞ்செடிகள், ஒட்டுப்பழ வர்க்கச்செடிகளும் இன்னும் இதர செடிகளும் கிடைக்கும். இங்கிலீஷ் அல்லது நாட்டுக் காய்கறி, இங்கிலீஷ் புஷ்ப விதைகள், 20 சாம்பெல் பாக்கெட் விலை ரூ. 2-10. சாம்பல் பாக்கெட்விலை ரூ. 1-4 கேட்லாக் இனும்.

ச. கோ. இ. காதர்மீரா சாயபு,
ஹெட் நர்சரி தோட்டம், சேலம்.

ஸ்ரீமத் பகவத் கீதை
விலை ரூ. 3.
சுதேசமித்திரன் புத்தகசாலை
சென்னை.



# இந்திய மக்களுக்கு இந்திய தேயிலை பானம்





தேயிலை பானம் அருந்துவோரின் தொகை நாளுக்கு நாள் பெருகிக் கொண்டே வருகிறது. ஜாதிமத பேதமன்னியில் ஒவ்வொருவரும் மென்மேலும் தேயிலையைப் பற்றிப் புகழ்கின்றார்கள். உண்மையாகவே ஆதரிக்கக்கூடிய அறிகுறிகளிருக்கின்றன. இதற்கீடான பானம் வேறெதுவுமில்லையென்று இந்திய மக்களில் புதிதாகத் தேயிலை பானம் செய்ய ஆரம்பித்தவர்களும் உணருகிறார்கள்.

## எங்கள் சித்திர விளம்பர புத்தகம்.

தேயிலை பானத்திலிருந்து பூரண சுகத்தை அனுபவிக்க வேண்டுமானால் அதை பக்குவமாக சரியான முறையில் செய்யவேண்டும். எப்படி என்றறிய விரும்பினால் சரியான முறையில் தேயிலை பானம் செய்ய நீங்கள் சுளுவாய் கற்றுக்கொள்ளக்கூடிய தேயிலை பானம் செய்வதெப்படி என்னும் சித்திர விளம்பர புஸ்தகத்திற்கு உடனே எழுதுங்கள்

இந்த விளம்பரத்தை கத்தரித்து உங்கள் பெயர், விலாஸம், தொழில் முதலியவைகளை குறிப்பிட்டு, இந்திய கமிஷனர், இந்தியன் டீ மார்க்கெட் எக்ஸ்பான்ஷன் போர்ட் தபால் பெட்டி 2172 கல்கத்தா என்று எழுதி அனுப்பினால் இலவசமாக ஒருகாப்பி அனுப்பப்படும்

உலகிலேயே சிறந்தது இந்தியாவில் உண்டாகிற தேயிலையைவிட வேறொன்றுமில்லை. உற்சாகமான மனதையும் ஆரோக்கியமான சரீரத்தையும்பெற இந்தியத்தேச பானமான இந்தியத் தேயிலை பான வழக்கத்தை விடாது பழக்கிக் கொள்ளுங்கள்.



**உண்மையான ஸ்வதேசி சரக்கு - இந்திய தேயிலை**

IK 33 I

Regd No. 2514


டைபாய்ட் ஜுரத்தினால் ஏற்படும் பலவீனம் ஒழிய நல்ல போஷாக்கு வேண்டும்.



டைபாய்ட் நோயினால் உடல் வலுவு ஒடுங்கி விடுகிறது; இரத்தம் சுண்டுகிறது; நரம்புகளின் வலுக் குன்றிவிடுகிறது. இந்த நிலைமை மாறவேண்டுமானால் சாதாரண உணவுமட்டும் போதாது. பலவீனம் நீடித்திருக்குமாகையால், மாலர்ஸ் A. B. C. D. விட்டமின் உணவையும் சேர்த்துக் கொள்ளுங்கள். எல்லா முக்கியமான சத்துக்களும் நிறைந்தது.




**MOLLER'S**
**A.B.C.D. VITAMIN FOOD**

உயர்வகை பார்லி சத்துடன் நேர்த்தியான நார்வீஜியன் காட்லிவர் ஆயிலில் தயாரிக்கப்படுவது, விட்டமின் C நிரம்பிய; ஆரஞ்சுப்பழ ரஸம் மிகுந்தது. குழந்தைகளுக்குப் பாலூட்டும் தாய்மார்களுக்கும், கர்ப்பிணிகளுக்கும் சிறந்தது.

தொண்டைப் புண், உள் நாக்கு வளர்ச்சி நிவர்த்தி



விரைவான, சுலபமான நிவர்த்தி இதுதான். எந்தவிதமான தொண்டைக் கோளாறையும் போக்குவது அயர்டன்ஸ் அயோடைஸ்ட் த்ரோட் டாப்லெட்ஸ் தான். இங்கிலாந்தைச் சேர்ந்த தொண்டை வியாதி நிபுணர் ஒருவரின் முறைப்படி தயாரிக்கப்படுவது.




**AYRTON'S IODISED THROAT TABLETS**

வெட்டை நோயால் கஷ்டப்படுகிறவர்களில் ஆயிரக்கணக்கான பேர்களுக்கு உண்மை ரட்சகனாக விளங்குவது கொபெய்ஸான். இக்கொடிய வியாதியை அகற்றவல்லது இதுவே. வெட்டை நோய் மட்டு மல்லாமல் எல்லா விதமான மூத்திரக் கோளாறுகளையும் போக்கும்.

**COPALSAN**
The most effective remedy for urinary venereal disease




ஜீவசக்தி குன்றி நரம்புகள் மெலிந்திருந்தால் மரோடோன் சாப்பிட்டு ஆரோக்கிய மடையுங்கள்.

பலவிருத்தி டானிக் வகையில் மரோடோனுக்கு இணையானதில்லை. தேகத்திற்கு மீண்டும் புத்துயிரூட்டி, நரம்புகளுக்கு நிரந்தரமாக உரமளிப்பது. விருத்தர்களும் இதைச் சாப்பிட்டு வாலிப ஊக்கத்தைப் பெற்று வாழலாம்.

மரோடோனில் பூரண கிளிஸரோ பாஸ்பேட்ஸ்களும் கிரமமான முறையில் சேர்க்கப்பட்டிருக்கின்றன. பசியின்மை, பலவீனம், இரத்தசோகை, நோயின் பலவீனம் இவற்றால் வருந்துபவர்களுக்கு இது இன்றியமையாதது.



**Marotone – The World's Greatest Tonic**

இவை எல்லா மருந்து ஷாப்புகளிலும் கிடைக்கும்.

மொத்த ஏஜண்டுகள் : சவுத் இண்டியன் மர்க்கண்டைல் கம்பெனி, பார்க் டவுன், மதராஸ்.